# புதிய ஜனநாயகம்

ஜூன் 2015
ரூ.10.00




# 4+3=8
# விடுதலை!

## பெரம்பலூர் கண் பறிப்பு வழக்கு தரும் பாடம்:

# கோர்ட்டு படியேறாதே! தண்டனையை அங்கேயே நிறைவேற்று!!

மே 2 ஆம் தேதி தமிழகம் முழுவதும் கார்ப்பரேட் மருத்துவமனைகள் உள்ளிட்ட தமிழகத்தின் 4000 தனியார் மருத்துவமனைகளைச் சேர்ந்த சுமார் 36,500 மருத்துவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த திடீர் வேலைநிறுத்தத்திற்கான காரணம் ஏப்ரல் 27, 2015 அன்று பெரம்பலூர் ஜோசப் கண் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மருத்துவர் ஜேசுதாசன், பெரம்பலூர் மருத்துவமனையின் நிர்வாகி மருத்துவர் அசோக், நிர்வாக அதிகாரி கிறிஸ்டோபர் தாமஸ் ஆகியோருக்கு திருச்சி குற்ற வியல் நீதிமன்றம் வழங்கிய ஓராண்டு சிறைத்தண்டனை! இந்திய மருத்துவத்துறை வரலாற்றிலேயே தவறாக சிகிச்சை அளித்த குற்றத்துக்காக மருத்துவர்கள் சிறைக்கு அனுப்பப் படுவது இதுதான் முதல் முறை!

குற்றமே செய்திருந்தாலும் மேன்மக்களாகிய தங்களைச் சாதாரண மனிதர்களைப் போல தண்டித்து சிறைக்கு அனுப்பு வதாவது என்ற ஆத்திரத்தின் விளைவுதான் அடுத்த சில நாட்களிலேயே நடைபெற்ற இந்த வேலைநிறுத்தம். ஜெயலலிதா சிறைக்கு அனுப்பப்பட்டவுடனே, தமிழகம் முழுவதும் அ.தி.மு.க.வினர் நடத்திய காலித்தனத்துக்கும், தனியார் மருத்துவமனைகளின் இந்த வேலை நிறுத்தத் திற்கும் பாரிய வேறுபாடு இல்லை.

வேலைநிறுத்தம் செய்த தனியார் மருத்துவமனைகளின் கோரிக்கைகளைப் பாருங்கள். ''மருத்துவமனைப் பாதுகாப்புச் சட்டம் (2008)-இன் படி டாக்டருடைய அலட்சியம் காரணமாகத் தனக்கு பாதிப்பு ஏற்பட்டதாக ஒரு நோயாளி புகார் கூறினால், இன்னொரு மருத்துவ வல்லுநர் அதனை அங்கீகரித்தாலன்றி, குற்றம் சாட்டப்படும் டாக்டர் மீது எப்.ஐ.ஆர். போடக்கூடாது. அப்படியே போட்டாலும் டாக்டர்களைக் கைது செய்வதற்கு எதிராக தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணைப்படி (எண்:220/2008) டாக்டரைக் கைது செய்யக்கூடாது. மருந்துகள் அல்லது மருத்துவக் கருவிகளின் குறைபாடு காரணமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு டாக்டர்களைத் தண்டிக்கக் கூடாது.''

மருத்துவர்களது கோரிக்கைகளை மக்களுக்குப் புரியும் விதத்தில் கீழ்க்கண்டவாறு சொல்லலாம். நோயாளிகள் எனப் படும் ஏமாளிகள், தாலியை விற்றோ, கந்து வட்டிக்குக் கடன் வாங்கியோ பணத்தைக் கொண்டு வந்து, தனியார் மருத்துவ மனை வாயிலில் வரிசையில் நின்று, டாக்டரை 'தரிசனம்' செய்து விட்டு, திருப்பதி உண்டியலில் பணம் போடுவது போல பணத்தைக் கட்டி விட்டு, நோயாளியை உயிருடனோ பிணமாகவோ எப்படிக் கொடுத்தாலும் மறு பேச்சின்றி வாங்கிக் கொண்டு சென்று விடவேண்டும் - இதுதான் இவர்களது கோரிக்கையின் சாரம்.

சிகிச்சையில் சந்தேகம் இருந்தால் புகார் அளிக்கலாம் என்றும், எந்தவித விசாரணைக்கும் டாக்டர்கள் தயாராகவே இருப்பதாகவும் தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலின் முன்னாள் தலைவர் டாக்டர் சி.எம்.கே.ரெட்டி தேனொழுகப் பேசியிருக்கிறார். ஆனால், இந்த யோக்கிய சிகாமணிகள் கடந்த 8 ஆண்டுகளில் பார்வை பறிக்கப்பட்டு கதறிக் கொண்டிருந்த 66 பேருக்கு ஒரு வார்த்தை ஆறுதல்கூட சொன்னதில்லை.

கடந்த 2008-ஆம் வருடம் பெரம்பலூர் ஜோசப் கண் மருத்துவமனையும், பார்வை இழப்பு தடுப்பு மையம் என்ற அமைப்பும் இணைந்து தாங்கள் நடத்தவிருந்த கண் சிகிச்சை முகாமுக்கு ஆள் பிடிக்க, விழுப்புரம் மாவட்டம், கடுவனூர் கிராமத்துக்குச் சென்று, இலவச கண் அறுவை சிகிச்சை என்று ஆசை காட்டி 66 ஏழைகளை வேனில் ஏற்றி பெரம்ப லூருக்கு கொண்டு வந்தனர். உண்மையில் இது இலவச சிகிச்சை அல்ல. 2008-09 இல் மட்டும் மத்திய அரசிட மிருந்து இதற்காக ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்த பணத்துக்குக் கணக்கு காட்டு வதற்காக இவர்களால் பிடித்துக் கொண்டுவரப்பட்ட பரிதாபத்துக்குரிய பலி ஆடுகள் தான் 66 ஏழைகள்.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

66 ஏழைகளின் கண்பார்வையைப் பறித்த குற்றவாளிகள் (இடமிருந்து) மருத்துவர்கள் ஜேசுதாசன், அசோக் மற்றும் நிர்வாக அதிகாரி கிறிஸ்டோபர் தாமஸ்.



புதிய
ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 30 இதழ்: 8

ஜூன் 2015

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

### மீண்டும் முதல்வராக ஜெயா:

# கோலோச்சுகிறது பார்ப்பன மனுநீதி!

ஜெயா - சசி கும்பலுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு என்ற கத்தி தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கும் போதும் ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார். இதை அவரது அரசியல் துணிச்சலாகக் கருத முடியுமா? அப் படித்தான் அவரது பாதந்தாங்கிகள் பலரும் சித்தரிக்கின்றனர். கிரிமினல் குற்றக் கும்பலின் தலைவன் பாலியல் வன்முறையிலோ, வழிப்பறிக் கொள்ளையிலோ ஈடுபடுவதை அவனது துணிச்சலாகக் கருத முடியுமா!

சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து ஜெயா - சசி கும்பலை விடுதலை செய்யும் கர்நாடகா உயர் நீதிமன்றத் தீர்ப்பு வந்த இரண்டே நாட்களில் ஜெயலலிதா பதவி ஏற்கத் துடித்தார். குமாரசாமியின் தீர்ப்பில் உள்ள மோசடிகள் அடுத்த நாளே அம்பலமாகியதால் பதறிப்போன ஜெயா-சசி கும்பல் வாலைச் சுருட்டிக் கொண்டது. மர்ம மாளிகையான போயஸ் தோட்டம் வழக்கம்போலச் சதியாலோசனைகளில் மூழ்கியது. அம்பலப் பட்டுபோய் நாடு முழுக்க நாறிய குமாரசாமியின் தீர்ப்பின் மோசடிகளை அவரையே வைத்து சமாளிக்கும், சரிக்கட்டும் முயற்சியில் சிலநாட்கள் ஈடு பட்டது. அந்த முயற்சியிலும் தோற்றுப்போன நிலையில், விடுதலையான பிறகும் பதவியேற்காமல் கால தாமதப்படுத்துவது மக்களிடையே மட்டு மல்ல, தனது விசுவாச அடிமைகளிடையேகூட அவநம்பிக்கையை ஏற் படுத்திவிடும்; ஆதலால், இருட்டிலே நடக்கும்போது உள்ளுக்குள் உதறலெடுத்த பயந்தாங்கொள்ளி உரக்கப் பாடுவதைப்போல, தனக்குப் பாதகமான அரசியல் நிலைமைகளிலும் தான் தோற்றுப்போய் முடங்கிவிட வில்லை என்று உதார் காட்டிக்கொள்ள பதவியேற்றுள்ளார் ஜெயலலிதா. அதைவிட முக்கியமாக, தான் முதலமைச்சராகிவிட்டால், ஏதாவது அரசியல் சட்டச்சிக்கலை ஏற்படுத்தித் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்றும் நம்புகிறார்.

அவரது எடுபிடிகளான மந்திரிமார்கள் தலைமையில் எடுத்த பால்குடங் களும் தீச்சட்டிகளும் நடத்திய யாகங்களும் ஹோமங்களும் பிரார்த்தனை களும் வேண்டுதல்களும் தற்கொலை உயிர்ப்பலிகளும், எதுவும் ஜெயலலிதாவைக் காத்துவிடவில்லைதான். அவருக்கு வாய்த்த அரசியல் அடிமைகள் என்னவோ நிரம்பவும் விசுவாசிகள்தாம், தான் காலால் இட்டதைத் தலையால் செய்பவர்கள்தாம் என்றாலும் சொத்துக் குவிப்பு வழக்கைப் போல எல்லாவற்றையும் சொதப்பிவிடுகிறார்கள். ஆகவே, தனது பினாமிகளை வைத்து ஆட்சி நடத்துவதைவிட தானே நேரடியாக அதிகாரத்துக்கு வந்து அரசியல் ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் கடைசி முயற்சியில் இறங்கியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி, அரசுத் தலைவர் பிரணவ முகர்ஜி, தலைமை நீதிபதி தத்து போன்ற பார்ப்பனிய சக்திகளின் ஆலோசனையும் பின்புல வாக் குறுதியும் இல்லாமல் ஜெயலலிதா பதவி ஏற்று விடவில்லை. இருந்தாலும், மீண்டும் தண்டனைத் தீர்ப்பு வந்துவிடும் என்ற உதறல் இல்லாமல் இல்லை. அந்த உதறலை மறைக்க வெறும் உதார் கிளப்பிக் கொண்டிருக்கிறது, ஜெயா- சசி கும்பல்.

இதற்கேற்றவாறு ஜெயலலிதா மீது மக்களிடையே பிரமையூட்டி நம்பிக்கை ஏற்படுத்தும் வேலையை மீண்டும் பார்ப்பன மற்றும் பிற பிழைப்புவாத ஊடகங்கள் மேற்கொள்கின்றன. ''ஜெயலலிதா அறியாமல்

தொடர்ச்சி 34-ஆம் பக்கம்...

# ஜெயா விடுதலை:

# மண்டபத்தில் எழுதப்பட்ட தீர்ப்பு!

**சொத்துக்குவிப்பு வழக்கிலிருந்து ஜெயா – சசி கும்பலை விடுதலை செய்துள்ள நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பு பிழையானது, மோசடியானது என்று கூறுவதற்கு பெரிய சட்ட அறிவெல்லாம் தேவையில்லை.**

வருமானத்திற்கு அதிகமாக சொத்துக் குவித்தது மற்றும் கூட்டுச்சதி ஆகிய கிரிமினல் குற்றங்களுக்காக ஜெயாவிற்கும் அவரது பினாமிகளான சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய மூவருக்கும் நான்கு ஆண்டு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதித்து பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி குன்ஹா அளித்த தீர்ப்பை முற்றிலுமாக ரத்து செய்து குற்றவாளிகள் நால்வரையும், அவர்களது பெயரில் இருக்கும் சொத்துக்களையும் விடுவித்து தீர்ப்பளித்திருக்கிறது, கர்நாடகா உயர்நீதி மன்றம்.

நீதிபதி குமாரசாமி அளித்துள்ள இத்தீர்ப்பு பிழையானது, மோசடியானது எனக் கூறுவதற்கு பெரிய சட்ட அறிவெல்லாம் தேவையில்லை, சாதாரண கூட்டல் கழித்தல் தெரிந்திருந்தாலே போதும். ஜெயாவும் அவரது பினாமிகளும், அக்கும்பல் உருவாக்கி வைத்திருந்த லெட்டர்பேடு கம்பெனிகளும் அரசு வங்கிகளில் வாங்கிய கடன்களின் கூட்டுத் தொகையை 10,67,31,274 ரூபாய் எனக் காட்டுவதற்குப் பதிலாக, அதனை 24,17,31,274 ரூபாயாகத் தனது தீர்ப்பில் (பக்.852) காட்டி, அதனை அடிப்படையாகக் கொண்டுதான் ஜெயா-சசி கும்பலை நீதிபதி குமாரசாமி விடுதலை செய்திருக்கிறார்.

வரியைக் கட்டாமல் ஏய்க்கும் பண முதலைகள் அனைவரும் அதற்காக வருமானத்தைக் குறைத்து, செலவுகளைக் கூட்டிக் காட்டும் உள்குத்து வேலைகளைச் செய்வது வாடிக்கையான ஒன்று. அதனையொத்த உள்குத்து வேலையைத் தலைகீழாகச் செய்துதான் - ஜெயாவின் செலவுகளைக் குறைத்து, வருமானத்தை அதிகரித்துக் காட்டியும்தான் நீதிபதி குமாரசாமி ஜெயா-சசி கும்பலை விடுவித்திருக்கிறார். ஜெயாவின் வருமானத்தை அதிகரித்துக் காட்டுவதற்கு குமாரசாமி நம்பியிருந்த முக்கியமான துருப்புச்சீட்டு, அக்கும்பல் பெற்ற கடன்கள்தான். அந்த இடத்தில் தான், ஜெயா-சசி கும்பல் பெற்ற மொத்தக் கடன் 10,67,31,274 கோடி ரூபாய் என்பதற்குப் பதிலாக 24,17,31,274 கோடி ரூபாய் என மாற்றிப் போட்டு தனது கைவரிசையைக் காட்டியிருக்கிறார், குமாரசாமி.

ஜெயா-சசி கும்பல் வாங்கிய கடன்களைக் கூட்டிப் போடுவதில் மட்டும் மோசடி நடைபெறவில்லை. அதனையும் தாண்டி கடன்களை வருமானமாகக் காட்டும் விசயத்தில் ஏகப்பட்ட தகிடுதத்தங்களைத் தெரிந்தே செய்திருக்கிறார், குமாரசாமி. மூன்றாவது குற்றவாளியான சுதாகரன் தனக்கு 1.57 கோடி ரூபாய் கடன் அளிக்குமாறு இந்தியன் வங்கி, அபிராமபுரம் கிளைக்கு விண்ணப்பம் செய்ததில், அவருக்கு 1.33 கோடி ரூபாய் கடன் அளிக்கப்பட்டது. ஆனால், நீதிபதி குமாரசாமியோ வங்கி அளித்த கடன் தொகைக்கு மாறாக, சுதாகரன் கடனாகக் கோரியிருந்த 1.57 கோடி ரூபாயை வருமானமாகக் காட்டியிருக்கிறார்.

முதல் குற்றவாளியான ஜெயா, அதே இந்தியன் வங்கிக் கிளையிடமிருந்து ஆகஸ்டு 1996-இல் 90 இலட்ச ரூபாய் கடன் பெற்றார். வழக்கு காலத்திற்கு பிறகு பெறப்பட்ட கடனை வழக்கு காலத்தில் கிடைத்த கடனாகக் காட்டி, அதனை வருமானத்தில் சேர்த்திருக்கிறார் குமாரசாமி. இவ்வளவு கேவலமாகவும் சிறுபிள்ளைத்தனமாகவும் கணக்குப் போட்டு ஜெயா-சசி கும்பலை விடுவித்திருக்கும் இந்தத் தீர்ப்பில், இந்தக் கணிதப் பிழைகளைத் தாண்டியும் அதிர்ச்சி அளிக்கும் அம்சங்கள் பல உள்ளன.

நீதிபதி குமாரசாமி: கத்துக்குட்டியா, ஜெயாவின் கைக்கூலியா?



### குமாரசாமி: நீதிபதியா, ஜெயா விசுவாசியா?

‘‘சொத்துக் குவிப்பு வழக்கு அரசியல் பழி வாங்கும் நோக்கத்தோடு தி.மு.க.வால் போடப்பட்ட வழக்கு’’ என்பதுதான் ஜெயா-சசி கும்பலின் வாதம். இந்த வழக்கை பெங்களூருக்கு மாற்றிய பொழுதே அ.தி.மு.க. கும்பலின் இந்த வாதத்தை உச்சநீதி மன்றம் புறக்கணித்துவிட்டது. ஆனால், நீதிபதி குமாரசாமி குப்பையைப் போல



பிரம்மஸ்ரீ கிரிமினல் ஜெயா மற்றும் அவரது பினாமிகள் சசிகலா, சுதாகரன், இளவரசி.

ஒதுக்கித் தள்ளப்பட்ட இந்த வாதத்தை மீண்டும் கிளறி, ‘‘சட்டப் போராட்டம் என்ற போர்வையில் அரசியல் இலாபங்களுக்காக வழக்குத் தொடுப்பதை ஊக்குவிக்கக் கூடாது’’ எனக் (பக்.739) குறிப்பிட்டு, ஜெயா கும்பலின் அவதூறுகளுக்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார்.

2001-இல் தமிழக முதல்வராக ஜெயா பதவியேற்றவுடனேயே, சென்னையில் நடந்துவந்த சொத்துக்குவிப்பு வழக்கைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியில் இறங்கினார். அதன் ஒரு பகுதியாக, அவ்வழக்கு விசாரணையில் ஜெயாவுக்கு எதிராகச் சாட்சியம் அளித்தவர்கள் அனைவரும் மிரட்டப்பட்டு பிறழ்சாட்சியாக மாற்றப்பட்டனர். இந்த நிலையில்தான் இந்த வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டுமென அன்பழகன் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். உச்சநீதி மன்றம் இவ்வழக்கை பெங்களூருவுக்கு மாற்றியபொழுதே பிறழ் சாட்சியங்களை மீண்டும் விசாரிக்குமாறு அறிவுறுத்தியது. இந்த அடிப்படையில் பிறழ் சாட்சியங்கள் மீண்டும் விசாரிக்கப்பட்டு, ஜெயா-சசி கும்பலின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன.

நீதிபதி குமாரசாமி இது குறித்து தனது தீர்ப்பில், ‘‘சாட்சிகளைப் பிறழ் சாட்சிகளாகக் கருதாமல், அவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வழக்குரைஞர்கள் கூறுகிறார்கள். அந்த சாட்சிகளிடம் தங்களுக்குச் சாதகமான முறையில் அரசு தரப்பு கேள்வி கேட்டுள்ளது. சாட்சிகள் வெவ்வேறு காலக்கட்டத்தில் வெவ்வேறு விதமாக சாட்சி அளித்தால் அவர்கள் மீது நம்பிக்கை வைப்பது நல்லதல்ல. இப்பிறழ் சாட்சியங்களைக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குச் சாதகமான அம்சங்களில் ஒன்றாகக் கருத வேண்டும்’’ எனக் குறிப்பிடுகிறார்.

இப்படிச் சுற்றிவளைத்து சொல்வதற்குப் பதிலாக வழக்கை பெங்களூருக்கு மாற்றியதே தவறு என்று குமாரசாமி கூறியிருக்கலாம். ஏனென்றால், அவரது தீர்ப்பின் இந்த அம்சம் வழக்கு பெங்களூருக்கு மாற்றப்பட்டதன் அடிப்படையையே தகர்க்கிறது. இதன்மூலம், ‘‘நான் பத்து பவானி சிங்கிற்குச் சமம்’’ எனக் காட்டியிருக்கிறார், நீதிபதி குமாரசாமி.

### கட்டிடச் செலவு

நீதிபதி குன்ஹா தனது தீர்ப்பில் 1991-96 காலக்கட்டத்தில் ஜெயா-சசி கும்பலின் ஒட்டுமொத்த செலவு - புதிய பங்களாக்களைக் கட்டியது, பழைய பங்களாக்களை நவீனப்படுத்தியது, வளர்ப்பு மகனின் திருமணச் செலவு, தமிழகமெங்கும் நிலங்களை வாங்கிக் குவித்தது என்ற வகையில் 55,02,48,215 ரூபாயாக மதிப்பிட்டிருந்தார். இதில் சரிபாதி வளர்ப்பு மகனின் ஆடம்பரதிருமணத்திற்கும், தோழிகள் உல்லாசமாக ஓய்வெடுப்பதற்கு பையனூர், கோடநாடு, ஹைதராபாத் உள்ளிட்ட இடங்களில் பங்களாக்களைக் கட்டுவதற்கும், புதுப்பிப்பதற்கும் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வீடு, கடைகள் எனப் பல்வேறு வகையான கட்டிடங்களைக் கட்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும் செலவு செய்யப்பட்டுள்ளது.

தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறை தனது குற்றப் பத்திரிகையில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டிடங்களைக் கட்டுவதற்கும், புதுப்பிப்பதற்

தங்க, வைர நகைகளாக மாறிய ஊழல் பணம்.



கும் ஜெயா-சசி கும்பல் அந்த ஐந்தாண்டுகளில் கிட்டதட்ட 27,79,88,945 ரூபாய் செலவழித்திருப்பதாகக் குற்றஞ்சுமத்தியிருந்தது. முதல் குற்றவாளியான ஜெயா இக்கட்டிடச் செலவுகளுக்கு 3,62,47,700 ரூபாய் மட்டுமே தான் செலவழித்ததாக வாதாடினார். இரண்டு தரப்பு சாட்சியங்களையும் பரிசீலித்த நீதிபதி குன்ஹா அரசு தரப்பு அக்கட்டிடங்களில் பதிக்கப்பட்டிருந்த கிரானைட் மற்றும் மார்பிள் கற்களை 1999-ஆம் ஆண்டு விலையில் மதிப்பீடு செய்திருந்ததைத் தள்ளுபடி செய்து, இந்தச் செலவை 22,53,92,344 ரூபாய் என நிர்ணயம் செய்தார்.

ஆனால், நீதிபதி குமாரசாமி தனது தீர்ப்பில் கட்டிடச் செலவை வெறும் 5,10,54,060 ரூபாயாக நிர்ணயித்திருக்கிறார். நீதிபதி குன்ஹாவின் மதிப்பீட்டை வெட்டுவதற்கு அவர் குறிப்பிட்டுள்ள காரணம் வேடிக்கையானது மட்டுமல்ல, குதர்க்கமானதுமாகும். ‘‘அரசு தரப்பு பொதுப்பணித்துறையின் மதிப்பீட்டின்படி கட்டிடச் செலவை நிர்ணயித்திருக்கிறது. பொதுவாகவே, பொதுப்பணித்துறை, ஒப்பந்ததாரர்களுக்குக் காலம் தாழ்த்தி பணம் கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி, தனது மதிப்பீட்டை அதிகமாகவே நிர்ணயிக்கும்’’ எனக் கூறியிருக்கும் குமாரசாமி தனது மதிப்பீட்டை எப்படி நிர்ணயித்தார் என்பதைத் தீர்ப்பில் சொல்லவில்லை. அவர் சொல்லாவிட்டாலும், ஜெயா காண்பித்த செலவும், குமாரசாமி நிர்ணயித்துள்ள செலவும் நெருக்கமாக இருப்பது மட்டும் பளிச்செனத் தெரிகிறது.

### திருமணச் செலவு

ஜெயா, மூன்றாவது குற்றவாளியான சுதாகரனின் திருமணத்தை நடத்துவதற்கு 6,45,04,222 ரூபாய் செலவழித்ததாகப் பல்வேறு சாட்சியங்களின் அடிப்படையில் குற்றஞ்சுமத்தியது, தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறை. ஆனால், ஜெயாவோ இத்திருமணத்திற்கு 28,67,520 ரூபாய் மட்டுமே தான் செலவழித்ததாகவும், மற்ற செலவுகளை மணமகள் வீட்டாரான சிவாஜி குடும்பத்தாரும், தனது கட்சிக்காரர்களும் கவனித்துக் கொண்டதாக ஒரு பச்சைப் பொய்யைத் துணிந்து சொன்னார்.

நீதிபதி குன்ஹா, தனது தீர்ப்பில் மணமகள் வீட்டார் மணமகனுக்கான 22 கோட்-சூட்டுகள் தைப்பதற்கு 1,41,025 ரூபாய் செலவழித்ததைத் தாண்டி வேறெந்த செலவையும் செய்யவில்லை என்பதைத் தக்க ஆதாரங்களுடன் நிறுவியிருக்கிறார். குறிப்பாக, சிவாஜியின் மூத்த மகனும், மணமகளின் தாய் மாமனுமான ராம்குமார், ‘‘இந்தத் திருமணத்திற்காகத் தனி வங்கிக் கணக்கு தொடங்கி, அதன் வழியாக 90 இலட்ச ரூபாய்க்கு மேல் தான் செலவழித்ததாக’’ச் சாட்சியம் அளித்தார். ஆனால், ராம்குமார் அந்த வங்கிக் கணக்கின் ஒரிஜினல் பாஸ்புக்கைக்கூட நீதிமன்றத்திடம் சாட்சியமாக அளிக்கவில்லை. மாறாக, வங்கிக் கணக்கு எண்கூடத் தெரியாத அளவிற்கு ஏதோவொரு பாஸ்புக்கின் ஜெராக்ஸ் காப்பியை சாட்சியமாக அளித்து, நீதிமன்றத்தை ஏமாற்ற முனைந்தது, ஜெயா கும்பல். ஜெயா கும்பலின் இந்த தகிடுதத்தங்களையெல்லாம் அம்பலப்படுத்தி ஒதுக்கித் தள்ளிய நீதிபதி குன்ஹா, தனது தீர்ப்பில் இத்திருமணத்திற்கு முதல் குற்றவாளியான ஜெயா செலவழித்த தொகை மூன்று கோடி ரூபாய் என நிர்ணயம் செய்தார்.



சுதாகரன் திருமணம்: ஜெயா-சசி கும்பல் அடித்த கொள்ளையின் பகிரங்க சாட்சி.

ஆனால், நீதிபதி குமாரசாமியோ வருமான வரித்துறையிடம் ஜெயா திருமணச் செலவாகக் காட்டிய இருபத்தெட்டு இலட்ச ரூபாயை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்ற கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான செலவுகள் அனைத்தையும் மணமகள் வீட்டாரும், அ.தி.மு.க. தொண்டர்களும்தான் செய்ததாகத் தீர்ப்பு எழுதியிருக்கிறார். திருமணச் செலவுகளை மணமகள் வீட்டார்தான் செய்தனர் என்பதற்கு அவர் எவ்வித ஆதாரத்தையும் காட்டவில்லை; கேட்கவுமில்லை. மாறாக, இந்து மத கலாச்சராம், பழக்கவழக்கங்களின்படி மணமகள் வீட்டார்தான் திருமணச் செலவுகளைச் செய்வார்கள் என மட்டை அடியாக அடித்து ஜெயா கும்பலைக் காப்பாற்றிவிட்டார்.

ஜெயா கும்பல், ராம்குமாரை முன்னிறுத்தி சிறப்பு நீதிமன்றத்தை ஏமாற்ற முனைந்ததைப் பற்றிப் பேசாத நீதிபதி குமாரசாமி, பந்தல் அலங்காரச் செலவுகளை அரசு தரப்பு அளவுக்கு மீறி மிகைப்படுத்திக் காட்டியிருப்பதாகக் குறிப்பிடுகிறார். ‘‘அரசு தரப்பு திருமணப் பந்தல்களை நேரடியாகப் பார்த்து மதிப்பீடு செய்யவில்லை. பந்தல்களின் வரைபடங்களை வைத்துக் கொண்டு செலவு கணக்கை மதிப்பீடு செய்துள்ளனர். வரைபடங்களின்படிதான் பந்தல்கள் அமைக்கப்பட்டிருக்கும் என நிச்சயமாகக் கூறமுடியுமா?’’ எனத் தனது தீர்ப்பில் குமாரசாமி பாயிண்டுகளை அடுக்கியிருக்கிறார்.

சுதாகரன் திருமணம் 1995-இல் நடந்தது. சொத்துக்குவிப்பு வழக்கு 1996-இல் பதியப்பட்டு அதன் பிறகுதான் விசாரணை தொடங்கியது. இந்த நிலையில் பந்தலை நேரடியாகப் பார்த்து மதிப்பீடு செய்யவில்லை என ஒரு நீதிபதி கூறினால், அவருடைய தர்க்க அறிவு நம்மைத் திடுக்கிடத்தான் வைக்கிறது.

### பரிசுப்பொருள்

இலஞ்சத்தின் இன்னொரு பெயர்தான் அன்பளிப்பு என்பது ஊரறிந்த உண்மை. அப்படிபட்ட அன்பளிப்புகளை வருமானமாக

எடுத்துக் கொள்ளலாம் எனத் தனது தீர்ப்பில் கூச்சமின்றிக் கூறியிருக்கிறார், நீதிபதி குமாரசாமி.

1992-ஆம் ஆண்டு பிப்ரவரி 24-ஆம் நாள் தனது 44-ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய பொழுது, தனது கட்சியின் தொண்டர்கள் பணமாகவும் பொருட்களாகவும் ஏராளமான அன்பளிப்புகளைத் தனக்கு வழங்கிய வகையில் 2,15,00,012 ரூபாய் வருமானம் வந்தது. மேலும், வெளிநாட்டில் வசித்த ஒருவர் தனக்கு 77,52,059 ரூபாயை வங்கி வரைவுக் காசோலை மூலம் அன்பளிப்பாக அளித்தார். இந்த அன்பளிப்புகளுக்கு உரிய வருமான வரியைச் செலுத்தியிருக்கிறேன். எனவே, இந்த அன்பளிப்புகளை வருமானமாகக் கருத வேண்டும் என்பது குற்றவாளி ஜெயா தரப்பு வாதம்.

''பொது ஊழியராக இருப்பவர் அன்பளிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டால், இலஞ்சம் வாங்குவதற்கு சட்டம் உருவாக்கி வைத்துள்ள தடைகளை அன்பளிப்பு என்ற வழியில் எளிமையாகக் கடந்து விடுவார்கள்'' என்ற வாதத்தைத் தனது தீர்ப்பில் முன்வைத்து ஜெயா-சசி கும்பலின் இந்த 'வருமானத்தை' ஒதுக்கித் தள்ளிய நீதிபதி குன்ஹா, ஜெயா பெற்ற அன்பளிப்புகள் குறித்து பலத்த சந்தேகத்தையும் தனது தீர்ப்பில் பதிவு செய்துள்ளார்.

''1987-88 முதல் 1992-93 வரையிலான ஆண்டுகளுக்கான தனது வருமான வரி கணக்கை, 1992 நவம்பரில் ஜெயா தாக்கல் செய்த பொழுது, அதில் தனது 44-ஆவது பிறந்தநாளில் பரிசாகக் கிடைத்த ரொக்கம், நகைகள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. சில ஆண்டுகள் கழித்துதான், தனக்குப் பிறந்த நாள் பரிசுகள் கிடைத்த விவரத்தைக் குறிப்பிட்டு வருமான வரித்துறைக்குக் கடிதம் எழுதி தெரியப்படுத்தி இருக்கிறார். அந்த சமயத்திலும்கூட எந்த பிறந்த நாளில் எவ்வளவு பரிசுகள் கிடைத்தன என்பது பற்றிய விவரங்களைக் குறிப்பிடவில்லை. 'இந்த வருமானங்களை எந்த வழியில் வந்தது என்று தெரியாத வருமானங்கள்' என வருமானவரித் துறை பதிவு செய்திருக்கிறது. மேலும், ஜெயாவிற்கு வெளிநாட்டிலிருந்து வந்ததாகக் கூறப்படும் 77 இலட்ச ரூபாய்க்கான காசோலை குறித்து வழக்கும் நடந்து வருகிறது'' எனத் தனது தீர்ப்பில் விவரித்துள்ள நீதிபதி குன்ஹா, இவற்றின் அடிப்படையில்,



ஜெயா-சசி கும்பலால் வளைத்துப் போடப்பட்ட கோடநாடு எஸ்டேட் மற்றும் பங்களா.

''பரிசுப் பொருட்களாக வந்திருந்தாலும், அவற்றுக்குச் சரியான ஆதாரங்கள் இருந்தாலும்கூட, அவற்றை ஜெயலலிதா பெற்று தனது உடமையாக்கிக் கொண்டது ஊழல் தடுப்புச் சட்டப்படி குற்றம்தான்'' என அறிவித்தார்.

நீதிபதி குன்ஹாவின் வாதங்களில் ஒன்றுக்குக்கூட நீதிபதி குமாரசாமி பதில் அளிக்கவில்லை என்பது மட்டுமல்ல, பரிசுப் பொருட்கள் பற்றித் தாமதமாக வருமான வரித் துறைக்குத் தெரிவித்திருப்பதெல்லாம் ஒரு விசயமே இல்லை என்ற முறையில் இந்த அன்பளிப்பு விவகாரத்தை அலட்சியமாகக் கையாண்டுள்ளார். மேலும், வெளிநாட்டில் இருந்து 77 இலட்ச ரூபாய் பரிசாக வந்தது தொடர்பாக சி.பி.ஐ. தொடுத்துள்ள வழக்கு நிலுவையில் இருப்பதையும் அலட்சியப்படுத்திவிட்டு, ஜெயாவுக்கு 44-ஆவது பிறந்த நாளுக்குக் கிடைத்த பரிசுப் பொருட்களில் இருந்து ஒன்றரைக் கோடி ரூபாயை வருமானமாகக் கணக்குக் காட்டியிருக்கிறார்.

> சுதாகரன் திருமணம் 1995-இல் நடந்தது. சொத்துக்குவிப்பு வழக்கு 1996-இல் பதியப்பட்டு அதன் பிறகுதான் விசாரணை தொடங்கியது. இந்த நிலையில் பந்தலை நேரடியாகப் பார்த்து மதிப்பீடு செய்யவில்லை எனக் கூறும் நீதிபதி குமாரசாமியின் தர்க்க அறிவு நம்மைத் திடுக்கிடத்தான் வைக்கிறது.

**நமது எம்.ஜி.ஆர்.**

பரிசுப் பொருள் விவகாரத்தை விடப் பலமடங்கு மோசடிகள் கொண்டது நமது எம்.ஜி.ஆர். பத்திரிகை டெபாசிட் திட்டம். சொத்துக் குவிப்பு வழக்கு தம் மீது பாய்ந்த பிறகு, அதிலிருந்து தப்பிக்கும் நோக்கத்தோடுதான் இப்படியொரு டெபாசிட் திட்டத்தை உருவாக்கியது, ஜெயா-சசி கும்பல். இதன் மூலம் தமக்கு 14 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வந்ததாக ஜெயா-சசி கும்பல் வாதாடி வந்தது. இதற்குரிய ஆதாரங்கள் எதையும் காட்டாமல், துணிந்து வருமான வரித் துறைக்கு இந்த வசூல் தொடர்பான கணக்கினைக் கொடுத்தது. வருமான வரித்துறை அதிகாரிகள் உரிய ஆதாரங்களைக் கேட்டபொழுது, அதற்குரிய ரசீது

களை காரில் கொண்டுவரும்பொழுது தொலைந்து போய்விட்டதாக ஒரு அண்டப் புளுகை அவிழ்த்துவிட்டதோடு, இது தொடர்பாக புகாரும் பதியப்பட்டிருப்பதாக கதையளந்தது. பின்னர், மோசடிக்கு மேல் மோசடியாக, காணாமல் போன ரசீதுகள் திரும்பக் கிடைத்துவிட்டதைப் போல போலியான ரசீதுகளைத் தயாரித்து வருமான வரித் துறையிடம் அளித்தது.

இந்த மோசடிகள் ஒவ்வொன்றையும் ஆதாரங்களோடு நிரூபித்த நீதிபதி குன்ஹா, இந்த டெபாசிட் திட்டமே போலியானது எனத் தீர்ப்பில் உறுதிப்படுத்தினார். மேலும், 1991 -96 கால கட்டத்தில் ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனம் மூலம் தமக்கு 4.19 கோடி ரூபாய் வருமானமாகக் கிடைத்தது என ஜெயா-சசி தரப்பு வாதாடியது. இந்த வருமானத்தை நிரூபிப்பதற்குத் தரப்பட்ட வரவு-செலவு அறிக்கையும் போலியானது என விசாரணையின் போது நிரூபணமானதால், இந்த வருமானத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் தள்ளுபடி செய்தார் நீதிபதி குன்ஹா.

நீதிபதி குமாரசாமி நமது எம்.ஜி.ஆர். டெபாசிட் திட்டத்தின் மூலம் கிடைத்ததாகச் சொல்லப்பட்ட 14 கோடி வருமானத்தைக் கணக்கில் கொள்ளவில்லையென்றாலும், இது தொடர்பான குற்றவாளிகள் தரப்பு சாட்சியங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும் என ஜெயா கும்பலுக்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார். மேலும், ஜெயா பப்ளிகேஷன்ஸ் மூலம் 4 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது என்ற குற்றவாளிகளின் தரப்பு வாதத்தை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளார்.

''வருமான வரித்துறைக்குக் கணக்கு தாக்கல் செய்து, வரியைக் கட்டிவிட்டார்கள்'' என்ற ஒற்றை வாதத்தை முன்வைத்தே, ஜெயா-சசி கும்பலின் தில்லுமுல்லு கணக்குகள் அனைத்தையும் தனது தீர்ப்பில் வெள்ளையாக்கிவிட்டார், நீதிபதி குமாரசாமி. சுதாகரன் பெயரில் தொடங்கப்பட்ட சூப்பர் டூப்பர் நிறுவனம் ஆறே மாதத்தில் கடையைக் காலிசெய்துவிட்டது. ஆனாலும், அந்த நிறுவனம் தனது சந்தாதாரர்களிடமிருந்து வசூலித்ததாகச் சொல்லப்பட்ட ஒரு கோடி ரூபாயையும்; ஜெயாவும் சசியும் பங்குதாரர்களாக இருந்து நடத்தி வந்த ஜெராக்ஸ் கடையான சசி எண்டர்பிரைசஸ் மூலம் 25 இலட்ச ரூபாயும்; ஹைதராபாத் திராட்சை தோட்டத்திலிருந்து 52,50,000 ரூபாயும் வருமானமாக வந்ததாகக் கணக்குக் காட்டியிருக்கிறார், அவர்.

### லெட்டர் பேடு கம்பெனிகள்

1991-ஆம் ஆண்டில் தமிழக முதல்வராக ஜெயா பதவியேற்ற பொழுது, ஜெயா-சசிகலா இருவரும் சேர்ந்து இரண்டு நிறுவனங்களை - ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி எண்டர்பிரைசஸ் - மட்டும் தான் நடத்திவந்தனர். அதன் பிறகு கம்பெனிகளின் எண்ணிக்கை தடாலடியாக 32 ஆக அதிகரித்தது. புதிதாக தொடங்கப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் திட்டமிட்டே ஜெயாவைத் தவிர்த்த மற்ற மூன்று குற்றவாளிகளைப் பங்குதாரர்களாகக் கொண்டு தொடங்கப்பட்டன. இந்த நிறுவனங்களின் பெயரில் 52 வங்கிக் கணக்குகளும் தொடங்கப்பட்டன.

சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பான காலகட்டத்தில் (1991-96) ஜெயா பப்ளிகேஷன்ஸ், நமது எம்.ஜி.ஆர். மற்றும் புதிதாகத் தொடங்கப்பட்ட கம்பெனிகளுள் குறிப்பிட்ட ஆறு நிறுவனங்களுக்கு இடையே இலட்சக்கணக்கில் பணப்பரிவர்த்தனைகள் குறுக்குநெடுக்குமாக நடந்தன. இதன் மூலம் இந்த நிறுவனங்கள் ஏதோ மிகப்பெரிய வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்ததைப் போலத் தோற்றம் உருவாக்கப்பட்டது.

நமது எம்.ஜி.ஆர்., ஜெயா பப்ளிகேஷன்ஸ், ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ், வினோத் வீடியோ விஷன், மஹாசுப்புலெட்சுமி கல்யாண மண்டபம் ஆகியவற்றின் வங்கிக் கணக்குகளில் நடந்துள்ள பல கோடி ரூபாய் மதிப்புடைய பணப் பரிவர்த்தனைகள் தொடர்பாக சிறப்பு நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வரவு-செலவு அறிக்கைகள், இலாப நட்டக் கணக்குகள் அனைத்தும் போலியாகத் தயாரிக்கப்பட்டவை என்பது ஆடிட்டர்கள் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் ஆதாரங்கள் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டது.

சசிகலாவுக்கும் இளவரசிக்கும் ஆடிட்டராக இருந்த பாலாஜி, ''இந்த நிறுவனங்கள் எந்தக் காலகட்டத்திலும் எதையும் உற்பத்தி செய்யவுமில்லை. பொருட்களை வாங்கி விற்கவுமில்லை. ஆனால், நிறுவனங்களின் கணக்குகளில் மட்டும் பணப்பரிவர்த்தனைகள் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தன'' எனச் சாட்சியம் அளித்தார்.

போயசு தோட்டத்து வீட்டிலிருந்துதான் ஒவ்வொரு முறையும் இலட்சக்கணக்கான ரூபாய் பணம் பைகளிலும் சூட்கேஸ்களிலும் அடைக்கப்பட்டு வங்கிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதும், போயஸ் தோட்டத்தில் டிரைவராக வேலை பார்த்த ஜெயராமன் தான் வங்கிக்குச் சென்று இந்தப் பணத்தைப் போட்டிருப்பதும், சசிகலா தான் ஜெயராமனிடன் இந்த வேலைகளை ஒப்படைத்தார் என்பதும் சிறப்பு நீதிமன்ற விசாரணையில் நிரூபிக்கப்பட்டது.

இவற்றுக்கெல்லாம் அப்பால், வடக்குக் கடற்கரைதுணை பத்திரப் பதிவாளரும், தோட்டக்கலைத் துறை அதிகாரி ராதாகிருஷ்ணனும் அளித்துள்ள சாட்சியத்தில், போயஸ்

ஜெயா-சசி கும்பலின் மோசடி வரவு-செலவு கணக்குகளை அம்பலப்படுத்தி, அவர்களை ஊழல் குற்றவாளிகள்தான் என நிறுவி தீர்ப்பளித்த நீதிபதி மைக்கேல் டி குன்ஹா.



தோட்டத்து வீட்டில் வைத்து பதிவு செய்யப்பட்ட ஆறு பத்திரங்கள் யார் வாங்குகிறார் என்ற விவரம் இல்லாமல், விதிமுறைகளை மீறிப் பதிவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்தினர்.

இவற்றின் அடிப்படையில்தான், சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய மூன்று குற்றவாளிகளும் முதல் குற்றவாளியான ஜெயாவின் பினாமிகளாகச் செயல்பட்டனர்; குற்றவாளிகள் நால்வரும் கூட்டுச் சதியில் ஈடுபட்டனர் என நிரூபித்தார், நீதிபதி குன்ஹா. ''குற்றவாளிகள் நால்வரும் ஒரே வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தனர் எனக் கூறுவதற்கு இடமில்லை. ஜெயா மற்ற மூவரையும் தனது வீட்டில் மனிதாபிமான அடிப்படையில் தங்க அனுமதித்தார் என எடுத்துக் கொள்ளவும் முடியாது. மாறாக, ஜெயாவின் சொத்துக்களுக்கு பினாமியாகச் செயல்படுவது என்ற சதித் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்தின் அடிப்படையில் மட்டும்தான் குற்றவாளிகள் மூவரும் முதல் குற்றவாளி வீட்டில் தங்கி வந்தனர்'' என்ற முடிவுக்கு வருகிறார், நீதிபதி குன்ஹா.

சட்டத்திற்குப் புறம்பாக சம்பாதித்த சொத்துக்களை வெள்ளையாக்குவதற்குக் கடன் என்ற வழியைப் பயன்படுத்திக் கொள்வது இன்று சர்வசாதாரணமாக நடந்துவரும் நிலையில், நீதிபதி குமாரசாமி குருட்டுத்தனமாக சசிகலாவும், சுதாகரனும், இளவரசியும் வாங்கிய கடன்களைக் காட்டி, அவர்கள் ஜெயாவின் பினாமிகள் அல்ல என வாதிடுகிறார்.

குன்ஹாவின் இந்த தர்க்க நியாயத்திற்குப் பதில் அளிக்காத நீதிபதி குமாரசாமி, ''சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய மூவரும் தனித்தனியாகத் தேசிய வங்கிகளிடமிருந்தும் தனியாரிடமிருந்தும் கடன்களை வாங்கியுள்ளனர். இந்தக் கடன்கள் வழியாகத்தான் தங்களது பெயர்களில் சொத்துக்களை வாங்கியுள்ளனர். அவர்களுக்குப் பணம் வந்த வழியும் சட்டபூர்வமானது, அவர்களது நோக்கமும் சட்டபூர்வமானது. எனவே, இவர்கள் மூவரும் ஜெயாவிற்கு பினாமியாகச் செயல்படவுமில்லை; கூட்டுச் சதியிலும் ஈடுபடவுமில்லை. குற்றவாளிகள் மூவரும் முதல் குற்றவாளியுடன் ஒரே வீட்டில் வசித்தனர் என்பதைக் கொண்டு கூட்டுச் சதியில் ஈடுபட்டனர் என முடிவு செய்ய முடியாது'' எனக் குறிப்பிட்டு குற்றவாளிகள் நால்வரையும் விடுவித்துள்ளார்.

கருப்புப் பண முதலைகள் அனைவரும் சட்டத்திற்குப் புறம்பாகத் தாம் சம்பாதித்த சொத்துக்களை வெள்ளையாக்குவதற்குக் கடன் என்ற வழியைப் பயன்படுத்திக் கொள்வது இன்று சர்வ சாதாரணமாக நடந்துவரும் நிலையில், நீதிபதி குமாரசாமி குருட்டுத்தனமாக சசிகலாவும், சுதாகரனும், இளவரசியும் வாங்கிய கடன்களைக் காட்டி, அவர்கள் ஜெயாவின் பினாமிகள் அல்ல என வாதிடுகிறார்.

அரசு அதிகாரிகளை போயசு தோட்டத்துக்கு வர உத்தரவிட்டு, பெயர் குறிப்பிடாமல் ஆறு பத்திரங்களைப் பதிவு செய்ததை நீதிபதி குன்ஹா பினாமி குற்றத்துக்கும், கூட்டுச் சதிக்கும் ஆதாரமாகக் காட்டுகிறார். ஆனால், நீதிபதி குமாரசாமியோ, ''யார் வாங்குகிறார்கள் என்ற விவரம் இல்லாமல் பத்திரப் பதிவு நடந்திருப்பதை, சொத்துக்கள் குறைந்த மதிப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பதை''க் குற்றங்களாக, சதியாகக் கருதாமல், அவை குறித்து சம்மந்தப்பட்ட துறைதான் விசாரிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டு நழுவிக் கொள்கிறார்.

1970-களில் உச்சநீதி மன்றம் கிருஷ்ணானந்த் அக்னிகோத்ரி என்பவர் தொடுத்த மேல்முறையீட்டு வழக்கில் ''ஒரு பொது ஊழியருக்கு 10 சதவீதம் வரை கணக்கில் வராத வருமானம் இருக்கலாம்'' என வழங்கப்பட்ட தீர்ப்புக்குப் பொருந்தும் வகையில் தனது தீர்ப்பை எழுதியிருக்கும் நீதிபதி நீதிபதி குமாரசாமி, அதற்காகவே ஜெயாவின் வருமானத்தையும் செலவுகளையும் தன்னிச்சையாக மாற்றி அமைத்திருக்கிறார்.

தேசிய வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட 10 கோடி ரூபாய் கடன்களைப் பட்டியல் போட்டுவிட்டு, அதனை மிகவும் அலட்சியமாக 24 கோடி ரூபாய் எனப் பிழையாகக் கூட்டிப் போடுகிறார். இலஞ்சக் குற்றச்சாட்டு வழக்குகளில், குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பு தமது வருமானத்திற்கு வரி கட்டிவிட்டோம் என வாதிடுவதை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை எனப் பல முன்னுதாரணமான தீர்ப்புகள் இருந்தும், நீதிபதி குமாரசாமி அவற்றையெல்லாம் குப்பையைப் போல ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஜெயா-சசி கும்பலுக்குத் தனிச் சலுகை அளித்து, அவர்களது இலஞ்சப் பணத்தை வருமானங்களாகச் சேர்த்துக் கொள்கிறார்.

ஜெயா-சசி கும்பல் தம் மீது சொத்துக் குவிப்பு வழக்கு தொடுக்கப்பட்டவுடன், தமது வருமானத்தை அதிகரித்துக் காட்ட நமது எம்.ஜி.ஆர். டெபாசிட் திட்டம் உள்ளிட்டுப் பலவகையான போலியான, மோசடியான வரவு-செலவு அறிக்கைகளைத் தயார் செய்தது போலத்தான் இந்தத் தீர்ப்பும் தயாரிக்கப்பட்டுள்ளது. நாலும் மூனும் எட்டு என்ற கூட்டுப் பிழை நீதிபதி குமாரசாமியைக் கத்துக்குட்டித்தனமான கணக்குப் பிள்ளை எனக் காட்டிவிட்ட போதும், அப்பிழை ஒரு நீதிபதியின் பேனாவிலிருந்து வந்துவிட்டதால் சட்டபூர்வ தகுதியைப் பெற்றுவிட்டது.

● செல்வம்

# 4+3 =8
# விடுதலை!

இந்த நாட்டின் நீதித்துறையே தோற்றுவிட்டது என்ற உண்மையைப் பல கோணங்களில் மீண்டும் மீண்டும் ஜெயலலிதா நிரூபித்துக் காட்டிவருகிறார்.

''நாலும் மூணும் எட்டு'' என்ற புதிய தொரு கணிதச் சூத்திரத்தின் அடிப்படையில் ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரும் குற்ற வாளிகளே அல்ல என்று கூறி அனைவரையும் விடுதலை செய்து விட்டார் குமாரசாமி. சட்டம் தெரிந்தவர்கள் மட்டுமல்ல, கூட்டல் கணக்கு தெரிந்தவர்களும் இந்தத் தீர்ப்பைக் கண்டு கதி கலங்கிப் போயிருக்கிறார்கள். நான்கையும் மூன்றையும் கூட்டினால் கிடைப்பது ஏழு என்பது ஆரம்பப் பள்ளி மாணவனுக்குக் கூடத் தெரிந்த விசயமாக இருக்கலாம். இருந்த போதிலும், கூட்டுத்தொகை எட்டு என ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்திருப்பதால், அதனைப் பரிசீலித்து, இறுதித் தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் உச்ச நீதி மன்றத்துக்குத்தான் இருக் கிறதாம். ஆகவே, முயலுக்கு மூணு கால் என்ற இந்த தீர்ப்பு குறித்து உச்சநீதி மன்றம் என்ன சொல்கிறது என்பதைப் பொருத்துதான், முயலுக்கு மூணு காலா, நாலு காலா என்ற புதிருக்கும், ஜெயலலிதா குற்றவாளியா இல்லையா என்பற்கும் விடை கிடைக் குமாம். இதுதான் சட்டத்தின் நிலை.

நாலும் மூணும் எட்டு என்ற குமார சாமியின் கணக்கு தவறு என்று உச்ச நீதி மன்றத்தில் யார் வேண்டுமானாலும் மேல் முறையீடு செய்துவிட முடியாதாம். அதைக் கேட்பதற்குக் கூட கர்நாடக அரசுக்குத்தான் உரிமை உண்டாம். சு.சாமிக்கும் அன்பழகனுக்கும் உரிமை உண்டா என்பதை உச்சநீதிமன்றம்தான் முடிவு செய்யவேண்டும். அதிலும் ஒரு நீதிபதி உண்டு என்று சொன்னால், இன்னொரு ஆள் இல்லையென்று சொல்லலாம்.

அம்மாவின் சூட்கேசுகள் விதிக்கும் தடைகளைத் தாண்டி கர்நாடக அரசை மேல் முறையீடு செய்ய வைத்தாலும், அதனை உச்சநீதி மன்ற நீதிபதிகள் உடனே விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமில்லை. முதலில் நாலும் மூணும் எட்டு என்ற குமாரசாமியின் கணக்கு அப்பீலுக்குத் தகுதியானதுதான் என்று ஆச்சார்யா நிரூபிக்க வேண்டும். மாட்சிமை தங்கிய உச்சநீதி மன்ற நீதிபதிகள், இது மேல் முறையீட்டுக்குத் தகுதியானதுதான் என்று திருப்தியடைந்தால் மட்டும்தான் அப்பீலையே அனுமதிப் பார்கள்.

அப்புறம் வாய்தா ராணியின் சவாலை எதிர்கொண்டு உச்சநீதி மன்றத்தில் வழக்கை விசாரணைக்குக் கொண்டுவர வேண்டும். அதுவரை ஆச்சார்யாவின் ஆயுள் கெட்டியாக இருக்க வேண்டும். பிறகு மூத்த வழக்குரைஞர்களை அமர்த்தி ''நாலும் மூணும் எட்டு அல்ல'' என்பதை அவர்களுடைய வாதத் திறமையால் உச்சநீதி மன்றத்தில் நிறுவ வேண்டும். அதன்பிறகுதான் உச்சநீதி மன்றம் இறுதித் தீர்ப்பு அளிக்கும். அதுவரை ஜெய லலிதா நிரபராதிதான். இதுதான் சட்டத்தின் நிலை.

குமாரசாமி அளித்த தீர்ப்பு ஜெயலலிதாவின் வரு மானத்தை 14 கோடி ரூபாய் அதிகப்படுத்திக் காட்டியிருக் கிறது என்பதும், அந்தக் கூட்டல் பிழை சரி செய்யப் பட்டாலே ஜெயலலிதா உள்ளே போக வேண்டி யிருக்கும் என்பதும் சட்ட அறிவற்ற பாமரனுக்கும் தெரிந்திருக்கும் உண்மை. பளிச்சென்று தெரியும் இந்த விசயத்தை கர்நாடக உயர்நீதி மன்றமோ, உச்சநீதி மன்றமோ தானே தலையிட்டு திருத்தாதாம். இதற்கு உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்துதான் 'சரி' செய்ய வேண்டுமாம். அதற்குள் உச்ச நீதிமன்றத்தை ஜெயலலிதா 'சரி' செய்து விடுவார். இதுவரை இப்படித் தான் நடந்திருக்கிறது. 18 ஆண்டு காலம் ஜெயலலிதாவால் இழுத்தடிக்கப்பட்ட இந்த வழக்கின்

நீதிபதி குமாரசாமியின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்வதன் அவசியத்தையும், நியாயத்தையும் வலியுறுத்தி வரும் சிறப்பு அரசு வழக்குரைஞர் ஆச்சார்யா மற்றும் கர்நாடக அரசின் தலைமை வழக்குரைஞர் ரவிவர்மா குமார்.







சட்டமும் சரி, நீதிமன்றங்களும் சரி பணத்துக்கும் பார்ப்பானுக்கும் வளையக்கூடியவைதான் என்பதை ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகள் நிரூபித்திருக்கின்றன. நீதிபதிகளோ, தாங்கள் சொல்வதுதான் சட்டமேயன்றி, சட்டம் என்ற ஒன்றே உண்மையில் இல்லை என்று ஜெயாவுக்கு ஆதரவாக அளித்த பல தீர்ப்புகளின் வாயிலாக நிரூபித்திருக்கிறார்கள்.

வரலாறு முழுதும் ஜெ.வுக்கு சாதகமான பாரபட்சங்கள் நிரம்பிக் கிடப்பதைத் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறோம்.

சட்டமும் சரி, நீதிமன்றங்களும் சரி பணத்துக்கும் பார்ப்பானுக்கும் வளையக்கூடியவைதான் என்பதை ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகள் நிரூபித்திருக்கின்றன. நீதிபதிகளோ, தாங்கள் சொல்வதுதான் சட்டமேயன்றி, சட்டம் என்ற ஒன்றே உண்மையில் இல்லை என்று ஜெயாவுக்கு ஆதரவாக அளித்த பல தீர்ப்புகளின் வாயிலாக நிரூபித்திருக்கிறார்கள். இந்த நாட்டின் நீதித்துறையே தோற்று விட்டது என்ற உண்மையை ஜெயலலிதா பல கோணங்களில் மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டி வருகிறார்.

•••

சொத்துக் குவிப்பு வழக்கையே எடுத்துக் கொள்வோம். வருமானத்துக்கு அதிகமாக ஜெயலலிதா சேர்த்த சொத்து ரூ.66 கோடி என்பது வழக்கு. உண்மையில் ஜெ-சசி கும்பல் அடித்த கொள்ளையின் அளவு இதைப்போல பல நூறு மடங்கு என்பதை நாடறியும். இருந்த போதிலும், இண்டு இடுக்குகளில் புகுந்து குற்றவாளிகள் தப்பித்து விடக்கூடாது என்பதற்காகத்தான், மறுக்க முடியாத ஆவணங்களின் அடிப்படையிலான சொத்துக்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டு, நுணுகி ஆராய்ந்து போடப்பட்டிருக்கிறது இவ்வழக்கு. இதில் வாதிட்டு தப்பிக்க இயலாது என்ற காரணத்தினால் தான் இந்த வழக்கையே இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் இதனை இழுத்தடித்தார் ஜெயலலிதா. இறுதியில் அரிதாக வந்த ஒரு தீர்ப்புதான் குன்ஹாவினுடையது. மொத்தத்தில் சட்டபூர்வமான முறையில் ஒரு ஊழல் குற்றவாளியைத் தண்டிப்பதெப்படி என்பதற்கான ஒரு வகைமாதிரி என்று இந்த வழக்கைக் கூறலாம்.

இந்த வகைமாதிரியின் மீது காலைத் தூக்கி ஒன்னுக்கடித்திருக்கிறது குமாரசாமியின் தீர்ப்பு. குமாரசாமியின் தீர்ப்பு மட்டரகமான தொரு நீலப் படம் என்றால், அதற்குப் பொருத்தமான கிளைமாக்ஸ் காட்சிதான் 14 கோடி ரூபாய் கூட்டல் பிழை. ஆனால், கூட்டல் பிழையைக் காட்டிலும் கொச்சையான பல காட்சிகள் இந்த நீலப்படத்தில் உள்ளன.

''அரசு ஊழியர்கள் தமது சட்டபூர்வமான வருவாய்க்கு மேல் பத்து சதவீதம் வரை சொத்து சேர்க்கலாம்'' என்று அனுமதித்திருப்பதன் மூலம், 'இலஞ்சத்தொகை எவ்வளவு' என்று பார்க்க வேண்டுமேயொழிய, 'இலஞ்சமே குற்றம்' என்று பார்க்கக்கூடாது எனத் தனது தீர்ப்பில் வழிகாட்டியிருக்கிறார் குமாரசாமி.

அதோடு நிற்கவில்லை; ஜெயலலிதாவுக்கு அமைச்சர் பெருமக்கள் கட்டியிருக்கும் கப்பத்தை, 'பிறந்தநாள் அன்பளிப்பு' என்றும், அது 'சட்டபூர்வ வருமானமே' என்றும் அங்கீகரித்து, எதிர்கால லஞ்ச வசூலுக்கு வழியும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். இனி, இத்தீர்ப்பின்படி ஓட்டுநர், நடத்துனர் வேலை நியமனங்கள், மாற்றல்கள் முதல் பொதுப் பணித்துறை காண்டிராக்டுகள் வரையிலான அனைத்துக்கும் அம்மாவுக்குரிய 'தசம பாகத்தை' அன்பளிப்பாக போயஸ் தோட்ட உண்டியலில் நேரடியாகப் போட்டு ரசீதும் வாங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

அது மட்டுமல்ல, ''எந்தவொரு வருமானத்துக்கும் வருமானவரி கட்டிவிட்டால் அது சட்டபூர்வ வருமானமே'' என்று அங்கீகரித்திருப்பதன் மூலம் வங்கிக் கொள்ளையர்கள் முதல் கஞ்சா வியாபாரிகள் வரையிலான அனைவரும் தங்கள் வருமானத்தையும் தொழிலையும் சட்டபூர்வமானதாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்கியிருக்கிறார் குமாரசாமி.

இப்படி சட்டவிரோத வருமானத்தையெல்லாம் சட்டபூர்வ வருமானமாக அங்கீகரித்தும், திருப்பி அடைக்கப்பட்ட வங்கிக் கடன்களையெல்லாம் வருமானமாக வரவு வைத்தும், திராட்சைத் தோட்ட வருவாயைக் கூட்டிக் காட்டி, கட்டுமானச் செலவுகளைக் குறைத்துக் காட்டி, வளர்ப்பு மகன் திருமணச் செலவை சிவாஜி கணேசன் தலையில் கட்டி... இப்படிப் பலவிதமான தகிடுதத்தங்களைக் கவனமாகச் செய்தும், கணக்கை நேர் செய்ய முடியாத சூழ்நிலையில்தான், 'கூட்டல் பிழை' என்ற கவனக் குறைவு குமாரசாமிக்குக் கை கொடுத்திருக்கிறது.

இந்த வழக்கைப் பொருத்தவரை, ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் ஒவ்வொருவர் மீதும், தனித்தனியே வழக்கு போடப்படவில்லை. கூட்டாகத்தான் போடப்பட்டிருக்கிறது. வழக்கில் காட்டப்பட்டுள்ள பணப் பரிவர்த்தனைகளும், உப்புமாகம்பெனிகளின் முகவரியான போயஸ் தோட்டமும் இவர்களைக் கூட்டுக் குற்றவாளிகள் என்று தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

எனினும், ‘‘ஜெயலலிதாவுடன் ஒரு வீட்டில் தங்கியிருந்தார்கள்’’ என்ற குற்றத்துக்காக மற்ற மூவரும் கூட்டுச் சதியில் ஈடுபட்டார்களென்று எப்படிக் கூற முடியும் என்று கேள்வி எழுப்பி, அவர்களுக்கும் ஜெயலலிதாவுக்கும் சம்பந்தமே இல்லை என்பது போலச் சித்தரித்து, ‘கூட்டுச்சதி’ என்ற குற்றப் பிரிவிலிருந்து அவர்களை விடுவிக்கிறார் குமாரசாமி. மற்ற குற்றப் பிரிவுகளைப் பொருத்தவரை ‘‘முதல் குற்றவாளியாகிய ஜெயலலிதாவையே விடுவிக்கின்ற காரணத்தினால் மற்ற மூவரும் விடுவிக்கப் படுகிறார்கள்’’ என்று கூறி, விடுதலை செய்வதற்கு மட்டும் அவர்களைக் கூட்டு சேர்த்துக் கொள்கிறார் குமாரசாமி.

இந்த வழக்கில் கர்நாடக அரசுதான் எதிர் மனுதாரர். எனினும் கர்நாடக அரசை எதிர் மனுதாரராகச் சேர்க்காமலேயே இந்த வழக்கு நடத்தப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, ‘‘இந்த மேல் முறையீட்டு விசாரணையே செல்லாது’’ என்று உயர்நீதி மன்றத்தில் சமர்ப்பித்த தனது வாதுரையில் குறிப்பிட்டிருந்தார் ஆச்சார்யா. முறைகேடான இந்த மேல் முறையீட்டு விசாரணையை நடத்தியதற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியவர் குமாரசாமி. கர்நாடக அரசு முதலிலேயே இதனைக் கேட்காமல் ஏன் அக்கறையில்லாமல் இருந்தது என்று தனது தீர்ப்பில் இதற்கு எதிர்க்கேள்வி எழுப்பியிருக்கிறார். ‘‘நீ கவனக்குறைவாக இருந்தால் நான் திருடத்தான் செய்வேன்’’ என்று பேசும் பிக்பாக்கெட் திருடனின் வாதமுறை இது.

கவனக்குறைவினால் விளைந்த கணிதப்பிழையை முட்டாள் தனம் என்று சொல்லலாம். தீர்ப்பில் கவனமாக எழுதப்பட்டுள்ள பகுதிகளோ கிரிமினல்தனமானவை.





பிரஜாபதி துளசிராம் கொலை வழக்கில் புதிதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டியதில்லை என அமித் ஷாவிற்கு (இடது) ஆதரவாகத் தீர்ப்பளித்த நீதிபதி சதாசிவத்துக்குக் கிடைத்த வெகுமதி - கேரள மாநில ஆளுநர் பதவி.

•••

குமாரசாமியுடைய தீர்ப்பு எள்ளி நகையாடப்பட்டு, அதன் ஒவ்வொரு அம்சமும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. தலைமை நீதிபதி தத்துவின் யோக்கியதையோ சந்தி சிரிக்கிறது. தீர்ப்பு வழங்குவதற்கு சில நாட்கள் முன்பு தலைமை நீதிபதி தத்து நேரடியாகவே பெங்களூரு வந்து, ஜெயலலிதாவை விடுவிப்பதாக தீர்ப்பு இருக்க வேண்டுமென்பதை உத்திர வாதம் செய்து கொண்டதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன. ஜெயலலிதாவுக்கு ஜாமீன் வழங்குவதில் தொடங்கி, இடையிடையே வரும் சிக்கல்களைச் சமாளித்து, கடைசியில் வழக்கைச்சாதகமாக முடித்துக் கொடுப்பது வரை ஒரு பேக்கேஜ் ஆக பேசி முடிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்புதான் இது என்று தெரிகிறது.

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் அப்சல் குருவுக்கு எதிராகப் போதுமான சாட்சியங்கள் இல்லாத நிலையில், தேசத்தின் மனசாட்சியைத் திருப்தி படுத்துவதற்காக அவரது மரண தண்டனையை உறுதி செய்தது உச்சநீதி மன்றம்.



தலைமை நீதிபதி தத்து, எதிர்த்தரப்பான கர்நாடக அரசுக்குத் தகவல் கூடத் தெரிவிக்காமல் ஜெயலலிதாவுக்குப் பிணை கொடுத்தது, நாரிமன் கேட்காமலேயே உயர்நீதி மன்ற அப்பீல் விசாரணைக்கு தானே முன்வந்து ஏற்பாடு செய்தது, பிணை மனு விசாரணை வேறு நீதிபதியிடம் செல்லாமல் தன்னிடமே பிடித்து வைத்துக் கொண்டது, பவானி சிங் நியமனம் செல்லாது என்று நீதிபதி லோகூர் தீர்ப்பளித்தவுடனே, அதன் மேல்முறையீட்டை விசாரிப்பதற்கான 3 நீதிபதிகள் அமர்வை அவசரம் அவசரமாக செட்டப் செய்தது, ஓய்வு பெறுவதற்கு சில மாதங்களே உள்ள கர்நாடக உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி வகேலாவை அவசரம் அவசரமாக இடமாற்றம் செய்தது - போன்ற நடவடிக்கைகளில் தத்துவின் யோக்கியதை சந்தி சிரிக்கிறது. ஆனால், அவர் கவலைப்படவில்லை. ஐயாயிரம் பேரோடு மொட்டை போட்டுக் கொண்டு கூச்சமே இல்லாமல் பத்திரிகைக்கு போஸ் கொடுக்கும் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கும் தத்துவுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

முன்னாள் நிதிபதி கட்ஜு, தத்து மீது குறிப்பான ஊழல் புகார்களைக் கூறியிருக்கிறார். நீங்கள் ஜெயலலிதாவிடம் இலஞ்சம் வாங்கியிருப்பதாக குற்றச்சாட்டு இருப்பதால், இந்த பிணை வழக்கை நீங்கள் விசாரிக்க கூடாது என்று டிராபிக் ராமசாமி தத்துவிடமே மனு கொடுத்திருக்கிறார். தத்துவுக்கு எதிராக மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில் அரசுத் தலைவரிடம் குற்றச்சாட்டு மனு தரப்பட்டிருக்கிறது. இவை எதற்கும் தத்து அசைந்து கொடுக்கவில்லை.

இது, தத்து என்ற ஒரு நீதிபதியின் தனிப்பட்ட குணாதிசயம் மட்டுமல்ல, உயர்நீதி மன்ற, உச்சநீதி மன்ற நீதிபதிகள் பலரின் யோக்

கியதை இதுதான். எப்படிப்பட்ட கிரிமினல் குற்றத்தை இழைத்தாலும் தங்களை யாரும் தண்டிக்க முடியாத வண்ணம், ஒரு உரிமையை அவர்கள் தமக்குத் தாமே வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தண்டனையிலிருந்து சட்டம் எனும் இரும்புச் சுவரால் பாதுகாக்கப்பட்டிருப்பதால், நீதிபதிகள்தான் தைரியமான குற்றவாளிகள்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி ஊழல் என்பது பிடியாணையின்றி, கைது செய்யத்தக்க ஒரு குற்றம். இருந்த போதிலும், உயர்நீதி மன்ற, உச்சநீதி மன்ற நீதிபதிகள் பகிரங்கமாக பெட்டி வாங்கி கையும் களவுமாக, கைரேகை ஆதாரத்துடன் பிடிபட்டிருந்தாலும், அவர்களைக் கைது செய்ய முடியாது. அதற்கு, தலைமை நீதிபதியின் அனுமதி வேண்டும் என்று 1991-இல் தீர்ப்பளித்திருக்கிறது உச்சநீதி மன்றம்.

எட்டு தலைமை நீதிபதிகள் மீது ஊழல் குற்றச்சாட்டு கூறிய பிரசாந்த் பூஷணின் வழக்கு ஆண்டுக் கணக்கில் கிடப்பில் இருக்கிறது. ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி கே.ஜி.பால கிருஷ்ணன் மீது ஏகப்பட்ட ஊழல் புகார்கள். அடுத்த தலைமை நீதிபதியான சதாசிவம், அம்மாவின் அருளாசி பெற்றவர். கொலைகாரன் அமித் ஷாவை விடுதலை செய்ததற்காக கேரள கவர்னர் பதவியைப் பரிசாகப் பெற்றவர். தற்போதைய தலைமை நீதிபதியோ அம்மாவின் அமைச்சரவையில் இடம்பெறும் தகுதியுள்ளவர்.

இதுதான் உச்சநீதி மன்ற நீதிபதிகளின் யோக்கியதை. சல்மான் கான், சத்யம் ராஜு, மோடி, அமித் ஷா, வன்சாரா, மாயா கோத்னானி போன்ற பல வழக்குகளில் பார்ப்பன மதவெறியர்களுக்கும், பணக்காரர்களுக்கும் தெண்டனிட்டு சேவகம் செய்யும் தீர்ப்புகளை வழங்கியிருக்கும் உச்சநீதி மன்றம், ஆதாரமே இல்லாமல் அப்சல் குருவைத் தூக்கில் ஏற்றியிருக்கிறது. டான்சி வழக்கில் பொதுச்சொத்தைத் திருடிய ஜெயலலிதாவின் தண்டனையை ரத்து செய்துவிட்டு, அவரது மனச்சாட்சிக்கு வேண்டுகோள் விடுத்த நீதி மன்றம், சாட்சியமே இல்லாத நிலையிலும், 'தேசத்தின் மனச்சாட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக' என்று கூறிக்கொண்டு அப்சல் குருவுக்குத் தூக்கு தண்டனை விதித்தது. இத்தகைய அநீதிகள், முறைகேடுகள், ஊழல்கள் ஆகிய அனைத்தையும் நீதிபதிகள் நியாயப்படுத்திக் கொள்ள ஏற்ற வகையில்தான் சட்டம் இருக்கிறது.



ஜெயாவின் ஏஜெண்ட்: உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி தத்து.

''பண்ணையார் சொல்வதும், பார்ப்பான் சொல்வதும்தான் சட்டம்'' என்றொரு காலம் இருந்தது. தங்களது தீர்ப்பு குறித்தும், அதன் நியாயம் குறித்தும், அவர்கள் எந்த விதத்திலும் மக்களுக்கு விளக்கம் சொல்லக் கடமைப் பட்டவர்களாக இல்லை. நீதிபதிகளும் அதே நிலையில்தான் இருக்கிறார்கள்.

சாதிச்சார்பு, மதச்சார்பு முதல் இலஞ்சம் வரை என்ன விதமான காரணத்துக்காகவும் முறைகேடான தீர்ப்பை ஒரு நீதிபதி வழங்கலாம். அவரை ஒன்றும் செய்ய முடியாது என்பதே நிலைமை.

ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகளில் மட்டுமல்ல, பன்னாட்டு முதலாளிகள், தரகுமுதலாளிகளுக்கு எதிரான வழக்குகளிலும், பார்ப்பன பாசிஸ்டுகளுக்கு எதிரான வழக்குகளிலும் இதுதான் நடந்தது. இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது.

**"பண்ணையார் சொல்வதும், பார்ப்பான் சொல்வதும்தான் சட்டம்" என்றொரு காலம் இருந்தது. தங்களது தீர்ப்பு குறித்தும், அதன் நியாயம் குறித்தும், அவர்கள் எந்த விதத்திலும் மக்களுக்கு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இல்லை. நீதிபதிகளும் அதே நிலையில்தான் இருக்கிறார்கள்.**

குமாரசாமி தீர்ப்பின் பித்தலாட்டங்களை, திரைமறைவுச் சதிகளை விவரித்துவிட்டு, இதற்கு எதிராக தி.மு.க. உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யவிருப்பதாக உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதியிருக்கும் கருணாநிதி, ''நீதியின் ராஜபாட்டையில் எத்தனை தடைக்கற்களைக் குவித்தாலும் அவற்றைப் படிக்கற்களாக்கிக் கொண்டு இறுதியில் நீதி விண்ணுயர எழுந்து நிற்கும்! வெற்றி முரசும் ஒலிக்கும்!'' என்று நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு குறிப்பிடுகிறார்.

இதனைப் படிக்கின்ற ஜெயலலிதா, ''அம்பாள் என்றைக்கடா பேசினாள்? அறிவு கெட்டவனே!'' என்ற பராசக்தி வசனத்தையே தனது பதிலாக கருணாநிதியிடம் சொல்லக்கூடும்.

● தொரட்டி

# ஊரறிந்த கொள்ளைக் கும்பலுக்கு உத்தம வேடம் கட்டும் ஊடகங்கள்

**கிரிமினல் ஜெயலலிதா மீது பிரமையூட்டி நம்பிக்கை ஏற்படுத்தும் வேலையைப் பார்ப்பன மற்றும் பிழைப்புவாத ஊடகங்கள் தொடர்ந்து பல வழிகளிலும் கூச்சநாச்சமின்றி செய்கின்றன.**

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று ஊடகங்களை இன்னமும் நம்பிக் கொண்டிருப்போரின் முகத்தில் காறித்துப்பியுள்ளன, நடுநிலை நாடகமாடும் தமிழக ஊடகங்கள். பாரம்பரியமிக்க தேசிய நாளேடாகவும், உண்மைகளை உரைப்பதாகவும், நடுநிலையுடன் செய்தி வெளியிடுவதாகவும் கூறிக்கொள்ளும் இந்த ஊடகங்கள், நேற்று ஜெயா தண்டிக்கப்பட்டபோது ஒப்பாரி வைத்தன; இப்போது ஜெயா கும்பல் விடுதலையானதும் தமது சொந்த விடுதலையாகக் கருதிக் கூத்தாடுகின்றன.

தனது நீண்டகால வாசகர்களேகூட முகம் சுளிக்கும் அளவுக்கு, ‘‘இது ஜெயாவின் மன உறுதிக்குக் கிடைத்த வெற்றி’’ என்று குதூகலிக்கும் தினமணி, ‘‘நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பு அ.தி.மு.க.வினருக்கு மகிழ்ச்சியையும், அரசியல் சாராசாமானிய தமிழ் மக்களுக்கு நிம்மதிப் பெருமூச்சையும் அளித்திருக்கிறது... ஜெயலலிதாவுக்கு எப்போதுமே ஒரு ராசியுண்டு, மிகப்பெரிய வெற்றிக்குப் பிறகு படுமோசமான தோல்வியும், அதைத் தொடர்ந்து மிகப்பெரிய எழுச்சியும்தான் ஜெயலலிதா இயற்காட்சியின் (பினாமினன்) தனித்தன்மை’’ என்று பார்ப்பன பாசத்துடன்துதிபாடி, ‘‘ஆறாவது முறையாகவும் முதல்வர் பதவி ஏற்று சரித்திரம் படைக்க வந்துள்ளதாக’’ புளகாங்கிதமடைகிறது. நீதிபதி குமாரசாமி விரிவாக அலசி ஆராய்ந்து தீர்ப்பளித்துள்ளார் என்று அ.தி.மு.க. வழக்குரைஞர்களையே விஞ்சும் வகையில் தலையங்கம் தீட்டி, தனது விசுவாசத்தை வெளிச்சம் போட்டுக் காட்டினார், தினமணி ஆசிரியர் வைத்தி.



ஜெயாவின் ஊடக விசுவாசிகள்: (கடிகாரச் சுற்றுப்படி) தினமணி ஆசிரியர் வைத்தியநாதன், தி இந்து ஆசிரியர் அசோகன், எழுத்தாளர் சமஸ், புதிய தலைமுறை ஆசிரியர் மாலன்.

தினமணிக்குப் போட்டியாக அறிவார்ந்த முறையில் காவடி தூக்கிய ‘‘திஇந்து’’வோ, குமாரசாமி தீர்ப்பு குதூகலத்தை ஏற்படுத்தியதாகக் கூறி, ஜெயலலிதாவின் மறுவருகை நல்லதாக அமையட்டும் என்று தலையங்கம் தீட்டியது. அதில் ஜெயாவின் நல்லாட்சியை மாநிலமே எதிர்பார்த்து ஏங்கி நிற்பதாக ஆருடம் கூறும் ஆசிரியர் அசோகன், ‘‘சுணங்கி நிற்கும் நிர்வாக வண்டியின் சுக்கானை இறுக்கிப் பிடித்து அடித்து ஓட்டுவது எவருக்கும் சவாலான காரியம். ஆனால், ஜெயலலிதாவிடம் மாநிலம் அதைத்தான் எதிர்பார்க்கிறது’’ என்கிறார்.

ஜோதிகா, மீண்டும் சினிமாவில் நடித்துள்ள 36 வயதினிலே படத்தில் வரும் ‘‘வாடி ராசாத்தி’’ பாடலானது எழுத்தாளர் மாலனுக்கு ஜெயாவை அழைப்பது போலத் தெரிகிறதாம். குன்ஹாவின் தீர்ப்பு அப்போதே தவறு என்று தான் தொலைநோக்குடன் கூறியது, இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் பூரித்துப் போகிறார்.

‘‘ஜெயலலிதா வழக்கு அ.தி.மு.க.வுக்கு உயிராதாரப் பிரச்சினையாக இருப்பதன் நியாயம் புரிந்து கொள்ளக் கூடியது. ஏனைய கட்சிகளும் அதையே வரிந்து கட்டிக் கொண்டு அழுவது அருவெறுக்கத்தக்கது. அரசியல் நடத்த மக்களை அணிசேர்க்க இவர்களுக்குத் தமிழகத்தில் பிரச்சினைகளே இல்லையா என்ன?’’ என்று எதிர்க்கட்சிகளைச் சாடி, ஜெ.கும்பலின் ஊழல் கொள்ளை மட்டும்தான் பிரச்சினையா, வேறு பிரச்சினைகளே இல்லையா என்று தி இந்துவில் எழுதுகிறார் சமஸ். அந்த வேறு பிரச்சினைகள் என்ன என்பதைப் பற்றி அவர் எதுவும் கூறவில்லை. ஜெ.கும்பலின் ஊழல் கொள்ளை தமிழகத்தின்

தலையாய பிரச்சினை அல்ல என்று மடைமாற்றும் திருப்பணியைத் திறமையாகச் செய்கிறார் சமஸ்.

நீதிபதி குமாரசாமி கணக்கில் செய்துள்ள மோசடி அம்பலமாகி நாறிக் கொண்டிருக்கும்போது, நமது எம்.ஜி.ஆர். நாளேட்டின் சந்தாதொகையைக் கூட்டி னால் இந்தக் கணக்கு நேராகிவிடும் என்று ஜெ. கும் பலுக்கு ஆறுதல் கூறும் தி இந்து, ஜெ. கும்பல் வாரி யிறைத்த பல கோடி பணத்தில் நீதித்துறையின் ஒவ் வொரு படிக்கட்டையும் உரிய முறையில் கவனித்துப் பச்சையான அயோக்கியத்தனங்கள் மூலம் ஜெ. கும்பலை இந்த வழக்கிலிருந்து விடுவித் துள்ள அ.தி.மு.க. வக்கீல்களை, ‘‘சொத்துக்குவிப்பு வழக்கில் தடம்பதித்தவர்கள், ஜெயலலிதாவின் விடு தலைக்கு வித்திட்டவர்கள்’’ என்று தலைப்பிட்டு ஏதோ மாபெரும் சாதனையாளர்களாகக் காட்டுகிறது. இப்போது சென்னை ஆர்.கே. நகர் தொகுதியில் அம்மா போட்டி யிடுவார் என்று அறிவிக்கப்பட்டதும், சொத்துக் குவிப்பு வழக்கு என்ற பெரிய தடையைத் தாண்டியுள்ள அம்மா, இடைத்தேர்தல் என்ற சிறிய தடையை அலட்சியமாகத் தாண்ட ஓடோடி வருவ தைப் போல கருத்துப்படம் போட்டு தனது விசுவாசத்தைப் பறை சாற்றுகிறது.




நமது எம்.ஜி.ஆர். நாளேட்டுக்குப் போட்டியாக, ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டதைக் கொண்டாடிக் குதூகலிக்கும் தி இந்து கருத்துப்படம்.

ஊழல் கிரிமினல் பேர்வழியான ஜெயலலிதா விடுதலை யானதும், இந்த தீர்ப்பு எவ்வளவு அயோக்கியத்தனமானது என்று ஊரே காறித் துப்பிக் கொண்டிருக்கும்போது, அனைத்து தளங் களிலும் இனி ஜெயலலிதா என்ன செய்ய வேண்டும் என்ற கேள் வியை பிரபலங்களிடம் கேட்டு, அதன் மூலம் மக்களின் வெறுப்பை மடைமாற்றும் வேலையைத் திறமையாகச் செய் கிறது ஆனந்த விகடன். இதில் டிராபிக் ராமசாமி மட்டுமே இந்த அயோக்கியத்தனமான தீர்ப்பையும் அதன் விளைவுகளையும் பற்றி கூறியிருக்கிறார். சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி யான சந்துரு, பேரா. அ.மார்க்ஸ், பேரா. சரசுவதி, முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கத்தின் தலைவர் ச.தமிழ்ச் செல்வன், வழக்குரைஞர் அருள்மொழி, மக்கள் கண்காணிப்ப கத்தின் இயக்குநர் ஹென்றி டிஃபேன் - என இந்தப் பிரபலங்கள் எல்லாம் மலத்தைத் தின்னும் பன்றி, சாக்கடையை விட்டு வெளியே வந்துவிட்டால் நன்றாக இருக்கும், அதன் மூக்கை கொஞ்சம் சரிசெய்து கொண்டால் அழகாக இருக்கும் என்றெல்லாம் கருத்து கூறுகிறார்கள்.

இத்தீர்ப்பைப் பற்றி இணையத்தின் வாயிலாகக் கருத்து கேட்டதில் பெரும்பான்மையினர் ஜெயாவை ஆதரிப்பதாகப் புள்ளிவிவர சதவீதக் கணக்குக் காட்டி சதிராடியும், ஜெயலலிதா மீண்டும் முதல்வராகப் பதவியேற்பதை நேரடி வர்ணனையுடன் ஒளிபரப்பு செய்தும் இந்த ஊடகங்கள் தமது விசுவாசத்தைப் பறை சாற்றின. அதிக முறை ஊழல் வழக்குகளில் தண்டிக்கப்பட்டு, பின்னர் நீதித்துறையை விலைக்கு வாங்கி விடுதலையாகி முதல் வராகியுள்ள ஜெயலலிதா, 5-வது முறையாக முதல்வராகப் பதவி யேற்று கருணாநிதியைச் சமன் செய்துவிட்டார் என்று பூரித்துப் போகும் இந்த ஊடகங்கள், இந்துத்துவ அபாயத்திலிருந்து தமிழ கத்தைக் காப்பாற்றியவர், காவிரி, முல்லைப் பெரியாறு மற்றும் ஈழப் பிரச்சினையில் மைய அரசைத் துணிவுடன் எதிர்த்து நின்ற வர் என்றெல்லாம் வாதங்களை அடுக்கி, ஜெ கும்பலை வெட்க மின்றி ஆதரித்து நின்றன.

துக்ளக் சோ கூட அன்றைய ஜெ. கும்பலின் ஆட்சியை ஊழல் ஆட்சியாகத்தான் இருந்தது என்று அப்போது அவரது ஏட்டிலும் பேச்சிலும் குறிப்பிட்டிருக்கிறார். இன்று ஜெ கும்பலுக்குக் காவடி தூக்கும் இந்த ஊடகங்களிடம் கடந்த கால வரலாறுகள் அனைத்தும் ஆதாரங்களுடன் ஆவணக் காப்பகம் போலக் கையில் உள்ளன. அதை ஒருமுறை புரட்டிப் பார்த்தாலே 1991-96 இல் ஜெயாவின் ஆட்சி எப்படிப்பட்டதாக இருந்தது என்பதற்கான ஆதாரங்களையும், அது எப்படிப்பட்டதொரு கிரிமினல் கொள்ளைக் கூட்டமாக இருந்தது என்பதையும், என்ன வழி களில் அக்கும்பல் தமிழகத்தைச் சூறையாடியது என்பதையும், அடுத்து வந்த தேர்தலில் அக் கும்பல் மக்களால் அடித்து விரட்டப் பட்டதையும் அவர்களால் தொகுத்துக் கூற முடியும். ஆனால், அதையெல்லாம் மறைத்து விட்டு ஏதோ தி.மு.க.வினர் பழிவாங்கும் நோக் கத்துடன் வழக்கு தொடுத்ததைப் போலவும், நிரபராதிகளான ஜெ. கும்பல் அதிலிருந்து மீண்டு வந்துவிட்டதைப் போலவும் இப்போது இந்த ஊடகங்கள் கதையளக்கின்றன என்றால், இவர்களது நேர்மையின் யோக்கியதைதான் என்ன?

2ஜி ஊழல் விவகாரத்திலும், ஆதர்ஷ், காமன் வெல்த் ஊழல் விவகாரங்களிலும் ஊழலுக்கு எதிராக கம்பு சுழற்றியவைதான் இந்த ஊடகங்கள். அன்னாஹசாராவின் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை வரவேற்று ஆதரித்து, ஊழலற்ற இந்தியாவைப் படைக்க அறை கூவியதும் இந்த ஊடகங்கள்தான். இப்போது ஊழல் கிரிமினல் ஜெ. கும்பலை நிரபராதி களாகச் சித்தரிப்பதும் இந்த ஊடகங்கள்தான். ஓட்டுக்கட்சிகளுக்கு எவ்வாறு அருகதை யில்லாமல் போய்விட்டதோ, அதேபோல ஊழலை எதிர்த்துப் பேச தகுதியிழந்து கிடப்பதும் இந்த ஊடகங்கள்தான்.

● தனபால்

# “மேடம் 45 பர்செண்ட்!”

**பொதுப்பணித்துறையில் 45 சதவீதம் வரை கமிசன் அடிக்கும் ஆட்சியின் தலைவி ஜெயா, சொத்துக்குவிப்பு வழக்கில் விடுதலை செய்யப்பட்டிருப்பதை முரண்நகையென ஒதுக்கித்தள்ளிவிட முடியாது.**

சொத்துக்குவிப்பு வழக்கில் ‘நிரபராதி’ என்று ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆனால், அவர் விடுதலையாகும் நேரத்தில்தான் தமிழகப் பொதுப்பணித்துறையில் நடந்துவரும் ஊழல்-கொள்ளை வெளிவந்து, தமிழகத்தில் நடப்பது அரசாங்கமல்ல, ஜெ.கும்பலின் தீவட்டிக் கொள்ளைதான் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் மிகப்பெரிய நிதி ஒதுக்கீட்டைக் கொண்டிருப்பது பொதுப்பணித்துறை. இப்போது ஊழல்தான் அத்துறையின் பொதுப்பணியாகி விட்டது. அந்தத் துறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து 35 முதல் 45 சதவீதம் வரை கமிசனாக ஆளுங்கட்சியினரால் வசூலிக்கப்பட்டு உயர் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை பங்கு பிரிக்கப்படுவதை அம்பலப்படுத்தும் வகையில், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பொதுப்பணித்துறை தலைமை அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர்கள் சங்கத்தினர் 5 இடங்களில் டிஜிட்டல் பேனர்கள் வைத்தனர். திருச்சி மண்டலத்திலும் இவ்வாறு பிளக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் தொடங்கி உதவிப் பொறியாளர் வரையிலான 10 பேரின் பெயர்ப்பட்டியலைப் பகிரங்கமாக வெளியிட்ட அச்சங்கத்தினர், கடந்த மே 9 அன்று இலஞ்ச ஒழிப்புத்துறையிடம் இப்பட்டியலுடன் புகார் கொடுத்துள்ளனர். இது மட்டுமின்றி, பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர் ஒருவரும் பொதுப்பணித்துறையில் பணியாற்றும் ஒரு அதிகாரியும் கொடுக்கல்-வாங்கல் பற்றி தொலைபேசியில் நடத்திய உரையாடலும் ‘‘வாட்ஸ்-அப்’’ மூலம் அப்படியே வெளிவந்து இத்தீவட்டிக் கொள்ளையை தமிழகமெங்கும் நாறடித்துள்ளது. இந்த இலஞ்சப் பணத்தில் சில அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு குடும்பத்துடன் சுற்றுலா சென்றிருப்பதும் அம்பலமாகியுள்ளது.

‘‘பொதுப்பணித்துறையில் இலஞ்சம் கொடுக்காத ஒப்பந்ததாரர்களுக்கு எந்தப் பணிகளும் வழங்கப்படுவதில்லை. முன்பு 10 முதல் 30 சதவீதம் வரை இலஞ்சமாகப் பணத்தைக் கொடுத்துத் தொலைத்தோம். இப்போது 45 சதவீத அளவுக்குக் கேட்பதால் எங்களால் கொடுக்க முடியவில்லை. எனவேதான் இந்த அடாவடிக்கு முற்றுப்புள்ளி வைக்கவே எங்களிடம் இலஞ்சம் கேட்ட 10 பொறியாளர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட்டோம். ஒரு பணியில் 45 சதவீதம் இலஞ்சமாகக் கொடுத்துவிட்டு மீதமுள்ள 55 சதவீத பணத்தைக் கொண்டுதான் பணிகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனில், பணிகள் எந்த அளவுக்கு செய்யப்பட்டிருக்கும் என்பதை நீங்களே ஊகிக்க முடியும்’’ என்கிறார் தமிழ்நாடு பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர் சங்கத்தின் தலைவர் குணமணி.

பராமரிப்புச் செலவுக்காக அரசு சார்பில் ஒதுக்கப்பட்ட தொகை செலவிடப்பட்டதாக அதிகாரிகள் கூறிய போதிலும், அந்தப் பணிகள் முறையாகவோ, முழுமையாகவோ எங்குமே நடக்கவில்லை என்று ஒப்பந்ததாரர்கள் சங்கத்தினரே கூறுகின்றனர் என்றால், மக்களின் வரிப்பணம் எப்படியெல்லாம் ஜெ.கும்பலின் ஆட்சியில்

அம்மா ஆட்சியின் மகிமை: சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பொதுப்பணித்துறை தலைமை அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை பொறியியல் ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் சார்பில் வைக்கப்பட்ட பேனர்.



சூறையாடப்படுகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

''பொதுப்பணித்துறை அமைச்சருக்கு 5 சதவீதம், மற்ற துறையில் பணிகள் நடந்தால் அந்தத் துறை அமைச்சருக்கு 5 சதவீதம், கண்காணிப்புப் பொறியாளருக்கு 2 சதவீதம், செயற்பொறியாளருக்கு 7 சதவீதம், உதவிப் பொறியாளருக்கு 7 சதவீதம், பணி ஆய்வாளருக்கு (ஒர்க்கிங் இன்ஸ்பெக்டர்) 3 சதவீதம், அலுவலக ஊழியர்களுக்கு 5 சதவீதம் - என சதவீதப் பங்கு அடிப்படையில் பணம் கொடுக்க வேண்டும் என்பது இந்தத் துறையில் எழுதப்படாத விதியாக உள்ளது'' என்கிறார் குணமணி. இதோடு மேலிடத்துக்கு அதாவது, எம்-க்கு (மேடத்துக்கு) தனியாக 5 சதவீதம் கொடுக்க வேண்டுமென வசூலிக்கப்பட்டதாக ஒப்பந்ததாரர்கள் பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளனர். ஓய்வு பெற்ற பிறகும் ஆலோசகர் என்ற பதவியில் இருந்த பொறியாளர் ஒருவர், மேலிடத்துக்குப் பணத்தை வசூலித்துக் கொடுப்பதில் கில்லாடி என்று கிசுகிசு ஏடுகளே அம்பலப்படுத்துகின்றன.

இந்தச் செய்திகள் தவறாக இருந்தால் அரசு சார்பில் அப்போதே மறுத்து, இவற்றை வெளியிட்ட பத்திரிகைகள் மீது மான நட்ட வழக்கும் தொடுத்திருப்பார்கள். ஆனால், இன்றளவும் மறுக்கவில்லை. மாறாக, இந்த ஊழல் கொள்ளை ஆதாரங்களுடன் சந்தி சிரித்ததும், ஒப்பந்ததாரர்கள் வைத்த டிஜிட்டல் பேனர்கள்தான் ஊழல் கொள்ளையர்களால் உடனடியாகக் கிழித்தெறியப்பட்டன.

''இன்றைக்கு வேண்டுமானால் இந்த ஊழல் அதிகாரிகள் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், வருங்காலத்தில் இவர்கள் எல்லாம் விசாரணைக் கமிசன் முன்னால் நின்று பதில் சொல்ல வேண்டிய நிலைமை நிச்சயம் உருவாகும்'' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி எச்சரித்தார். கடந்த 4 ஆண்டுகளில் 36 ஆயிரம் கோடி அளவுக்கு பொதுப்பணித்துறையில் ஊழல் நடந்துள்ளது என்றும் , ஆளுநர் அனுமதிக்காக காத்திருக்காமல் லஞ்ச ஒழிப்புத்துறையினர் அப்போதைய முதல்வரான ஓ.பி.எஸ். மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார் பா.ம.க.வின் ராமதாஸ். காங்கிரசு கட்சியினர் பேரணி நடத்தி, தமிழக அரசின் 25 துறைகளில் நடந்துவரும் ஊழல்கள் அடங்கிய பட்டியலை மாநில ஆளுநரிடம் அளித்து நடவடிக்கை எடுக்கக் கோரினர்.

45 சதவீத அளவுக்குக் கமிசன் கொடுக்கப்பட்டதையும், இதற்காக வசூல் வேட்டை நடத்திய 10 பொறியாளர்களின் பெயர்ப்பட்டியலையும் பகிரங்கமாக வெளியிட்ட பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர் சங்க நிர்வாகிகள்.



இத்தனைக்கும் பிறகும் அப்போது பொதுப்பணித்துறை அமைச்சராகவும் முதல்வர் பொறுப்பிலுமிருந்த ஓ.பி.யோ, 'மக்கள் முதல்வர்' ஜெயாவோ இதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. ஊழல் கொள்ளையர்களின் பட்டியலைப் பகிரங்கமாக வெளியிட்டதோடு, ஒப்பந்ததாரர் சங்கத்தினர் முறைப்படி புகாராகக் கொடுத்த போதிலும் இலஞ்ச ஒழிப்புத் துறை அசைந்து கொடுக்கவில்லை. வருமான வரித்துறையினர் சோதனை நடத்த முன்வரவில்லை. தானே முன்வந்து இந்த ஊழல் கொள்ளையை பொதுநல வழக்காக எடுத்து நடத்த நீதித்துறையும் முன்வரவில்லை.

மாறாக, ஊழலை அம்பலப்படுத்தியவர்கள் தான் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். அரசு தரப்பிலேயே ஒரு முக்கிய அதிகாரி சமரசப் பேச்சுவார்த்தை மூலம் நடத்திய பேரத்துக்கு ஒப்பந்ததாரர் சங்க நிர்வாகிகள் இசையாததால் அடுத்த கட்டமாக, ஒப்பந்ததாரர் சங்கத்தை உடைக்கும் திருப்பணியில் ஜெ.கும்பலின் பினாமி அரசு இறங்கியது. ஜெ.கும்பலின் ஏற்பாட்டின்படி, இச்சங்கத்தின் ஒரு பிரிவினர் போட்டி பொதுக்குழுவைக் கூட்டி புதிய தலைவர் மற்றும் நிர்வாகிகளைத் தெரிவு செய்து, ஏற்கெனவே சங்கத்தின் நிர்வாகிகளாக இருந்தவர்களைப் பொறுப்பிலிருந்து நீக்குவதாகத் தீர்மானம் நிறைவேற்றினர்.

இதுவும் போதாதென்று, இதைப்பற்றி பொதுப்பணித்துறை பொறியாளர்கள் எவரும் வாய்திறக்கக் கூடாது என்று எச்சரிக்கும் வகையில் அரசுப் பணியாளர் விதியைக் காரணம் காட்டி வாய்ப்பூட்டு போடும் புதியதொரு மிரட்டலை ஜெ.கும்பல் ஏவியுள்ளது. பொதுப்பணித்துறையில் நடக்கும் ஊழல்கள் பற்றி ஒப்பந்ததாரர் சங்கத்தினர் கூறும் குற்றச்சாட்டுகள் நியாயமானதென்றும், இதனால் பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளதென்றும் கருத்து தெரிவித்த குற்றத்துக்காக தேவராஜ் என்ற பொதுப்பணித்துறை நீர் ஆய்வு நிறுவன செயற்பொறியாளருக்கு அந்நிறுவனத் தலைமைப் பொறியாளர் மூலம் விளக்கம் கேட்டு நோட்டீசு அனுப்பப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் பிறகும் நடுநிலை நாடகமாடும் ஊடகங்களோ இந்த ஊழல் கொள்ளை பற்றி பொதுப்பணித்துறை பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்க முன்வரவில்லை. பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர் சங்கத்தினர் டிஜிட்டல் பேனர் வைத்து ஊழலை அம்பலப்படுத்தியபோது பரபரப்பூட்டிய ஊடகங்கள், அதன் பிறகு இந்த விவகாரத்தைக் கைகழுவி விட்டன. ஊழல் அதிகாரிகள் -

அமைச்சர்களுக்கு எதிராக அம்மா சாட்டையை சுழற்றி வருவதாகவும், சொத்துக்குவிப்பு வழக்கின் காரணமாக அம்மா, முதல்வர் பொறுப்பில் இல்லாத நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு நிர்வாகத் திறமை மிக்க அம்மாவை ஒரு கும்பல் ஏமாற்றுவதாகவும், அதனால் அவருக்கு மன உளைச்சல் ஏற்பட்டதாகவும், நிர் வாகத்தைச் சீரமைக்க அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் ஒரு பொய்யை பார்ப்பன ஊடகங்கள் தொடர்ந்து உருவாக்கி வருகின்றன.


கொலைகார அரசு : ஜெ.கும்பலின் ஊழல் கொள்ளைக்கு உடன்பட மறுத்து தற்கொலை செய்து கொண்ட திருவாரூர் மாவட்ட அரசு ஊழியர் முத்துக்கிருஷ்ணன், தூக்க மாத்திரை தின்று தற்கொலைக்கு முயற்சித்த கோவையைச் சேர்ந்த ரேஷன் கடை ஊழியர் சக்திவேல்.

ஆனால், பாசிச-கிரிமினல் ஜெ.கும்பலின் தலைமை யிலான கிரிமினல் கொள்ளைக் கூட்டம், என்றைக்குமே ஒரு அரசாங்கமாக இருந்ததில்லை. அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறை அடங்கிய அரசு கட்டமைவின் துணையோடு கொள்ளையடிக்கும் அமைப்பு ரீதியில் திரண்ட கிரிமினல் குற்றக் கும்பல்தான் அது. எந்தெந்த துறைகளில் எத்தனை கோடி தேறும் என்று கணக்கு போட்டுக் கொடுப்பதுதான் அம்மாவின் அருள் பெற்ற ஆலோசகர்களின் வேலை. அதை முறைப்படி வசூலித்து கொடுப் பதுதான் அமைச்சர்களின் கடமை. அவர்கள் இட்ட பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பதுதான் ஊழல் அதிகாரிகளின் அன்றாடப் பணி. எல்லாம் ஒழுங்காக நடந்தால் அவரவர்களுக்குரிய எலும்புத் துண்டு கிடைக்கும். இல்லையானால் நடப்பதே வேறு. ஜெ. கும்பலால் நிர்வகிக்கப்படும் இந்த ஆட்சியானது, மிகப்பெரிய கொள்ளைக்கூட்ட கம்பெனியாகத்தான் இயங்கி வருகிறது.

உள்ளாட்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை ஊழல்கள், போக் குவரத்துத் துறை பணி நியமன ஊழல், டாஸ்மாக் ஊழல், நெல் மூட்டைகளில் கலப்பட ஊழல், மின் வாரிய ஊழல், பத்திரப் பதிவுத்துறை ஊழல், மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசலில் ஊழல், பொதுவிநியோகத்துறை ஊழல், சத்துணவுத் திட்டத்தில் முட்டை-காய்கறி -பருப்பில் ஊழல், கனிமவளக் கொள்ளை, ஆற்றுமணல் கொள்ளை, தாதுமணல் கொள்ளை - என்று ஏற் கெனவே ஊழல்கள் அம்பலமாகி ஜெ.கும்பலின் கிரிமினல் கொள்ளைக் கூட்ட ஆட்சியின் மகிமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

அம்மா ஆட்சியில் பல நூறு கோடிக்கு ஆவின் பால் கலப்பட கொள்ளை அம்பலமானதும், பால்வளத்துறை அமைச்சராக இருந்த மாதவரம் மூர்த்தியை அமைச்சர் பொறுப்பிலிருந்து நீக்கு வதாக அறிவித்து, ஜெ. கும்பல் அவரைப் பாதுகாத்தது. ஜெ. கும் பலுக்கு முறையாகக் கப்பம் கட்டிவந்த மாதவரம் மூர்த்தியின் பினாமியாகச் செயல்பட்ட ஆவின் பால் கலப்படக் கொள்ளை யன் வைத்தி-க்காக உச்ச நீதிமன்றம் வரை சென்று அவனுக்குப் பிணை வாங்கிக் கொடுத்து தப்பிக்க வைத்துள்ளது. பல்லாயிரம் கோடி ரூபாய்களுக்கு மேல் சுருட்டப்பட்டுள்ள தாது மணற் கொள்ளை விவகாரம் அம்பலமாகத் தொடங்கியதும், இது குறித்து விசாரணை நடத்துவதாக நாடகமாடிய ஜெ.கும்பல், ஐ.ஏ.எஸ். அதிகாரி ககன்தீப் சிங் பேடி அளித்துள்ள விசாரணை அறிக்கையை இதுவரை வெளியிடாமல் முடக்கி வைத்துள்ளது. பல்லாயிரம் கோடி கிரானைட் கொள்ளை குறித்து விசாரித்துவரும் ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு கொலைமிரட்டல்கள் விடுக்கப்படு கின்றன.

''இப்படித்தான் செய்வோம்; எங்களை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது'' என்று கொக்கரிக்கும் ஜெ.கும்பலின் ஆட்சியில், நெல்லை வேளாண் செயற் பொறியாளர் முத்துக்குமாரசாமியின் தற் கொலை மட்டுமின்றி, ஜெ. கும்பலின் ஊழல் கொள்ளைக்கு உடன்பட மறுத்து திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றிய அரசு ஊழியர் முத்துக்கிருஷ்ணன் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதே போல சென்னை மற்றும் திருவாரூர் மாவட்ட ரேஷன் கடை ஊழியர்கள் தற்கொலை, திருச்சி மருத்துவ அதிகாரி தற்கொலை முயற்சி - என இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

1991-96 ஆம் ஆண்டுகளில் நடந்த ஜெயா வின் ஆட்சி ''10 சதவீத கமிசன் ஆட்சி'' என்றே அழைக்கப்பட்டது. அந்தச் சமயத்தில்தான் ஜெயா-சசி கும்பல் வருமானத்திற்கு அதிகமாக 66 கோடி ரூபாய் அளவிற்கு (இதுவும்கூட அடித்த கொள்ளையில் சிறுதுளிதான்) சொத்துக் குவித்ததாக வழக்கு தொடரப்பட்டது. இப் பொழுது இந்த கமிசன் 45 சதவீதமாக உயர்ந்து விட்டதென்றால், ஜெயா-சசி கும்பலிடம் வரு மானத்திற்கு அதிகமாக குவிந்துள்ள சொத்து மதிப்பு எத்தனை ஆயிரம் கோடியைத் தொட் டிருக்கும்? சொத்துக் குவிப்பு வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெயா-சசி கும்பல் உச்சநீதி மன்றத்தில் பிணையைப் பெறு வதற்காக தலைமை நீதிபதி தத்துவிற்கு 100 கோடி ரூபாய் அளவிற்கு இலஞ்சம் கொடுத் திருக்கிறது என அம்பலமாகியிருக்கும் செய்தி, தமிழகத்தில் ஜெயா-சசி கும்பல் நடத்திவரும் ஊழல் கொள்ளையை உறுதிப்படுத்துகிறது. இந்த இலட்சணத்தில் ஜெயாவும் அவரது பினாமிகளும் சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து கர்நாடகா உயர்நீதி மன்றத்தால் விடுவிக்கப்பட்டிருப்பது மாபெரும் கேலிக் கூத்து தவிர வேறென்ன?

● குமார்

# நீதியே, உன் விலை என்ன?

## நீதித்துறையின் புனிதத்தை நிர்வாணமாக்கிக் காட்டிய புர்ரட்ச்சித் தலைவியின் சாகச வரலாறு!

2001-ஆம் ஆண்டில் ஜெயா மீண்டும் தமிழக முதல்வராக அமர்ந்தவுடன், அவருக்கு எதிராக நடந்துவந்த ஊழல் குற்ற வழக்குகள் அனைத்தையும் சட்டமன்றத் தீர்மானம் ஒன்றின் மூலம் மூட்டை கட்டிவிடலாம் என அப்பொழுது ராதாபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக (சுயேட்சை) இருந்த அப்பாவு கோரிக்கை வைத்திருக்கிறார். இதனை நிராகரித்த ஜெயா, ''தான் இந்த வழக்குகளை நீதிமன்றத்தில் சந்தித்து நிரபராதியாக வெளியே வருவேன்'' எனத் தன்னடக்கத்தோடு கூறியிருக்கிறார். தொலைக்காட்சி விவாதங்களில் இந்தச் சம்பவத்தை நினைவுகூர்ந்து, அம்மாவைச் சட்டத்திற்கும் நீதிக்கும் தலைவணங்கும் கண்ணியமிக்கவராகக் காட்டுகிறார்கள், அ.தி.மு.க.வினர். இது மட்டுமல்லாமல், உச்சநீதி மன்றம் எந்தவிதமான நிபந்தனையின்றிப் பிணை வழங்கியபோதும், தனக்குத் தானே நிபந்தனை விதித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்த பெருந்தகையாக ஜெயாவிற்கு மகுடம் சூட்டி வருகிறார்கள்.

சொத்துக் குவிப்பு வழக்கு உள்ளிட்டு நாற்பதுக்கும் மேற்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் ஜெயா மீது சுமத்தப்பட்டன. ''வாடா, வா, உன்னைக் கவனிச்சுக்கிறேன்'' என்ற விதத்தில் தான் இந்த வழக்குகளை அவர் நீதிமன்றத்தில் சந்தித்தாரேயொழிய, சட்டப்படியெல்லாம் அவர் நடந்து கொள்ளவில்லை. ''சொத்துக் குவிப்பு வழக்கை ஜெயா நீதிமன்றத்தில் எதிர்கொண்ட விதத்தை முழுவதுமாக விளக்கினால், அது கிரிமினல்களுக்குச் சாதகமாகப் போய்விடும் என்பதனால், அதனை நான் அதிகம் விளக்கவில்லை'' என சொத்துக் குவிப்பு வழக்கின் அரசு வழக்குரைஞர் ஆச்சார்யா தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவரது கூற்று மிகையானதல்ல. ஜெயா, தன் மீது தொடரப்பட்ட வழக்குகளில் சிலவற்றைச் சந்தித்த விதத்தை கீழே தொகுத்துக் கொடுத்துள்ளோம். கிரிமினல் கும்பலுக்குத் தலைவியாக இருக்கும் தகுதியை மட்டுமே கொண்டவர் ஜெயா என்ற உண்மையை அவை உங்களுக்குப் புரிய வைக்கும்.

ஜெயாவின் முதல் தவணை ஆட்சியின் பொழுது (1991-96) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வெளிநாடுகளிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்ததில், 100 கோடி ரூபாய்க்கு மேல் ஜெயா - சசி கும்பல் இலஞ்சம் வாங்கியது, ஜெயா பதவியில் இருந்த பொழுதே அம்பலமாகியது. மறைந்த தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி இந்த ஊழலை விசாரிக்க தொடுத்த வழக்கில், உயர்நீதி மன்ற நீதிபதி இலட்சுமணன், நிலக்கரியை இறக்குமதி செய்யக் கூடாது என இடைக்காலத் தடை விதித்தார்.

ஜெயா, இந்த இடைக்காலத் தடையை சட்டத்தின் பொந்துகளில் புகுந்து உடனடியாக உடைத்துவிட்டாலும், தனக்கு எதிரான இந்த ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுவிடும் எனபீதியடைந்து போயிருந்தார்; நீதிபதி இலட்சுமணன் வேறு சில வழக்குகளில் அரசுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியிருந்ததால், அவரை மிரட்டிப் பணிய வைப்பது என்ற சூழ்ச்சியை மேற்கொண்டது ஜெயா - சசி கும்பல்.

இச்சதியின்படி நீதிபதி இலட்சுமணனின் மருமகன் மீது கஞ்சா - கள்ளச்சாராயம் வியாபாரத்தில் ஈடுபட்டதாகப் பொய் வழக்கு சோடிக்கப்பட்டு, அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இது பொய்வழக்கு என்பது விரைவிலேயே அம்பலமாகி, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டாலும், ஜெயா கும்பலின் நோக்கம் நிறைவேறியது. ''நீதிமன்றத்துக்கு வெளியே நடக்கும் சில சம்பவங்கள் தன்னைப் பாதிப்பதாக'' க் கூறி, நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கை விசாரிப்பதில் இருந்து நீதிபதி இலட்சுமணன் விலகிக் கொண்டார்.

● 1996-இல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிய தி.மு.க., ஜெயா மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க, சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தது. இச்சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டதை எதிர்த்து ஜெயா தொடர்ந்த வழக்கில் அப்பொழுது சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த லிபரான் ''சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது சட்டப்படி செல்லும்'' எனத் தீர்ப்பளித்தார். இதனால் ஆத்திரமடைந்திருந்த ஜெயா, தனது ஆதரவோடு நடந்துவந்த பா.ஜ.க. கூட்டணி அரசில் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி லிபரானை சென்னை உயர்நீதிமன்றத்தில் இருந்து வேறு மாநிலத்திற்குத் தூக்கியடித்து பழி தீர்த்துக் கொண்டார். ஜெயாவின் பொருளாதாரக் குற்றங்களை விசாரித்து வந்த மற்றொரு நீதிபதி, ஜெயாவின் நிர்ப்பந்தங்களுக்கு பணிய மறுத்ததால், அசாமுக்கு மாற்றப்பட்டார்.

● கொடைக்கானல் ''ப்ளஸண்ட் டே'' விடுதி ஊழல் வழக்கில், ஜெயாவிற்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டதற்காக கோவை வேளாண் பல்கலைக்கழக மாணவிகளான ஹேமலதா, கோகிலவாணி, காயத்ரி ஆகிய மூவரும் அ.தி.மு.க. காலிகளால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். 2001-இல் நடந்த தமிழக

சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்ற பின்பு இந்த வழக்கின் போக்கே தலைகீழாக மாறியது. அ.தி.மு.க. குண்டர்களின் மிரட்டலுக்குப் பயந்து, 22 அரசு சாட்சிகளும் குற்றவாளிகளுக்குச் சாதகமாக பல்டியடித்தனர். இதனால் கொல்லப்பட்ட கோகிலவாணியின் தந்தை வீராச்சாமி, இந்த வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். 2001 இறுதியில் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கின் விசாரணை, அ.தி.மு.க. அரசின் இழுத்தடிப்புகளால் ஒன்றரை ஆண்டுகள் நடந்தது. ''இவ் வழக்கை சேலத்திற்கு மாற்றியும், சீனிவாசன் என்ற குற்றவியல் வழக்குரைஞரை அரசு வழக்குரைஞராக நியமித்தும்'' சென்னை உயர்நீதி மன்றம் 22.08.03 அன்று தீர்ப்பளித்தது.



டான்சி வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெயாவைச் சட்டத்தை வளைத்து விடுதலை செய்த நீதிபதி தினகர்.

எனினும், வழக்குரைஞர் சீனிவாசனுக்குப் பணி நியமன உத்தரவு வழங்காமல் இழுத்தடித்ததன் மூலம், சேலம் நீதி மன்றத்தில் இவ்வழக்கு விசாரணை நடைபெற முடியாமல் முடக்கி வைத்தது, அ.தி.மு.க. அரசு. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வெளியாகி 14 மாதங்கள் ஆன பிறகும் கூட வழக்குரைஞர் சீனிவாசனுக்குப் பணி நியமன உத்தரவு வழங்கப்படாததை எதிர்த்து, கோகிலவாணியின் தந்தை மீண்டும் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இந்த வழக்கு விசாரணையின் பொழுது, மூன்று மாணவிகள் எரித்துக் கொல்லப்பட்ட மூல வழக்கைக் குழிதோண்டிப் புதைத்துவிடும் நோக்கத்தோடு, ''மூல வழக்கின் கேஸ் கட்டு காணாமல் போய்விட்டது; அதனை டிச.2003-இலிருந்து தேடிக் கொண்டிருக்கிறோம். புதிதாகக் கேஸ் கட்டுத் தயாரிக்கக் கால அவகாசம் வேண்டும்'' எனக் குண்டைத் தூக்கிப் போட்டது தமிழக அரசு.

சொத்துக்குவிப்பு வழக்கில் சட்டவிரோதமான முறையில் ஜெயாவின் பினாமி கம்பெனிகளை விடுவித்து தீர்ப்பளித்த நீதிபதி அருணா ஜெகதீசன்.



இப்படி அ.தி.மு.க.வால் அரசு அதிகாரத்தோடு உருவாக்கப்பட்ட எல்லா தடைகளையும் மீறி அக்கட்சியைச் சேர்ந்த 28 குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட பிறகும் கூட, ஜெயா ''நீதி''க்குத் தலை வணங்கவில்லை. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளின் குடும்பங்களுக்குப் பல இலட்ச ரூபாய் கருணைத் தொகை ஏற்பாடு செய்து கொடுத்ததன் மூலம், நீதிமன்றத் தீர்ப்பை எள்ளி நகையாடி விட்டார்.

● தமிழக முதல்வர் என்ற பதவியைப் பயன்படுத்தித்தான் அடித்தக் கொள்ளையைப் பகிரங்கமாகக் காட்டிக் கொள்ளும் விதமாக, தனது வளர்ப்புப் ''பிராணி'' சுதாகரனின் திருமணத்தை 1995-ஆம் ஆண்டின் இறுதியில் நடத்தினார் ஜெயா. அந்தத் திருமணம் தொடர்பாக நடந்து வந்த அதிகார முறைகேடுகளைத் தடுத்து நிறுத்தும்படி கோரி, பல வழக்குரைஞர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இவ்வழக்கு விசாரணையின் பொழுது, ''வழக்குத் தொடுத்தவர்களுக்கு மட்டுமல்ல, தனக்கே என்ன பாதுகாப்பு?'' என நீதிபதி புலம்பியதிலிருந்தே, நீதிபதிகள் - நீதிமன்றங்கள் மீதான ஜெயாவின் 'பாசத்தை'ப் புரிந்து கொள்ள முடியும். ''அதிகார முறைகேடுகள் நடந்திருந்தாலும், அவற்றுக்கு முதல்வர் ஜெயா பொறுப்பல்ல'' எனத் தீர்ப்பெழுதி, தனது தோலைப் பாதுகாத்துக் கொண்டார், நீதிபதி.

● டான்சி நில பேர ஊழல் வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தபொழுதே அதில் தலையிட்டது, சென்னை உயர் நீதி மன்றம். இவ்வழக்கிலிருந்து ஜெயாவை விடுதலை செய்த உயர்நீதி மன்ற நீதிபதி தங்கராசு, ''டான்சி நிலத்தை வாங்கியதில் ஜெயா எவ்வித மோசடியிலும் ஈடுபடவில்லை; மாறாக, வழக்குதான் மோசடியானது'' எனப் பொருள்படும்படி தனது தீர்ப்பை அளித்தார். நீதிபதி தங்கராசு, அ.தி.மு.க.வின் மந்திரி ஒருவரின் சிபாரிசின் பின்னணியில்தான் நீதிபதி பதவியைப் பெற்றார் என்பதும்; டான்சி நிலபேர வழக்கில் தீர்ப்புக் கொடுக்கும் முன் உல்லாசச் சுற்றுலாவாக சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்பதும் பின்னர் அம்பலமாகியது.

நீதிபதி தங்கராசின் தீர்ப்பை எதிர்த்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு வந்தபொழுது, ''தனி நீதிமன்றத்தில் 80 சதவீத அளவு விசாரணை முடிவடைந்துவிட்ட நிலையில், அதில் உயர்நீதி மன்றம் தலையிட்டிருக்க வேண்டாம் என்று நாங்கள் கருதுகிறோம். இது எங்கள் தீர்ப்பு அல்ல; கருத்துதான். உங்கள் கட்சிக்காரர் (ஜெயா) மீண்டும் சிறப்பு நீதிமன்ற விசாரணையைச் சந்திக்க விரும்புகிறாரா?'' எனக் குற்றவாளியிடமே தீர்ப்பைச் சொல்லும் உரிமையை வழங்கினார்கள் நீதிபதிகள்.

டான்சி நில பேர ஊழல் வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பெற்ற ஜெயா, அத்தண்டனையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதி தினகர், ''டான்சி நிலம், அரசு சொத்தே அல்ல; அரசு ஊழியர், அரசு சொத்தை வாங்கக் கூடாது என்பது நன்னடத்தைக் குறித்த

விதிமுறைதானேதவிர, சட்டமல்ல'' எனச்சட்டத்தையே வளைத்து, புதிய விளக்கம் கொடுத்து, ஜெயாவை வழக்கில் இருந்தும், தண்டனையிலிருந்தும் விடுதலை செய்தார். நீதிபதி தங்கராசு தீர்ப்புக்கு முன் சிங்கப்பூர் சென்று வந்தார்; நீதிபதி தினகர் தீர்ப்புக்குப் பின் ஒரு மாத ஓய்வில் போனார்.

நீதிபதி தினகரின் தீர்ப்பை எதிர்த்த வழக்கில், உச்ச நீதிமன்றத்தில் நடந்த விசாரணையும், அதனின் தீர்ப்பும் மிகவும் விநோதமாக அமைந்தன. சேது சமுத்திர திட்டம் தொடர்பாக தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்த ''பந்த்''-ஐ தடை செய்து ஞாயிற்றுக்கிழமை கூடி தீர்ப்பு அளித்த உச்சநீதி மன்றம், டான்சி நில பேர வழக்கில் விசாரணை முடிந்த பிறகும், தீர்ப்பு வழங் காமல் 14 மாதங்கள் இழுத்தடித்தது. அதன்பின் வந்த தீர்ப்போ, ஜெயாவின் விடுதலையை உறுதி செய்ததோடு, அவரின் மனசாட்சியிடம் மண்டியிட்டது.

''முதல் குற்றவாளியான ஜெயலலிதா குற்றமிழைத் திருக்கிறாரா, இல்லையா என்கிற உண்மைக்கு அப்பாற் பட்டு, அவர் தமது மனசாட்சிக்குப் பதில் அளிக்கும் வகையில் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். எவ்வித நிபந்தனையும் இன்றி டான்சி நிலத்தைத் திருப்பிக் கொடுப்பதே பரிகாரமாக அமையும்.'' - இப்படிப்பட்ட தீர்ப்பை எழுதிய வெங்கடராம ரெட்டி, ராஜேந்திரபாபு என்ற இரு நீதிபதிகளுக்கு ஜெயாவிடமிருந்து என்ன பரிகாரம் கிடைத்ததோ, அது அந்த ''ராமனுக்கு''த்தான் தெரியும்!



நிதியமைச்சர் அருண் ஜெட்லி போயசு தோட்டத்தில் ஜெயாவைச் சந்தித்த சில நாட்களிலேயே அவர் வருமான வரி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.
காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதையல்ல இது.

● சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூரு சிறப்பு நீதிமன்றத் தில் நடந்துவந்தபோது, ஜெயா-சசி கும்பலின் லெட்டர் பேடு கம்பெனிகளை அவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் எனக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தது, ஜெயா-சசி கும்பல். இந்த வழக்கு பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்திற்குத் தெரியாமல் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்ததையும்; இந்த வழக்கை விசாரிக்கும் அதிகாரம் சென்னை உயர்நீதி மன்றத்திற்குக் கிடையாது என்பதையும் ஒதுக்கித் தள்ளி விட்டு, இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது சென்னை உயர்நீதி மன்றம். இந்த வழக்கில் அரசு வழக்குரைஞராக பவானி சிங் கிற்குப் பதிலாக, வேறொரு அ.தி.மு.க. கைக் கூலி வழக்குரைஞர் ஆஜரானதையும் சென்னை உயர்நீதி மன்றம் அனுமதித்தது. இப்படி சட்ட விரோதமான முறையில் நடத்தப்பட்ட இவ் வழக்கில் நீதிபதி அருணா ஜெகதீசன் அந்த லெட்டர் பேடு கம்பெனிகளை வழக்கிலிருந்து விடுவித்துத் தீர்ப்பளித்த கேலிக்கூத்தும் அரங் கேறியது.




● சொத்துக் குவிப்பு வழக்கைப் போலவே, வருமான வரி வழக்கிலிருந்தும் ஜெயா-சசி கும்பல் விடுவிக்கப்பட்டிருப்பது விநோதங் களும் மர்மங்களும் நிறைந்தது. 2014 நாடாளு மன்றத் தேர்தல்கள் நடைபெறவிருந்த சமயத்தில் வருமான வரி வழக்கை மூன்று மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டு மென உத்தரவிட்டது உச்சநீதி மன்றம். பின்னர் தேர்தல்கள் நடைபெறவிருப்பதைக் காட்டி விசாரணைக்காலத்தை நீட்டிக்க வேண்டுமென ஜெயா கேட்டுக் கொண்டவுடன் தனது தீர்ப்பையே மாற்றிக் கொண்டது உச்சநீதி மன்றம்.

இவ்வழக்கை விசாரித்த சென்னை பொருளாதாரக் குற்றவியல் நீதிமன்றம் நேரில் ஆஜராகுமாறு திரும்ப திரும்ப உத்தரவிட்டதை ஜெயாவும் சசியும் ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை. ஒருபுறம் வாய்தாவுக்கு மேல் வாய்தா வாங்கி நீதிமன்றத்தில் ஆஜராவதைத்தவிர்த்துவந்த ஜெயா, இன்னொருபுறம் பா.ஜ.க. அரசில் தனது நண்பரான அருண் ஜெட்லி நிதியமைச்சராக நியமிக்கப்பட்டதைப் பயன்படுத்திக் கொண்டு இந்த வழக்கையே குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியில் இறங்கினார். வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யாத குற்றத்திற்கு உரிய அபராதம் செலுத்த தயாராக இருப்பதாக ஜெயா-சசி கும்பல் வருமான வரித் துறைக்கு மனுச் செய்ய, அந்த மனுவை ஏற்றுக் கொள்வதாக நிதியமைச்சகம் தடாலடியாக அறிவிக்க, வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் வேறுவழியின்றி வழக்கை முடித்து வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இவ்வழக்கில் சிறைக்குச் செல்ல வேண்டிய ஜெயா-சசி கும்பல் பா.ஜ.க. அரசின் தயவால் அபராதத் தொகையைச் செலுத்திவிட்டுத் தப்பித்துக் கொண்டது.

•••

ஜெயா வழக்கைச் சந்தித்த விதம் ஒவ்வொன்றும் சட்டம், நீதித்துறை ஆகியவற்றின் வரம்பு மற்றும் கையாலாகாத்தனத்தை மட்டும் அம்பலப்படுத்தவில்லை. அதற்கும் அப்பாற்பட்டு, இன்றைய அதிகார அமைப்பில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் உள்ளிட்டு யாரையும் எந்த விலை கொடுத்தும் வாங்க முடியும் என்றும் அவர் எடுத்துக் காட்டிவிட்டார். ஜெயா போன்ற சாதி, பணம், அரசியல் செல்வாக்கு கொண்ட கிரிமினல்களை இன்றுள்ள சட்டம், நீதித்துறை ஆகியவற்றைக் கொண்டு தண்டித்துவிட முடியாது எனப் புரட்சியாளர்கள் கூறிவருவதை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களைக்கூட, சட்டத்திற்கு சவால் விடும் தனது நடவடிக்கைகளின் மூலம் திணறடித்து வருகிறார், அவர். அந்த வகையில் ஜெயா புர்ரட்ச்சி தலைவிதான்!

• திப்பு

# “தனியார் பள்ளி தாலி அறுக்குது, அரசுப் பள்ளி அனைத்தும் வழங்குது!”

## – அரசுப் பள்ளியில் மாணவர்களைச் சேர்க்கக் கோரி பு.மா.இ.மு.வின் பிரச்சாரம்



அரசுப் பள்ளிகளைவிட மேலானதாகவும் தரமானதாகவும் முன்நிறுத்தப்படும் தனியார் பள்ளிகள் அனைத்தும் மூன்றாம் தரமான பகற்கொள்ளைக் கூடாரங்களாக வளர்ந்து நிற்பதை நாம் புதிதாக நிறுவ வேண்டிய அவசியமில்லை. அப்பள்ளிகளில் பயிலும் ஒவ்வொரு மாணவனின் பெற்றோரும் தமது சொந்த அனுபவத்தில் இந்தப் பகற்கொள்ளையை அனுபவித்து வருகிறார்கள். பன்முகத் திறமைகளோடு வளர வேண்டிய இளம் பிராயத்து மாணவர்களின் ஆளுமையைச்சிதைத்து, அவர்களை வெறும் மார்க் எடுக்கும் இயந்திரங்களாக மாற்றும் சித்திரவதைக் கூடங்கள்தான் மெட்ரிக் பள்ளிகள் என்பதும் மறுக்கவியலாத வகையில் அம்பலமாகிவிட்டது. சுய சிந்தனை, சமூக விழுமியங்களைக் கற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக சுயநலன், போட்டி மனப்பான்மை, சமூக அக்கறையற்ற போக்குகளை வளர்த்துவிடும் கொட்டடிகளாக உள்ள தனியார் பள்ளிகள், இதன் மூலம் கல்வியின் நோக்கத்தையே சிதைத்து வருகின்றன.

மெட்ரிக் பாடத்திட்ட முறை காலாவதியாகிப் போன பிறகும்கூட, தமது பள்ளிகளின் பெயர்களில் மெட்ரிக் என்ற வார்த்தையைப் போட்டுக்கொண்டு பெற்றோர்களை ஏமாற்றும் மோசடியில் ஈடுபட்டு வருகின்றன, தனியார் பள்ளிகள். இப்படி தமது இலாபத்திற்காக நானாவிதமான முறைகேடுகளையும் - சட்டவிரோதமாகக் கட்டணக் கொள்ளையை நடத்துவது தொடங்கி பொதுத் தேர்வுகளில் மாணவர்களை காப்பி அடிக்கத் தூண்டுவது, இலஞ்சம் கொடுத்து தேர்வுக் கண்காணிப்பாளர்களை விலைக்கு வாங்கி வினாத்தாட்களை அவுட் செய்வது வரை - செய்யத் தயங்காத மெட்ரிக் பள்ளிக்கூடங்கள், கல்வியை, ஒழுக்கத்தைப் போதிக்கும் தகுதியை இழந்து நிற்கின்றன.

எனினும், தமிழகப் பெற்றோர்களை ஆட்டிப் படைக்கும் ஆங்கில வழிக் கல்வி மோகம் காரணமாகத் தனியார் மெட்ரிக் பள்ளிகள் மீதான ஈர்ப்பு குறையவில்லை. அரசால் வழங்கப்படும் இலவசப் பொருட்

களைப் பெறுவதற்கு எவ்விதத் தயக்கமும் காட்டாத சாதாரண உழைக்கும் மக்கள்கூட, அரசால் வழங்கப்படும் இலவசக் கல்வியை ஒதுக்கித் தள்ளும் மனோபாவத்தில் சிக்கிக் கொண்டுள்ளனர். அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களும் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்களை எடுப்பது நிரூபணமான பிறகும், அரசுப் பள்ளிகளைக் கேவலமாக ஒதுக்கித் தள்ளும் போக்கு தமிழக மக்களை ஆட்டிப் படைத்து வருகிறது.

அரசுப் பள்ளிகளில் காணப்படும் கட்டமைப்புக் குறைபாடுகளைக் காட்டி தனியார் பள்ளிகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதைப் பெற்றோர்கள் நியாயப்படுத்துகின்றனர். கல்வித் துறையை மென்மேலும் தனியார்மயமாக்கத் துடிக்கும் அரசும், இதற்கேற்ப அரசுப் பள்ளிகளின் கட்டமைப்புகளை, கற்பித்தல் திறனை மேம்படுத்துவதை உதாசீனப்படுத்தி, பெற்றோர்களைத் தனியார் கல்விக் கொள்ளையர்களை நோக்கித் தள்ளிவிடுகிறது.




தாய்ப் பாலுக்குப் புட்டிப்பால் இணையாகாது என்பது போலவே, அரசுப் பள்ளிகளுக்கு மாற்றாகத் தனியார் பள்ளிகளையும், தாய்மொழி வழிக் கல்விக்கு மாற்றாக ஆங்கில வழிக் கல்வி முறையையும் முன்னிறுத்த முடியாது. அரசுப் பள்ளிகளின் வீழ்ச்சி என்பது நமது கல்வியுரிமை பறிக்கப்படுவதை எடுத்துக் காட்டும் வெளிப்பாடாகும். இந்த உரிமையை நாம் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தக் கோரி நாம் போராட வேண்டும். தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தக் கோருவதற்குப் பதிலாக கல்வி தனியார்மயமாக்கப் படுவதை எதிர்த்துப் போராட வேண்டும்.

இக்கோரிக்கையை முன்னிறுத்திப் பல்வேறு போராட்டங்களைத் தமிழகமெங்கும் நடத்தியிருக்கும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, பள்ளிகள் திறக்கவுள்ள இச்சமயத்தில் அரசுப் பள்ளிகளில் தமது குழந்தைகளைச் சேர்க்கப் பெற்றோர்களை வற்புறுத்தும் பிரச்சார இயக்கத்தைத் தமிழகமெங்கும் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையமும், மாணவர்கள் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும் இணைந்து விருத்தாசலம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மிதிவண்டிப் பேரணியை நடத்தின.

08.05.2015 அன்று விருத்தாசலம் நகரின் பல்வேறு பகுதிகளிலும்; 19.05.2015 அன்று தே.பவழங்குடி தொடங்கி கருவேப்பிலங்குறிச்சி வரையிலும் உள்ள கிராமங்களிலும் இம்மிதிவண்டிப் பேரணி நடத்தப்பட்டது. விருத்தாசலம் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் தமிழ்மணி, கம்மாபுரம் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பஞ்சநாதம்; கீரமங்கலம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியை ம.தமிழ்ச்செல்வி; காவனூர் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி ஆசிரியைகள் லட்சுமி, ரேகா, மோகன்தாஸ்; தே.பவழங்குடி திருவள்ளுவர் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பொன்னிவளவன்; மன்னம்பாடி அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் த.ஆ.வீரபாண்டியன்; திரு வி.க.நகர் அரசு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் புதுப்பேட்டை அரசு நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் இப்பேரணிக்கு வாழ்த்துத் தெரிவித்ததோடு, இவர்களுள் சிலர் பேரணியிலும் கலந்து கொண்டனர். குறிப்பாக, ஆசிரியர்கள் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு மோர், எலுமிச்சை பானங்கள், பிஸ்கெட் போன்றவற்றை வழங்கி தமது ஆதரவை முழுமனதோடு தெரிவித்தனர்.

ஒன்றாம் வகுப்பு தொடங்கி எட்டாம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவர்கள் கலந்துகொண்ட இப்பேரணியில், ''ஆஹா, அரசுப் பள்ளி! ஐயோ, தனியார் பள்ளி!'', ''தனியார் பள்ளி தாலி அறுக்குது, அரசுப் பள்ளி அனைத்தும் வழங்குது!'' ''அரசு வேலை இனிக்குது, அரசுப் பள்ளி கசக்குதா?'' என எழுப்பப்பட்ட முழக்கங்கள் பகுதிவாழ் மக்கள் மத்தியில் கல்வி தனியார்மயமாக்கப்பட்டிருப்பதன் அவலங்களைப் பதியச் செய்து, அரசுப் பள்ளிகளின் அவசியத்தையும்; இலவசக் கல்வி பெறுவது நமது அடிப்படை உரிமை என்பதையும் ஆணித்தரமாக எடுத்து வைத்தது.

● ஆர்.ஆர்.

### அம்பேத்கர் - பெரியார் படிப்பு வட்டத் தடையை எதிர்த்து பரவும் போராட்டம்:

# பார்ப்பனத் திமிருக்கு விழுந்த செருப்படி!

''நண்டு கொழுத்தால் வளையில் தங்காது'' என்பார்கள். மோடி அரசு பதவியில் அமர்ந்துவிட்டதால், பார்ப்பன ஆதிக்கம் கோலோச்சும் சென்னை ஐ.ஐ.டி. நிர்வாகத்திற்கு மேலும் கொழுப்பு கூடிவிட்டது. ஐ.ஐ.டி. மாணவர்களால் நடத்தப்படும் 'அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம்' என்ற அமைப்பின் அங்கீகாரத்தை தடை செய்து, இந்த அமைப்பு இனி ஐ.ஐ.டி.யின் பெயரையோ அந்த வளாகத்தையோ பயன்படுத்தக்கூடாது என்றும் ஐ.ஐ.டி. நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவுக்குக் காரணம் ஒரு மொட்டைக் கடுதாசி!

''கர்ணன் கவச குண்டலத்துடன் பிறந்தான்'' என்பதைப் போல, ஆர்.எஸ்.எஸ். என்பது, பிறக்குபோதே வதந்தி, மொட்டைக் கடுதாசி ஆகிய அணிகலன்களுடன் பிறந்த அமைப்பு. அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்தின் செயல்பாடுகளைக் கருத்து ரீதியாக எதிர்கொள்ளும் துணிவில்லாத இக்கும்பல், பேடித்தனமாக ஒரு மொட்டைக் கடுதாசியைத் தயாரித்து, போர்ஜரி சர்டிபிகேட் புகழ் ஸ்மிருதி இரானிக்கு அனுப்பியிருக்கிறது.

''தாழ்த்தப்பட்ட-பழங்குடியின மாணவர்களை சாதி ரீதியாகப் பிளவுபடுத்துகிறார்கள். இந்தியை எதிர்க்கிறார்கள். ஐ.ஐ.டி.க்குள் சைவ உணவுக்குத் தனி உணவகம் வைப்பதை எதிர்க்கிறார்கள். மோடி அரசுக்கும் இந்துக்களுக்கும் எதிராக வெறுப்பைப் பரப்புகிறார்கள்'' - இவைதான் மொட்டைக்கடுதாசி கூறும் குற்றச்சாட்டுகள்.

இந்தக் கடிதம் கிடைத்த பதினைந்தே நாட்களில், ''மொட்டைக் கடுதாசியில் கடுமையான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளதால், இதற்குப் பதிலளிக்குமாறு'' மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ஐ.ஐ.டி. இயக்குநருக்கு தாக்கீது அனுப்பியதுடன், படிப்பு வட்டத்தின் துண்டறிக்கையில் காணப்படும் 'கடுமையான' வரிகளை அடிக்கோடிட்டும் காட்டியிருக்கிறது. அந்த துண்டறிக்கை, நிலப்பறி சட்டம் உள்ளிட்ட மோடியின் கார்ப்பரேட் கைக்கூலித்தனங்களைப் பட்டியலிடுகிறது. ''இந்து மதத்தை அழிக்காமல் சாதியை அழிக்க முடியாது'' என்று கூறிய அம்பேத்கரை கள்ளத்தனமாகப் பயன்படுத்தும் ஆர்.எஸ்.எஸ். ஐ சாடுகிறது.

மனித வள மேம்பாட்டுத்துறையின் தாக்கீது வந்த மறுகணம், இதற்காகவே காத்திருந்த ஐ.ஐ.டி. நிர்வாகம், ''தாங்கள் வழங்கிய சலுகைகளை கேடாகப் பயன்படுத்திய காரணத்துக்காக படிப்பு வட்டத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்வதாக'' அறிவித்தது.

இச்செய்தி நாளிதழ்களின் முதல் பக்கத்தில் வெளிவந்து, எதிர்ப்புப் போராட்டங்கள் தொடங்கியவுடனேயே பார்ப்பனக் கும்பலின் முகவிலாசம் அம்பலமாகத் தொடங்கியது. ஐ.ஐ.டி. ஒரு தன்னாட்சி நிறுவனம் என்றும், அதன் நடவடிக்கையில் மோடி அரசு எந்த விதத்திலும் தலையிடவில்லை என்றும் ஸ்மிருதி இரானி ஆங்கிலத் தொலைக்காட்சியில் சத்தியம் செய்தார். அதே நேரத்தில் தமிழ் தொலைக்காட்சிகளுக்குப் பேட்டி கொடுத்த எச்.ராஜா, ''இவர்களைத் தடை செய்ய வேண்டும் என்று 6 மாதம் முன்பே நான் ஐ.ஐ.டி. இயக்குநரிடம் வலியுறுத்தினேன். இது மிகவும் தாமதமான நடவடிக்கை'' என்று கூறி, சங்க பரிவாரத்தின் குட்டை உடைத்தார்.

எதிர்ப்பு வலுக்க வலுக்க பார்ப்பனக் கும்பல் முன்னுக்குப் பின் முரணாக உளறத் தொடங்கியது. ஐ.ஐ.டி. யின் பெயரையும் சின்னத்தையும் அனுமதியின்றி பயன்படுத்தியதனால்தான் தடை விதித்ததாக ஒரு கேலிக்கூத்தான காரணத்தை நிர்வாகம் கூறியது. பிறகு இது இடைக்காலத்தடை தான் என்று ஜகா வாங்கியது.



சென்னை - ஐ.ஐ.டி. வளாகத்தில், அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்ட மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

தடை தொடர்பாக மாணவர்கள் வெளியிட்டுள்ள மறுப்பு அறிக்கையும், வினவு தளத்தில் வெளிவந்துள்ள ஒருங்கிணைப்பாளர் ரமேஷின் பேட்டியும் ஐ.ஐ.டி. நிர்வாகத்தின் பொய்களையும், அது சங்க பரிவாரத்தின் உறுப்பாகவே இயங்குவதையும் விவரங்களோடு அம்பலப்படுத்துகின்றது.

உள்ளே விவேகானந்தா ஸ்டடி சர்க்கிள் என்ற ஆர்.எஸ்.எஸ்.

சார்பு அமைப்பு நடத்தும் கூட்டங்களில் குரு மூர்த்தி, கிரண்பேடி, அரவிந்தன்நீலகண்டன் உள்ளிட்டோர் பங்கேற்று இந்துத்துவ பிரச்சாரம் செய்துள்ளனர். இக்கூட்டங்களை ஐ.ஐ.டி. நிர்வாகம் ஸ்பான்சர் செய்திருக்கிறது. 2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு வளாகத்துக்குள்ளேயே பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரம் நடந்துள்ளது. மேடையிலிருந்தே கிரண்பேடி ஓட்டுக் கேட்டிருக்கிறார். பல்வேறு பெயர்களில் இயங்கும் இந்துத்துவ மாணவர் அமைப்புகளுக்கு அலுவலக அறை உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கம் வாரம் தோறும் பஜனை நடத்துகிறது. இவர்கள் அனைவரும் ஐ.ஐ.டி. மாணவர்கள் என்ற பெயரில் தான் இயங்குகின்றனர். யாரும் இவற்றுக்கு நிர்வாகத்திடம் முன் அனுமதி பெறுவதில்லை.


திருச்சி சட்டக்கல்லூரி வளாகம்:
மோடிக்கு விழுந்த செருப்படி!

இந்துத்துவப் பிரச்சாரம் மட்டுமல்ல, மோடியின் கார்ப்பரேட் கொள்ளைக்கு ஆதரவான கூட்டங்கள் மூலம் மாணவர்களைக் கார்ப்பரேட் அடியாட்களாக தயார்படுத்துவதும் அங்கே தொடர்ந்து நடக்கிறது. இதற்கும் மக்களின் வரிப்பணத்தை வாரி விடுகிறது ஐ.ஐ.டி. நிர்வாகம்.

அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்தைப் பொருத்தவரை, அவர்கள் ஐ.ஐ.டியின் சின்னத்தைப் பயன்படுத்தியதாக கூறுவது பொய். தமது துறை பேராசிரியர்கள் உதவியுடன் கூட்டங்கள் நடத்துவதற்கு வகுப்பறைகளை மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார்கள். எல்லாக் கூட்டங்களையும் மாணவர்களின் நன்கொடையை வைத்தே நடத்தியிருக்கிறார்கள். மோடியின் நிலப்பறி சட்டத்துக்கு எதிராக, சங்கப் பரிவாரத்தின் கர் வாப்ஸியை அம்பலப்படுத்தி, மாட்டுக்கறி தடையை எதிர்த்து, மோடியின் தொழிலாளர் சட்ட திருத்தத்தை எதிர்த்து - என இவர்கள் நடத்திய கூட்டங்கள் அனைத்துமே பார்ப்பன பாசிசக் கும்பலைப் பீதிக்குள்ளாக்கியிருக்கின்றன. ஐ.ஐ.டி. வளாகத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்தும், சைவ உணவுக்காரர்களுக்காக தனி உணவகங்கள் அமைக்குமாறு ஸ்மிருதி இரானி வெளியிட்ட உத்தரவை எதிர்த்தும் பிரச்சாரம் செய்திருக்கின்றனர்.

பகத்சிங் பிறந்த நாள் கூட்டத்தை ஐ.ஐ.டி. நிர்வாகத்தின் சார்பில் நடத்த வேண்டுமென்று படிப்பு வட்டத்தின் மாணவர்கள் முன் வைத்த போது, ''பகத்சிங் எல்லா மாணவர்களாலும் ஏற்றுக் கொள்ளத்தக்க பொதுவான நபராக இருக்க மாட்டார்'' என்று கூறி ஐ.ஐ.டி. நிர்வாகம் மறுத்திருக்கிறது. மிகவும் முக்கியமாக, சென்ற ஆண்டு இந்த படிப்பு வட்டம் தொடங்கியவுடனேயே, மாணவர்களுக்கான டீன் என்ற பொறுப்பில் நியமிக்கப்பட்டிருக்கும் சிவக்குமார், ''பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் பெயர்கள் சமூகத்தை பிளவுபடுத்தும் தன்மையுடையனவாக'' இருப்பதால் பெயரை மாற்றக் கோரியிருக்கிறார். மறுத்து வாதாடத் தொடங்கிய மாணவர்களிடம், இது நிர்வாகத்தின் உத்தரவு என்று எச்சரித்திருக்கிறார். உத்தரவுக்கு அம்மாணவர்கள் கீழ்ப்படியவில்லை.

இதுதான் இப்பிரச்சினையின் துவக்கம். ''அம்பேத்கர், பெரியார் பெயரை வைக்காதே'' என்று கூறுவது பார்ப்பனத் தீண்டாமை வெறி என்பதை விளக்கத் தேவையில்லை. ஐ.ஐ.டி. ஆசிரியர்களிலும், மாணவர்களிலும் ஆகப்பெரும்பான்மையினர் அவாள்தான். அந்தத் பார்ப்பனத் திமிரும், டில்லியிலும் சென்னையிலும் தங்கள் ஆட்சி தான் என்ற திமிரும் சேர்ந்துதான் அவர்களை ஆட்டம் போட வைக்கிறது.

ஐ.ஐ.டி. என்பது பார்ப்பனக் கும்பலின் அப்பன் வீட்டு சொத்தோ, அவர்களுக்கு வழங்கப்பட்ட சர்வமானியமோ அல்ல. இது மக்கள் சொத்து. இவர்களுடைய அறிவால் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் எந்தப் பயனும் விளைவதில்லை. மக்களின் வரிப்பணத்தில் வயிறையும் அறிவையும் வளர்த்துக் கொண்டு, படித்து முடித்த மறு கணமே, பன்னாட்டுக் கம்பெனிப் பதவிகளில் அமர்ந்து கொண்டு இந்தியாவைக் கொள்ளையடிக்கத் திட்டம் தீட்டித்தரும் துரோகிகள் இவர்கள்.

இன்று ஐ.ஐ.டி. பார்ப்பனக் கும்பலும் அவர்களுக்குப் பக்கபலமாக நிற்கும் பார்ப்பன பாசிசக் கும்பலும் தங்களது கொழுப்பின் காரணமாக மக்கள் விரோதிகளாக அம்பலப்பட்டு நிற்கிறார்கள். முதல் பதிலடியை பெரியார் பிறந்த மண்ணான தமிழகம் கொடுத்திருக்கிறது. சென்னை ஐ.ஐ.டி.யில் தடை செய்யப்பட்ட அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம் இன்று பல ஐ.ஐ.டி.க்களிலும் பல்கலைக் கழகங்களிலும் தொடங்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் பார்ப்பன பாசிசத்துக்கு எதிரான போர்க் குரல்கள் கிளம்புகின்றன.

தனது கூட்டணிக் கட்சிகளுடைய ஆதரவைக்கூடப் பெற முடியாமல் தமிழகத்தில் பாரதிய ஜனதா தனிமைப் படுத்தப்பட்டிருக்கிறது. மோடி வெல்லப்பட முடியாத சக்தி என்ற பிரமை உடைகிறது. ஒரே ஆண்டுக்குள் மோடியின் கொடும்பாவி எரிகிறது. செருப்படி விழுகிறது. இது துவக்கம்தான். எனினும், இந்த துவக்கத்துக்காக தமிழகம் நிச்சயமாகப் பெருமை கொள்ளலாம்.

• அஜித்

# மோடியின் ஓராண்டு ஆட்சி:

# ஒப்பனை கலைந்தது!

**ஊதிப்பெருக்கப்பட்ட விளம்பரத்துடன் ஆட்சிக்கு வந்த மோடி கும்பலின் வெற்றுச் சவடால்கள் ஓராண்டுக்குள் பல்லிளித்து மக்களின் கடும் அதிருப்திக்கும் வெறுப்புக்கும் ஆளாகி நிற்கிறது.**

ஊடகங்களாலும் இந்துத்துவப் பரிவாரங்களாலும் ஊதிப்பெருக்கப்பட்ட மோடி அலை இப்போது புஸ்வாணமாகிவிட்டது. கடந்த மே 26 அன்று இரண்டாமாண்டில் அடியெடுத்து வைத்த மோடியின் ஆட்சியானது, நாடு முழுவதும் கடும் அதிருப்தியையும் வெறுப்பையும்தான் எதிர்கொண்டிருக்கிறது.

ஜெர்மானிய ஏகபோக முதலாளிகள் பாசிச இட்லரை விளம்பரப்படுத்தி அதிபராக்கியதைப் போலவே, இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் மோடி என்ற பிம்பத்தை ஊதிப் பெருக்கி 'வளர்ச்சியின் நாயகனாக' விளம்பரப் படுத்தினர். முந்தைய காங்கிரசு கூட்டணி ஆட்சியின் பிரதமரான மன்மோகன் வளர்ச்சியைச் சாதிக்கத் தெரியாதவர், திறமையில்லாதவர் என்று குற்றம் சாட்டி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வளர்ச்சியைக் கொண்டுவருவோம் என்ற பொய்களின் ஒளிவெள்ளத்தில் நாட்டு மக்களின் கண்களைக் குருடாக்கி மோடி கும்பல் ஆட்சியைக் கைப்பற்றியது. அவர் பதவியேற்றதும் நல்ல காலம் பொறக்குது என்று பா.ஜ.க.வும் அதன் கூலிப் படையாக வேலை செய்யும் ஊடகங்களும் கோயபல்சு பாணியில் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டன.



கடந்த 2008-ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார மந்தத்திலும் நெருக்கடியிலும் அமெரிக்க - ஐரோப்பிய பொருளாதாரங்கள் சிக்கிக் கொண்டிருப்பதோடு, சந்தை வற்றிப்போய் அந்நாடுகளின் ஆளும் கும்பலே எதை உற்பத்தி செய்வது, எங்கே சந்தையைத் தேடுவது, யாரிடம் விற்பது என்று புரியாமல் தடுமாறும் போது, அந்நாட்டின் ஏகபோக முதலாளிகள் இந்தியாவில் வந்து முதலீடு செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது கேழ்வரகில் நெய் வடிந்த கதைதான். இந்தியாவைவிட பெருமளவு மனித வளத்தையும் அடிக்கட்டுமான வலிமையையும் ஏற்றுமதிக்கான சந்தையையும் பெற்றுள்ள சீனா, ஏற்கெனவே இத்திசையில் பயணப்பட்டு நெருக்கடிகள் முற்றி நகர முடியாமல் தவிக்கும்போது, நான் வானத்தை வளைக்கப் போகிறேன், மணலைக் கயிறாகத் திரிக்கப் போகிறேன் என்று கோமாளித்தனமாக வெற்றுச்சவடால் அடித்து ஆரவாரம் செய்தது மோடி கும்பல்.

முந்தைய காங்கிரசு கூட்டணி ஆட்சியை விஞ்சும் வகையில் நாட்டை மீண்டும் காலனியாக்குவதைத் தீவிரப்படுத்தினால், ஏகாதிபத்தியவாதிகளின் நம்பிக்கையைப் பெற்று முதலீடுகளை ஈர்த்து வளர்ச்சியைச் சாதித்துவிடலாம் என்று மனப்பால் குடித்தது.

தொழிலாளர் போராட்டங்கள், தொழிற்சங்கச் சட்டங்கள் முதலான சிக்கல்கள் இருப்பதால்தான், அந்நிய முதலீடு வரவில்லை என்று கூறி, தொழிலாளர் உரிமைகளைப் பறித்து தொழிலாளர் சட்டத் திருத்தம்; சாதகமான இடத்தில் தொழில் தொடங்க நிலம் இல்லாததால்தான் முதலீடுகள் வரவில்லை என்று கூறிக் கொண்டு விளைநிலங்களை விவசாயிகளிடமிருந்து பறிக்க நிலம் கையகப்படுத்தல் அவசரச் சட்டம், காடுகளையும் கனிம வளங்களையும் கார்ப்பரேட் முதலாளிகள் சூறையாடுவதற்கேற்ப சுற்றுச்சூழல் சட்டவிதிகள் திருத்தம், வங்கி- காப்பீடு துறை மற்றும் இராணுவத் துறையிலும் அந்நிய நேரடி முதலீட்டுக்கு தாராள அனுமதி, கோடிகோடியாய் வரிச்சலுகைகள் - என இந்தியாவை பட்டாபோட்டுக் கொடுப்பதாக உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளிடம் மோடி கும்பல் சத்தியம் செய்து கொடுத்தது. ஆனாலும் முதலீடுகள் வரவில்லை.

ஆரவாரமாக அறிவிக்கப்பட்ட ''மேக் இன் இந்தியா'' திட்டத்தின் மூலம் ஏகாதிபத்திய நாடுகளின் சந்தைக்காக மலிவு விலையில் பொருளுற்பத்தியையும் அயல்பணிகளையும் செய்து தருவதாக வாக்குறுதி அளித்து, உலக நாடுகளெங்கும் மோடி சுற்றுப்பயணம் செய்து கார்ப்பரேட் முதலாளிகளை

அழைத்த போதிலும் குறிப்பிடும்படியாக எந்த அந்நிய முதலீடும் வரவில்லை. எல்லா வகையிலும் கரணம் அடித்துப் பார்த்தாலும் இந்தியப் பொருளாதாரம் ஒரு அங்குலம் கூட நகராமல் முடங்கி நிற்கிறது. புதிய நகரங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் சாலைப்பணிகள் உள்ளிட்ட அடிக் கட்டுமானத் திட்டங்களுக்கு பட்ஜெட்டில் ரூ.2.5 லட்சம் கோடி நிதிஒதுக்கீடு செய்தும், தனிநபர் வருமான வரி, சுங்கவரி, கலால்வரி ஆகியற்றில் மேலும் பல்லாயிரம் கோடிக்கு வரி விலக்குகள் அளித்தும், அதன் மூலம் இந்திய கார்ப்பரேட் முதலாளிகளுக்கு வாரிக் கொடுத்த போதிலும் குறிப்பிடும்படியான எந்த வளர்ச்சியும் இல்லை. மோடி கும்பல் அறிவித்த எட்டு சதவீத பொருளாதார வளர்ச்சி என்பது புஸ்வாணமாகிவிட்டது.



மண்ணைப் பறித்து மக்களைக் கொல்லும் தேசத்துரோகி மோடி கும்பலின் நிலம் கையகப்படுத்தல் திருத்தச் சட்டத்தை எதிர்த்து டெல்லியில் விவசாயிகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

ஏற்கெனவே பல ஆசிய நாடுகள் சூடுபட்டுள்ள நிலையில், இது நடைமுறைக்கு ஆகாத திட்டம் என்றும், ஏற்கெனவே இது இந்தியாவில் வேறு பெயரில் செயல்படுத்தப்பட்டு பயனளிக்காத கொள்கை என்றும் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன் வெளிப் படையாகவே மோடியின் மேக் இன் இந்தியா திட்டத்தை விமர் சித்துள்ளார். ஆளும் வர்க்கத்தின் ஒருபிரிவு, மோடியின் திட்டங் களால் ஈர்க்கப்படாமல், அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

திவாலாகி நிற்கும் இன்றைய உலகப் பொருளாதாரச் சூழலில் என்ன செய்வது என்று ஏகாதிபத்தியவாதிகளே தத்தளிக்கும்போது, அந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத அடிமுட்டாள்களான மோடி கும்பல், அந்த யதார்த்த நிலையை மீறி எதுவும் செய்ய முடியாமல் இப்போது கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறது. தனது தோல்வியை மறைக்கவும், பொருளாதாரத் தாக்குதல்களால் குமுறிக் கொண்டிருக்கும் மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும் இந்துவெறித் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டும், போராடும் மக்களின் மீது அரசு பயங்கரவாத அடக்குமுறையைக் கட்ட விழ்த்துவிட்டும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சிக்கிறது.

தனது தோல்விகளை மறைத்து, ஒரு மந்திரவாதியைப் போல எல்லோருடைய கவனமும் தன்பக்கம் இருக்க வேண்டுமென்ப தற்காக ஓயாமல் தன்னைப் பற்றியும் தன்னுடைய பராக்கிரமங் களைப் பற்றியும் தேர்ந்த நடிகரைப் போல பஞ்ச் டயலாக்குகளை அவிழ்த்துவிட்டு நாட்டு மக்களின் காதில் பூச்சுற்றுவதுதான் மோடி கும்பலின் முதன்மை வேலையாகிப் போனது. சினிமாவுக்கு கவர்ச்சியாக டைட்டில் வைப்பதைப் போல, புதுப்புது திட்டங் களை மோடி கும்பல் ஆரவாரமாக அறிவித்த போதிலும், அது எந்த வகையிலும் மக்களை ஈர்க்கவில்லை.

அப்புறம் வேறு எதைத்தான் மோடியின் சாதனையாகக் காட்டுவது?

மோடியின் ஆட்சியில் கடந்த நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி.) அதிகரித்துள்ளதாகவும், அதில் செலவுகளின் அளவு குறைந்துள்ளதாகவும் பா.ஜ.க. பெருமை யுடன் கூறுகிறது. ஆனால், மொ.உ.உற்பத்தி தொடர்பான மதிப் பீட்டு முறையில் தில்லுமுல்லு செய்துள்ளதால்தான் இந்த உயர்வு என்று முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்களே உண்மையைப் போட்டு உடைத்துள்ளனர். மேலும், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலைச்சரிவால்தான் செலவுகள் குறைந்துள்ள தாகக் காட்ட முடிந்துள்ளதேயன்றி, மோடியின் நிர்வாகத் திறமையால் செலவுகள் குறைய வில்லை என்பதும் அம்பலமாகிவிட்டது.

கடந்த ஓராண்டில் ஊழலற்ற ஆட்சியை அளித்துள்ளதாக மார்தட்டிக் கொள்ளும் மோடி, நாடறிந்த ஊழல் கிரிமினலான ஜெயா மீண்டும் முதல்வராகியுள்ளதற்கு வாழ்த்து தெரிவிக் கிறார். ஜெ.கும்பலின் பதவியேற்பு விழாவில் பங்கேற்று தமிழக வளர்ச்சிக்கு துணிச்சலும் திற மையும் உள்ள ஜெ.முதல்வராக வேண்டுமென் கிறார் பொன்.ராதாகிருஷ்ணன். நிதியமைச் சரான அருண் ஜெட்லி ஜெயலலிதாவைச் சந்தித்த பிறகு ஜெ. கும்பலின் வருமான வரி வழக்கை ஊத்திமூடிவிட்டு, ஜெ. கும்பலுடன் சமாதான சகவாழ்வு நடத்திக் கொண்டே ஊழல் எதிர்ப்பு சவடால் அடிக்கும் மோடி கும்பலின் பித்தலாட்டம் நாறிப்போயுள்ளது.

எல்லாவகையிலும் தோல்வியடைந்து அம் பலப்பட்டு தனிமைப்பட்டுப் போயுள்ள நிலையில், ஆட்சிக்கு வந்த ஓராண்டுக்குள் வளர்ச்சியைச் சாதிக்கத் துடிக்கும் மோடியை அவசரக் குடுக்கைத்தனமாக விமர்சிப்பது சிறு பிள்ளைத்தனமானது என்று பார்ப்பன ஊடகங் களின் உபதேசத்தை ஏற்று இன்னமும் மோடி கும்பலை சகித்துக் கொண்டிருப்பதா, அல்லது என்னென்ன துறைகளில் மோடியின் ஆட்சி சாதித்துள்ளது, எதில் சாதிக்கவில்லை என்று மதிப்பெண் போட்டுக் கொண்டிருப்பதா, அல்லது இக்கும்பலை தூக்கியெறிந்து மக்கள் அதிகாரத்தை நிறுவுவதற்கான போராட்டப் பாதையில் செல்வதா என்பதே நாட்டு மக்கள் முன்நிற்கும் மையமான கேள்வி.

● மனோகரன்

# அரசு: 2

# அனைவருக்கும் பொதுவானதோ, ஜனநாயகமானதோ அல்ல!

**ஜனநாயகத்திலிருந்து மக்களை விலக்கி வைக்கும் கோடீசுவரர்களின் ஆட்சியாக**

ஐந்தாவதாக, இன்று எம்.எல்.ஏ. ஆக வேண்டுமென்றால் கூட, குறைந்தபட்ச தகுதி கோடீசுவரனாக இருக்க வேண்டும்; சட்ட மன்ற தேர்தலில் வேட்பாளராக நிற்க குறைந்தது 5 கோடி ரூபாய் செலவழிக்கத் தயாராக இருக்கவேண்டும். எல்லா தேர்தல் அரசியல் கட்சிகளும் இதை ஒரு விதியாகவே ஆக்கி விட்டன. அமெரிக்க மேல்நிலை வல்லரசு தலைமையிலான ஏகாதிபத்திய நலன்களுக்கு சேவை செய்வது, பருத்து கொழுத்த பன்னாட்டு நிறுவனங்களும் தரகு அதிகார வர்க்க முதலாளிகளும் நமது நாட்டின் வளங்களையும் அரசு சொத்துக்களையும் மக்களின் உழைப்புச் சக்தியையும் ஒட்டச் சுரண்டுவதற்கான முகவர்களாகச் செயல்படுவது, இந்த சேவைக்காக கார்ப்பரேட் முதலாளிகள் அடிக்கும் பகற்கொள்ளையில் ஒரு பங்கை பெற்றுக் கொள்வது - என்ற திருப்பணியைச் செய்வதற்காக யார் ஆட்சியில் இருப்பது என்ற ஒரேயொரு நோக்கத்திற்காக மட்டுமே எல்லா தேர்தல் அரசியல் கட்சிகளும் செயல்படுகின்றன. மற்றபடி, வேறு எந்த கொள்கையோ, இலட்சியமோ, நாட்டுப்பற்றோ இவர்களிடம் இல்லை.

பி.ஜே.பி., ஜெயலலிதாவின் கட்சி போன்ற சில கட்சிகள் பார்ப்பனியத்தை அரியணையில் ஏற்றுவது என்ற நோக்கோடு செயல்பட்டாலும், மேலே சொன்னவாறு கார்ப்பரேட் முதலாளிகள் பகற்கொள்ளையடிப்பதற்கோ, அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்திற்கு சேவை செய்வதிலோ இவர்களுக்கும் பிற தேர்தல் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் வேறுபாடு கிடையாது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா- லெ) லிபரேசன், சி.பி.ஐ., சி.பி.எம். போன்ற 'இடதுசாரி' கட்சிகள் அமெரிக்க மேலாதிக்கத்திற்கும் கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கும் எதிராக எடுக்கும் நிலைப்பாடுகள் சந்தர்ப்பவாதமாக இருக்கும் அதேவேளையில், இக்கட்சிகளின் மேல்மட்ட தலைவர்கள் உட்பட அடிமட்ட ஊழியர்கள் வரை பலர் இலஞ்ச இலாவண்யம், மோசடிகளில் ஈடுபடுபவர்களாகவும் இருக்கின்றனர். கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கு இவர்களின் தலைமையிலான அரசுகளே சேவை செய்பவையாகவும் இருக்கின்றன; மேலும், இவர்கள் ஏதாவது ஒரு ஆளும் வர்க்க / போனபாடிஸ்ட், காரியவாத, பிழைப்புவாத கட்சிகளின் கூட்டணியில் மாறி மாறி சந்தர்ப்பவாதமாகப் பங்கேற்கின்றனர். இவர்கள் சேர்ந்துள்ள கூட்டணி பதவிக்கு வந்து, அந்த அரசுகள் கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கான சாதனமாகச் செயல்படும்போதும் கூட்டணியிலிருந்து விலகாமல், மென்மையான விமர்சனங்களை வைத்து விட்டு தொடர்ந்து ஆதரித்து, தங்களால் முடிந்த வரை அரசு சன்மானங்களைப் பெற்றுக் கொள்வதிலும் பதவி சுகம் காண்பதிலும் திருப்தி கொள்கிறார்கள். இவ்வாறு இவர்களும் ஆளும் வர்க்க / பிழைப்புவாத கட்சிகளின், கோடீசுவரர்களின் கையாட்களாக செயல்படுகின்றனர்.

கோடீசுவரர்கள்தான் வேட்பாளர்களாக நிறுத்தப்படுகிறார்கள்; நிற்க முடியும் என்பதோடு, தனியார்மய தாராளமயம்-உலகமயம் என்ற மறுகாலனியாதிக்கம் மிகவும் கருணையுடன் பேசும் தருணங்களில் கூட 'அனைவரையும் தழுவிய வளர்ச்சி' (Inclusive growth)

கல்விக் கொள்ளையர்களும், தொழில் அதிபர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஆக்கப்படும் அவலம்: (இடமிருந்து) தம்பிதுரை (அ.தி.மு.க.), ஜெகத்ரட்சகன் (தி.மு.க.), நிதின் கட்காரி (பா.ஜ.க.), நவீன் ஜிண்டால் (காங்கிரசு).



என்று கூறுகிறதேயன்றி பணக்காரர்களிடமிருந்து எடுத்து ஏழைகளுக்கு கொடுத்தல் என்பதையோ, நலிந்த பிரிவினருக்குச் சலுகைகள் வழங்கி கைதூக்கி விடுதல் என்பதையோ பேசுவதில்லை. இத்தகைய 'கொள்கை வழிபட்ட அரசியல்' அனைத்தையும் 'ஜனநாயகத்திலிருந்து' துடைத்தெறிந்து விட்டது. இதன்மூலம் வேறுபட்ட அரசியல் கொள்கைகளுக்காக வெவ்வேறு அரசியல் கட்சிகளின் பின்னால் மக்கள் அணிதிரளுதல், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அதனடிப்படையில் வாக்களித்தல் என்பதற்கான சாத்தியத்தையே நாடாளுமன்ற அரசியல் அரங்கிலிருந்து புதிய தாராளவாதம் எனப்படும் மறுகாலனியாதிக்கப் போக்கு நீக்கி வருகின்றது.

**கோடீசுவரர்கள்தான் வேட்பாளர்களாக நிறுத்தப்படுகிறார்கள்; நிற்க முடியும் என்பதோடு, மறுகாலனியாதிக்கம் மிகவும் கருணையுடன் பேசும் தருணங்களில்கூட 'அனைவரையும் தழுவிய வளர்ச்சி' (Inclusive growth) என்று கூறுகிறதேயன்றி, பணக்காரர்களிடமிருந்து எடுத்து ஏழைகளுக்கு கொடுத்தல் என்பதையோ, நலிந்த பிரிவினருக்குச் சலுகைகள் வழங்கி கைதூக்கி விடுதல் என்பதையோ பேசுவதில்லை.**

'சிறந்த அரசாளுமை' (good governance) என்பதே எல்லா அரசுகளின் நோக்கமாக இருக்க வேண்டுமெனவும் இப்போக்கு வரையறுத்துள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்களால் முன்தள்ளப்படும் புதிய தாராளவாத வகையிலான கட்டுமான சீர்திருத்தங்களைக் கறாராகவும் ஈவு இரக்கமின்றியும் அமுல்படுத்துவதையே சிறந்த அரசாளுமை என்று உலக முதலாளித்துவம் போற்றுகிறது. மேலும் 'சுயமாக' சுறுசுறுப்பாக இயங்கும் அரசு' (Proactive state) என்பதையும் மறுகாலனியாதிக்கத்திற்கு ஏற்ப சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவதில் 'தோல்வியுற்ற அரசாக' (failed state) இருக்கக் கூடாது என்பதையும் முன்தள்ளுகிறது.

சிறந்த அரசாளுமை, நல்லாட்சி போன்ற முழக்கங்களையே இன்று எல்லா ஓட்டுக் கட்சிகளும் வரித்துக் கொண்டு விட்டன. இதற்காக உலகவங்கி போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்கள் தமது அரசுக்கு அளிக்கும் சான்றிதழையும் பெருமையுடன் விளம்பரப்படுத்திக் கொள்கின்றன. மேல்நிலை வல்லரசுகளால் திணிக்கப்பட்ட இந்த கட்டுமான சீர்திருத்தங்களின் எல்லைக்குள் நின்றுதான் நாடாளுமன்ற அரசியலில் முதலாளித்துவக் கட்சிகள் தமக்குள் மோதிக் கொள்கின்றன. இவைகளுக்கிடையில் வேறுபாடுகளே இல்லாத நிலைமையில், தேர்தல் போட்டியும் மாறுபட்ட கொள்கைகளுக்கு இடையிலான மோதலாக இல்லை. மாறாக, தனிநபர் பற்றிய குணாதிசயங்கள், திறமைகள், அவர்கள் செய்த இலஞ்சம் மற்றும் பிற முறைகேடுகள், மோசடிகள், சேர்த்த சொத்துக்கள் ஆகியவற்றை முதன்மைப்படுத்துகின்ற, நபர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியாகவே தேர்தல்கள் இருக்கின்றன.

கொள்கைகளைப் பேசி ஓட்டுக்களைப் பெறுவதற்குப் பதிலாக, பணத்தையும் பொருட்களையும் இலஞ்சமாகக் கொடுத்து ஓட்டுக்களைப் பொறுக்கும் கிரிமினல் வேலையாக முதலாளித்துவ தேர்தல் முறை மாறிவிட்டது.



கொள்கை வேறுபாடுகள் அற்றுப் போனதால் அரை நிலப்பிரபுத்துவ சமூகத்தின் சாபக்கேடுகளான சாதி, மதவெறி ஆகியவற்றைத் தூண்டி விட்டும், இலவசத் திட்டங்களை அறிவித்தும், நேரடியாக ஓட்டுகளுக்கு விலை பேசியும்தான் ஓட்டுகள் அறுவடை செய்யப்படுகின்றன. அரசு அதிகாரத்திலிருந்து சொல்லிக் கொள்ளப்படுகிற ஜனநாயகத்தை வெளியேற்றி விட்டு, முதலாளித்துவ வர்க்கம் அதனைக் கைப்பற்றியிருப்பது போலவே, எல்லா முதலாளித்துவ அரசியல் கட்சிகளிலும் உட்கட்சி ஜனநாயகம் ஒழிந்து ஒரு கும்பல் அல்லது குடும்பத்தின் அதிகாரமாகச் சீரழிந்திருக்கிறது. அரசாளுமையிலிருந்து அரசியலை விலக்கிவிட்ட இந்த ஜனநாயகத்தில்தான் 'முறையாக' தேர்தல் நடத்தப்பட்டு, பல்வேறு கட்சிகள் மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சிக்கு வந்திருக்கின்றன.

இதற்கேற்ப தேர்தல் நடத்தை முறைகளையே கோடீசுவரர்களுக்கு மட்டும் உரித்தான ஒன்றாக, பரந்துபட்ட உழைக்கும் மக்களை அதிலிருந்து விலக்கி வைக்கின்ற நடத்தை முறைகளாக ஆளும் வர்க்கங்களே தேர்தல் கமிஷன்கள் மூலம் அமல் நடத்து



கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்பொழுது ஓட்டுக்களைப் பெறுவதற்காகப் பல்வேறு ஓட்டுக்கட்சிகளின் வேட்பாளர்கள் பதுக்கி வைத்திருந்த 195 கோடி ரூபாய் கைப்பற்றப்பட்டதாக அறிவித்தது, தேர்தல் கமிசன். தேர்தல் என்பது கருப்புப் பணத்திருவிழா என்பதன் சாட்சியம் இது.

கின்றன. சேஷன் இந்தியத் தேர்தல் தலைமை ஆணையாளராக இருந்த காலத்திலிருந்து இவ்வாறு தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை சேஷனின் விசேட திறமை, தேர்தலை நேர்மையாக நடத்த வேண்டும் என்ற அவரது இலட்சியம், அதாவது ஒரு தனிநபரின் முன்முயற்சி என்ற கோணத்தில் பார்க்கக் கூடாது. மாறாக, ஆளும் வர்க்கம் மறுகாலனியாதிக்க கொள்கைகளுக்கேற்ப அரசு, தேர்தல் முறை ஆகியவற்றில் கொண்டு வந்துள்ள பொது மாற்றங்கள் என்று இதைப் பார்க்க வேண்டும்.

இன்னொரு பக்கம், முதலாளித்துவ தேர்தல் ஜனநாயகத்தில் சீரழிவும், ஊழல்களும், ரவுடித்தனமும், அராஜகங்களும், முறைகேடுகளும், மோசடிகளும், சந்தர்ப்பவாதங்களும், பிழைப்புவாதங்களும் மலிந்து நாறுவது என்பது அதிகரித்துக் கொண்டே போகிறது. இத்துடன் மறுகாலனியாதிக்க கொள்கைகள் புகுத்தப்பட்டதைத் தொடர்ந்து எல்லா சமூக மதிப்பீடுகளும் அறநெறிகளும் தூக்கியெறியப்பட்டு வருகின்றன. இதன் தாக்கம் ஏற்கெனவே நாறிக் கொண்டிருக்கும் முதலாளித்து தேர்தல் ஜனநாயகத்திலும் ஏற்பட்டு, தேர்தல் ஜனநாயக நடைமுறைகள் மீதும், முதலாளித்துவ ஜனநாயகத்தின் மீதும் மக்களிடையே வெறுப்பும் அவநம்பிக்கையும் அதிகரித்து வருகின்றன. இதன் விளைவாக, இந்த சமூக அமைப்பு மற்றும் முதலாளித்துவ தேர்தல் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை யிழந்து புரட்சிகர இயக்கங்களின் பக்கம் மக்கள் திரும்புவதைத் தடுக்கும் நோக்கிலும் ஆளும் வர்க்கங்கள் தேர்தல் கமிசனைக் கொண்டு கடுமையான தேர்தல் நடத்தை விதிகளைக் கட்டவிழ்த்துவிட்டு வருகின்றன.

ஆனால், தேர்தல் கமிஷனின் நடத்தை விதிகள் எந்த விதத்திலும் மக்களுக்குப் பணம் கொடுத்தல், பிரியாணி, பீர் விருந்துகள், அன்பளிப்புகளை வழங்குதல், ஆட்சிக்கு வந்தால் இலவசங்களை வாரி வழங்குவோம் என்று கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு அறிவித்து மக்களை ஈர்த்தல், சாதிய உணர்வுகளைத் தூண்டியும் ரவுடித்தனத்தில் ஈடுபட்டும் ஓட்டுப் பொறுக்குதல் போன்ற நடைமுறைகளைத் தடுக்கவில்லை; மாறாக இவை கனஜோராகவே நடந்து கொண்டிருக்கின்றன, அதிகரித்து வருகின்றன என்று 2009 நாடாளுமன்றத் தேர்தலும், குறிப்பாக திருமங்கலம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலும் நிரூபித்துள்ளன. சில கட்சி வேட்பாளர்களிடமிருந்து பணத்தைப் பறிமுதல் செய்வதும், தேர்தல் நடத்தை விதிகளை மீறிவிட்டதாக அமைச்சர்கள் உட்பட பலபேர் மீது ஆயிரக்கணக்கான வழக்குகளைப் பதிவு செய்வதும், பிறகு தேர்தல் முடிந்தவுடன் இந்த வழக்குகளை அப்படியே விட்டு விடுவதும்தான் நடைமுறையாக உள்ளது. யாரும் தண்டிக்கப்படுவதில்லை. பதவியும் பறிக்கப்படுவதில்லை.

முன்பெல்லாம் தேர்தல் என்பது சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை எல்லா உழைக்கும் மக்களும் கலந்து கொள்ளும் பிரச்சார முறைகளைக் கொண்டதாக, அவர்களால் மேற்கொள்ளக்கூடிய பிரச்சார முறைகள் எல்லாம் அனுமதிக்கப்பட்டு, இரவு பகலாக ஒரு இரண்டு மாத காலத்திற்கு திருவிழா போல நடைபெறும்; கட்சித் தொண்டர்கள் அங்கும் இங்கும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார்கள்; ஆனால், மறுகாலனியாதிக்க கொள்கைகளுக்கேற்ப இன்று தேர்தல் என்பது கோடீசுவரர்கள் மட்டுமே பங்கேற்கக்கூடிய, அவர்களால் மேற்

**முன்பெல்லாம் தேர்தல் என்பது சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை எல்லா உழைக்கும் மக்களும் கலந்து கொள்ளும் பிரச்சார முறைகளைக் கொண்டதாக இருந்தது. ஆனால், மறுகாலனியாதிக்க கொள்கைகளுக்கேற்ப இன்று தேர்தல் என்பது கோடீசுவரர்கள் மட்டுமே பங்கேற்கக்கூடிய, அவர்களால் மேற்கொள்ளக்கூடிய பிரச்சார நடைமுறைகள் மட்டுமே கொண்டதாக மாற்றப்பட்டு விட்டது.**

கொள்ளக்கூடிய பிரச்சார நடைமுறைகள் மட்டுமே கொண்டதாக மாற்றப்பட்டு விட்டது. தொலைக்காட்சி நிறுவனம் நடத்த, செய்திப் பத்திரிகைகள் நடத்த அல்லது அவைகளில் விளம்பரம் செய்ய, கார்களில் பவனி வர ஆற்றல் கொண்டவர்கள் மட்டுமே, அதாவது கோடீசுவர வேட்பாளர்கள் மட்டுமே பங்கேற்கும் வண்ணம் தேர்தல் முறைகள் மாற்றப்பட்டு விட்டன.

கொள்கை, கோட்பாடு என்று எந்த வெங்காயமுமின்றிக் ஓட்டுக்கட்சிகள் அனைத்தும பிழைப்புவாதக் கட்சிகளாக மாறிவிட்ட நிலையில், பிரியாணியுடன் நாள் ஒன்றுக்கு ரூ. 200 கொடுத்தால்தான் வேலை செய்யும் 'தொண்டர்களை'க் கொண்டதாகவே இவைகள் மாறிவிட்டன. பணப்பட்டுவாடா உட்பட பல முறைகேடுகளை ஒழித்து நேர்மையான தேர்தலை நடத்துவது என்ற முகாந்திரத்தில் 85 விழுக்காடு உழைக்கும் மக்கள் தேர்தலில் பங்கேற்பது உட்பட பிரச்சாரத்தில் ஈடுபடுவது வரை தேர்தல் நடைமுறையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். பலாத்காரமாகத் தடுக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ஒரே வேலை வாக்களிப்பது மட்டுமே. அவ்வளவுதான்! அதுவும் தேர்தல் நடத்துவதற்கான காலம் குறுக்கப்பட்டு அவசரம் அவசரமாக நடத்தப்படுகின்றது. பத்து அல்லது 15 நாள் பிரச்சாரத்தில் தேர்தல் முடிந்து விடுகின்றது.



தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் என்பது குத்தாட்ட ஆபாச வக்கிரமாக மாறிப் போனது.

எப்படியாவது ஆட்சிக்கு வந்து கொள்ளையடிக்கவேண்டும் என்ற வெறி; ஆட்சியைப் பிடிக்க முடியாவிட்டாலும் நாலு சீட்டாவது ஜெயித்தால்தான் கட்சியையே தக்க வைத்துக் கொள்ள முடியும்; இல்லாவிட்டால் காக்காய்கள் கூட்டத்தில் கல்லெறிந்தது போல கட்சி நிர்வாகிகள் ஓடிப் போய் விடுவார்கள் என்ற பீதி ஆகிய 'உன்னத நோக்கங்களே' இன்று கட்சிகளை வழி நடத்துகின்றன. இந்த நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள எந்தவிதமான சந்தர்ப்பவாதத்திற்கும் அவமானத்திற்கும் அவமதிப்புகளுக்கும் இழிவுபடுத்தலுக்கும் எல்லாவிதமான பிழைப்புவாதங்கள், தகிடுதத்தங்களைச் செய்யவும் எல்லா தேசிய, பிராந்திய, சாதியக் கட்சிகளும் கூட்டணிகள் அமைத்துக் கொள்கின்றன. கொள்கை, இலட்சியம், தேசப்பற்று, சமூகப் பற்று போன்று எதுவும், எந்த மதிப்பீடும் அறநெறியும் இக்கட்சிகளிடம் இல்லை.

தேர்தலுக்கு முன்பு அமைக்கப்படும் கூட்டணிகள் தேர்தல் முடிந்தவுடன் கலைந்து புதிய கூட்டணிகள் அமையும்; தேர்தலுக்குத் தேர்தல் கூட்டணிகள் மாறும். அதேவேளையில், கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கு சேவை செய்வதிலும் தங்களது தலைமையிலான அரசுகளை அதற்கான கருவியாகப் பயன்படுத்துவதிலும், அதன்மூலம் எல்லாவிதமான முறைகளிலும் தங்களுக்கான சொத்துக்களைக் குவித்துக் கொள்வதிலும் இவர்கள் ஒன்றுபட்டு நிற்கின்றனர். ஆட்சி நடத்துகின்ற, அரசை இயக்குகின்ற கட்சிகளின் தன்மையில் இப்படிப்பட்ட மாற்றங்கள் நடந்துள்ளன.

இன்னுமொரு மாற்றம் என்னவென்றால், எல்லா முதலாளித்துவ தேர்தல் அரசியல் கட்சித் தலைவர்களும் தங்களது பினாமிகளின் (சாதிக் பாட்சா, பல்வா போன்ற பினாமிகளின்) பேரில் சுயநிதிக் கல்லூரிகள் நடத்துகிறார்கள்; ரியல் எஸ்டேட் தொழிலில் கோடிகோடியாகச் சொத்து சேர்க்கிறார்கள்; மணல் திருட்டு நடத்திக் கொள்ளையடிக்கிறார்கள்; கார்ப்பரேட் மருத்துவ மனைகளில் பங்குதாரர்களாக உள்ளனர். கனிமவள சுரங்கத் தொழில் நடத்திக் கொள்ளையடிக்கிறார்கள். சொந்த மாநிலத்தில் தொழில் நடத்தினால் தெரிந்து விடும் என்பதால் வெளிமாநிலங்களில் தொழில் நடத்துகிறார்கள். இவ்வாறு அரசியல்வாதிகள் முதலாளிகளாக மாறியுள்ளனர்.

இதன் மறுபக்கமாக முதலாளிகள், குறிப்பாக, அவர்களின் இளைய வாரிசுகள் இன்று அரசியல்வாதிகளாக மாறியுள்ளனர். முதலாளி வர்க்கத்திற்காக அவர்களின் அரசியல் பிரதிநிதிகள் ஆள்வது மாறி, முதலாளி வர்க்கத்தினரே இன்று நேரடியாக ஆட்சி செலுத்துவதும், முதலாளிகள், நிலப்பிரபுக்களால் சுரண்டப்பட்டு ஒடுக்கப்பட்டு வரும் ஏழைகள், தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோரின் மேம்பாட்டிற்காகவும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் 'சோசலிசம்', 'சமூக நீதி' போன்ற கொள்கைகளின் அடிப்படையில் வறுமை ஒழிப்பு, வேலையின்மை ஒழிப்பு போன்ற திட்டங்களைப் போட்டு அரசியல் சேவை செய்பவர்கள், தொண்டாற்றுபவர்கள் என்ற நிலை மாறி அவர்களே முதலாளிகளாக மாறி நேரடியாக சுரண்டுபவர்களாகவும் ஒடுக்குபவர்களாகவும் மாறிவிட்டனர்.

(தொடரும்)

# செய்தி தொலைக்காட்சி ஊடகங்கள்:

# பாலியல் வக்கிரக் கூடங்கள்!

உலக நிகழ்வுகளை வீட்டின் வரவேற்பறைக்குக் கொண்டுவரும் காட்சி ஊடகங்கள், அதிலும் குறிப்பாக செய்தித் தொலைக்காட்சிகள், எந்தவொரு விசயம் குறித்தும் மக்களிடையே ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. மக்களின் பிரச்சனைகளைப் பற்றியும் அவற்றிற்கான தீர்வுகள் குறித்தும் பேசுகின்ற, சமூக அக்கறை கொண்டவர்களாக, பெண்ணுரிமைப் போராளிகளாக இந்தத் தொலைக்காட்சிகள் தங்களை எப்போதும் விளம்பரப்படுத்திக் கொள்கின்றன. ஆனால், மேற்பார்வைக்கு முற்போக்கானது போலத் தோன்றும் இந்தச் செய்தித் தொலைக்காட்சிகளின் உண்மை முகமோ வேறு மாதிரி உள்ளது. குறிப்பாக, பெண் ஊழியர்களுக்கு இத்தொலைக்காட்சி நிறுவனங்கள் இழைத்துவரும் வக்கிரமான பல பாலியல் தொல்லைகள் அண்மையில் அம்பலமாகியுள்ளன.

வட இந்தியாவில் பிரபலமான செய்தித் தொலைக்காட்சி நிறுவனங்களில் ஒன்றான ‘‘ஜி-நியூஸ்’’ தொலைக்காட்சி நிறுவனம், தனது பெண் ஊழியர் ஒருவர் கருவுற்ற காரணத்திற்காக அவரை வேலையை விட்டு நீக்கியுள்ளது. இதுபற்றிக் கூறும் அந்த ஊழியர், தான் திருமணம் செய்து கொள்ளப்போவதை நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தும் முன்பு வரை தனது வேலையிலும் செயல்திறனிலும் குறையேதும் காணாத நிர்வாகம், திருமணம் செய்து கொள்ள விடுமுறைக்கு விண்ணப்பித்தது முதல் தன்னைக் குறிவைத்துத் தாக்கத் தொடங்கியதையும், தனது திருமணத்திற்கான விடுமுறையைக்கூட மிகப்பெரிய போராட்டத்திற்குப் பிறகு தான் வாங்க முடிந்ததையும் வேதனையுடன் கூறுகிறார். பின்னர், அவர் கருவுற்றிருப்பதை நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தியதும், அடுத்த இரு நாட்களில் அவரை வேலையை விட்டு நீக்கிவிட்டு, அதற்குக் காரணமாக, அவரது செயல்திறன் தாங்கள் எதிர்பார்த்தபடி இல்லை எனக் கூறி ஒரு கடிதத்தை முப்பது நாட்களுக்கு முன்னரே கொடுத்தது போல் முன்தேதியிட்டுக் கொடுத்துள்ளது, ஜி நியூஸ் தொலைக்காட்சி நிறுவனம். கர்ப்பிணிப் பெண்ணை வேலையை விட்டு நீக்கும் சட்டவிரோதச் செயலை மறைக்கவே இப்படியொரு மோசடிக் கடிதத்தை ஜி-நியூஸ் நிர்வாகம் தயாரித்துள்ளது. ‘‘சொல்வதெல்லாம் உண்மை’’ புகழ் ஜி-நியூஸ் நிறுவனத்தின் இந்த நடவடிக்கையானது, தொழிலாளர் நலச்சட்டத்திற்கு எதிரானது எனத் தொழிலாளர் தீர்ப்பாயமும், மும்பை தொழில்துறை நீதிமன்றமும் உத்தரவிட்ட பின்னரும், அதனை ஏற்றுக் கொள்ளாத ஜி-நியூஸ் நிறுவனம் மும்பை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது.

இதைவிட வக்கிரமான சம்பவம் டெல்லியிலுள்ள ‘‘இந்தியா-டி.வி.’’யில் செய்தி வாசிப்பாளரான தனு சர்மா என்ற பெண் ஊழியருக்கு நேர்ந்துள்ளது. அது குறித்துத் தனது முகநூலில் எழுதியுள்ள தனுசர்மா, இந்தியா-டிவியில் தான் வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்தே தன் மீதான பாலியல் சுரண்டலை உணர முடிந்ததாகக் கூறுகிறார். வேலைக்குச் சேர்ந்த முதலிரண்டு வாரங்களில் கனிவாக நடந்து கொண்டு நெருக்கமாகப் பழகிய தனது மேலாளரான அனிதா சர்மா, பின்னர் கட்டுப்பெட்டியாக இருக்காமல் வெளி உலகத்தைப் புரிந்துகொண்டு, கார்ப்பரேட் அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் தனிமையில் சந்திக்கும்படியும், தான் கூறியதை ஏற்றுக் கொண்டால் கை நிறைய சம்பளமும், பெயரும், புகழும் கிடைக்கும் என்று ஆசை வார்த்தைகளைக் கூறி இணங்கவைக்க முயற்சித்ததையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

இது குறித்து துறைத்தலைவரான எம்.என்.பிரசாத்திடம் தனு சர்மா முறையிட்ட போது, இதில் தவறேதும் இல்லை எனக் கூறிய அவர், மேலாளரான அனிதா சர்மா கூறுவதைக் கேட்டு நடக்குமாறு தனு சர்மாவை வற்புறுத்தியுள்ளார். ஆனால், தனு சர்மா அதற்கும் இணங்கவில்லை. அதன் பின்னர், துறைத் தலைவரான எம்.என்.பிரசாத்தைச் சந்தித்த போதெல்லாம், அவர் தனு சர்மாவை ஆபாசமான வார்த்தைகளால் திட்டியுள்ளார். அவர் அணிந்துவரும் உடை, சிகை அலங்காரம், பேச்சு வழக்கு - என அனைத்திலும் குற்றம் கண்டுபிடித்து, அவரைச் சாடியதுடன் இந்நிறுவனத்தினர் தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு அதிகாலை 4 மணி ஷிப்டில் அவரைப் போட்டுள்ளனர். அத்துடன் அவரது சிறுசிறு தவறுகளுக்கும் கூட மிகக் கேவலமான வார்த்தைகளைக் கொண்டு அனைவரது முன்னிலையிலும் அவரைத் திட்டி அவமானப்படுத்தியிருக்கிறது.

இந்தியா-டி.வி.யில் வேலைக்குச் சேர்ந்தபோது போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, நிர்வாகம் நினைத்தால் தனு சர்மாவை எப்போது வேண்டுமானாலும்

இந்தியா-டி.வி. நிர்வாகத்தின் விபச்சார தரகு வேலைக்கு இணங்க மறுத்து, அத்தொலைக்காட்சி அலுவலக வாயிலிலேயே விசம் குடித்து தற்கொலைக்கு முயற்சித்த செய்தி வாசிப்பாளர் தனு சர்மா.



வேலையை விட்டு நீக்கிவிட முடியும். ஆனால், அவராகவே விலகினால், அவர் நிர்வாகத்துக்கு 6 மாத சம்பளத்தைத் தந்துவிட்டுத் தான் வெளியேற முடியும். இதனால் தனு சர்மாவால் வேலையை விட்டு வெளியேறவும் முடியவில்லை. நிர்வாகத்தின் தொடர்தாக்குதலால் மனமுடைந்த அவர் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்து, கடந்த ஆண்டு ஜூலையில் இந்தியா-டி.வி.யின் அலுவலக வாயிலிலேயே விசம் குடித்துள்ளார். தொலைக்காட்சி நிர்வாகம் தன்னைத் தற்கொலைக்குத் தூண்டியதாக தனு சர்மா கொடுத்த புகார் குப்பையில் போடப்பட்டு, அவர்மீது இந்தியா-டி.வி.தொடுத்துள்ளமான நஷ்ட வழக்கு தற்போது நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுகிறது.




சன் நியூஸ் தொலைக்காட்சியில் வேலை பார்த்த பெண்களைப் பாலியல் தொந்தரவு செய்த அந்நிறுவனத்தின் தலைமை செய்தி ஆசிரியரான ராஜாவைக் கைது செய்து பணிநீக்கம் செய்யக் கோரி மனித உரிமை பாதுகாப்பு மையம் ஏப்ரல் 17,2013-இல் நடத்திய ஆர்ப்பாட்டம்.

முதலாளிகள், அதிகார வர்க்கம் - நீதித்துறையுடன் ஊடகத் துறையினருக்கு இணக்கமான உறவு இழையோடி நிற்பதால், பணத்துக்குச் செய்திகளை வெளியிட்டுக் கருத்தை உருவாக்கும் தரகு வேலையைச் சில பத்திரிகையாளர்கள் செய்வதைப் போல, இன்று சில தொலைக்காட்சி நிறுவனங்கள் இன்னும் ஒருபடி மேலே போய் விபச்சாரத் தரகர்களாக மாறி தங்களுக்குத் தேவையானதைச் சாதித்துக் கொள்கின்றனர். ‘‘வீக் என்ட் பார்ட்டி’’கள், ‘சோஷியலைசிங்’ முதலான கழிசடைக் கலாச்சாரத்தைத் தங்களது ஊழியர்கள் மத்தியில் பரப்பி விபச்சாரத்தை நிறுவனமயமாக்கி வருகின்றனர். இது பிடிக்காதவர்கள் அங்கிருந்து அவ்வளவு எளிதில் வெளியேற முடியாதபடிக்கு கடுமையான நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தங்கள் அவர்கள் வேலைக்குச் சேரும் போதே போடப்படுகின்றன. ‘‘உங்களை ஒரு பிராண்டாக ஆக்க பல லட்சங்களைச் செலவு செய்துள்ளோம்; எனவே, நீங்கள் இந்த நிறுவனத்தை விட்டு வெளியேறினால் அதற்கு ஈடான பணத்தைக் கொடுக்க வேண்டும்’’ என தொலைக்காட்சி நிறுவனங்கள் இதனை நியாயப்படுத்துகின்றன.

இத்தகைய சூழலில் தனது மேலாளர் பாலியல் வக்கிரப் பேர்வழியாக இருந்தாலும், அங்கு பணியாற்றும் பெண் ஊழியர்களால் அதை எதிர்த்துப் போராட இயலாத நிலைமைதான் உள்ளது. இதையும் தாண்டி ஒரு பெண் ஊழியர் தனக்குப் பாலியல் தொல்லை கொடுப்பதாக ஒருவர் மீது புகார் கூறினால், ‘‘நீங்கள் அவரைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளீர்கள். அவர் ரொம்ப நல்லவர்’’ என்று நைச்சியமாகவும், ‘‘நீ எந்த வகையிலும் பாலியல் தாக்குதலுக்கு ஆளாகாத போது, பிரச்சினையை ஏன் பெரிது படுத்துகிறாய் ? இது உனக்குத்தான் அவமானத்தைத் தேடித்தரும்’’ என்று அச்சுறுத்தியும் இந்த விவகாரம் நிர்வாகத்தால் அமுக்கப்படுகிறது.

செய்தித் தொலைக்காட்சி நிறுவனங்களில் உள்ள நியூஸ் ரூம் எனப்படும் செய்தி அறைகள் பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைக் கூடங்களாக உள்ளன என்று பத்திரிகையாளர் அமிர்த தத்தா கூறுகிறார். தொலைக்காட்சி நிறுவனங்கள், பெண்களை வெறும் அழகுப் பொருட்களாக மட்டுமே பார்ப்பதாகக் கூறும் அவர், பாலியல் தொந்தரவு குறித்த அவர்களது புகார்கள் எப்போதும் நிர்வாகத்தால் ஒதுக்கித் தள்ளப்படுவதாகக் கூறுகிறார்.

தமிழகத்தில் சன் நியூஸ் தொலைக்காட்சியில் வேலை பார்த்த பெண்களைப் பாலியல் தொந்தரவு செய்த அந்நிறுவனத்தின் தலைமை செய்தி ஆசிரியரான ராஜா, மற்றொரு அதிகாரி வெற்றிவேந்தன் ஆகிய இருவர் குறித்தும் அந்நிறுவத்தில் வேலை பார்த்த அகிலா என்ற பெண் ஊழியர் அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து ராஜா கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். அண்மையில் மற்றொரு பெண் ஊழியர் கொடுத்த புகாரின்படி சன் டிவியின் தலைமை அதிகாரி பிரவீன் கைது செய்யப்பட்டார். 2012 டிசம்பரில் டெல்லியில் நடந்த துணை மருத்துவ மாணவி மீது நடந்த கொடூரமான கும்பல் பாலியல் வன்முறையும், அந்த இளம் பெண்ணின் மரணமும் இந்தியாவை உலுக்கிய போது, பெண்ணுரிமைப் போராளிகளாகத் தங்களைக் காட்டிக்கொண்ட தொலைக்காட்சி நிறுவனங்கள் அனைத்தும் இத்தகைய சம்பவங்கள் அம்பலமாகும்போது கள்ள மவுனம் சாதிக்கின்றன. ஒரு திருடன் சக திருடனைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்பதுதான் இவர்கள் கடைபிடிக்கும் அறம்.

இந்தச் செய்தித் தொலைக்காட்சி நிறுவனங்களில் வேலைக்குச் சேர்வதற்கு ஒரு பெண்ணிற்கு இருக்க வேண்டிய முக்கிய தகுதியே அழகும் இளமையும் கவர்ச்சியும் தான். செய்தி வாசிப்பதற்குக்கூட தோற்றப் பொலிவான பெண்களைத்தான் இவர்கள் தேர்வு செய்கிறார்கள். இங்கே வேலை பார்க்கும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களும் இதற்குத் தகுந்தாற் போலத் தயாரிக்கப்படுகிறார்கள். கதைக்குத் தேவைப்படுதால் கவர்ச்சியாக நடிப்பதாகக் கூறும் நடிகைகளைப் போல, தான் ஒரு பண்டமாக விற்கப்படுவதை ஒப்புக்கொள்ளும் வகையில் அவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இந்தச் சீரழிவுக் கலாச்சாரத்தின் நீட்சிதான், இங்கே பணிபுரியும் பெண்கள் மீதான பாலியல் வன்முறையாக வெளிப்படுகிறது.

• அழகு

அவரது ஆட்சியில் எவ்வளவுதான் குற்றங்கள் நடந்திருந்தாலும், அவரே ஏதாவது தவறுகள் செய்திருந்தாலும், அவற்றையெல்லாம் மக்கள் மறந்துவிட்டார்கள்; என்னதான் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு அவர் தண்டனை பெற்றாலும் அவர்மீது மக்களுக்கு அனுதாபம்தான் பெருகியிருக்கிறது. அவரும் தமது கடந்தகாலத் தவறுகளில் இருந்து பாடங்கள் கற்றுக்கொண்டுவிட்டார்; திருந்தி விட்டார். இனிமேலும் மக்கள் நல, நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி மக்கள் ஆதரவைத் திரட்டிக் கொள்வார். தற்போதே தமிழ்நாட்டில் ஜெயலலிதா தன்நிகரற்ற தலைவர். அவரை யாரும் வெல்ல முடியாது. எதிர்க்கட்சிகளெல்லாம் செல்லாக் காசுகளாகி விட்டன'' என்று இடைவிடா தொடர் உருமிமேளம் கொட்டுகின்றன.




ஆனால், பார்ப்பன பாசிச வக்கிரங்களில் ஊறிப்போன ஜெயலலிதா திருந்தவே திருந்தாதவர் என்பதை ஒருமுறையல்ல, மூன்று முறை தமிழக மக்கள் அனுபவித்திருக்கிறார்கள். ஜெயா-சசி கும்பல் குவித்து வைத்திருக்கும் கள்ளப் பணத்தில் இருந்து வீசியெறியப்படும் எச்சிலுக்கு விலைபோன பார்ப்பன மற்றும் பிற பிழைப்புவாத ஊடகங்கள் வேண்டுமானால் அக்கும்பலின் அதிகார அக்கிரமங்களை மக்களிடமிருந்து மூடி மறைக்கலாம். ஜெயா-சசி கும்பலிடம் மீண்டும் மீண்டும் அரசியல் கூட்டு வைத்துகொண்டு ஆதாயம் அடைந்த போலி கம்யூனிசக் கட்சிகள் உட்பட பிழைப்புவாதிகள் வேண்டுமானால் மீண்டுமொருமுறை அத்தகைய வாய்ப்புக்காக நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு ஏமாந்து போகலாம். இந்தச் சக்திகளைவிட ஜெயா - சசி கும்பல் பெரிதும் நம்பியிருப்பது வேறு சில காரணிகளைத்தான். அக்கும்பலால் கணிசமான தமிழக மக்கள் சாராய போதையில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்; பணத்துக்கும் இலவசங்களுக்கும் பிரியாணிக்கும் பேரம்பேசி ஓட்டுக்களை விற்கக் கூடியவர்களாக கணிசமான தமிழக மக்கள் மாற்றப்பட்டு விட்டார்கள். தாம் கோடிகோடியாகக் குவித்து வைத்திருக்கும் கள்ளப் பணத்தில் இருந்து ஒருபகுதியை வீசியெறிந்து தேர்தல்களில் இவர்களை விலைக்கு வாங்கி விட முடியும் - என்று இச்சீரழிந்த ஓட்டுவங்கியை நம்பித்தான் ஜெயா - சசி கும்பல் இன்னமும் அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறது.

பல்வேறு மாநிலங்களிலும் உள்ள அரசியல்-கிரிமினல் குற்றக்கும்பல்களின் இரகசிய வலை பின்னலைப் பயன்படுத்தி அரசியல், சட்டத்துறை மற்றும் நீதித்துறைகளில் உயர்பதவி வகிப்பவர்களை ஜெயா-சசி கும்பல் விலைக்கு வாங்கிவிட முடியும். கர்நாடகாவிலும் தில்லியிலும் அக்கும்பல் மேற்கொண்ட முயற்சிகளால்தான் விடுதலைத் தீர்ப்பை வாங்க முடிந்தது. இதற்காக நீதிபதி குமாரசாமி மட்டுமல்ல, கர்நாடகாவின் சட்ட அமைச்சர் உட்பட நான்கு மந்திரிகள் மற்றும் கர்நாடகா காங்கிரசின் ஒரு பகுதி நிர்வாகிகளும் ஜெயா-சசி கும்பலுக்குச் சேவை செய்தது இப்போது அம்பலமாகியுள்ளது. இந்த முயற்சியில் இப்போது சிக்கலானாலும், தில்லியிலுள்ள பார்ப்பன அதிகார வர்க்கத்தினரையும், மோடி உட்படத் தனது தனிப்பட்ட நட்புத் தொடர்புகளையும், நாடாளுமன்றத்தில் தனக்குள்ள எம்.பி.க்கள் எண்ணிக்கையையும் வைத்துப் பேரம் பேசி உச்ச நீதிமன்றத்தில் சாதகமான தீர்ப்பை வாங்க முடியும் என்று ஜெயலலிதா நம்பிக்கை வைத்திருக்கிறார். கடைசி முயற்சியாக ஏதாவதொரு வகையில் பொது மன்னிப்புக் கோரி மோடி, பிரணவ முகர்ஜி, தத்து ஆகியோரின்பரிந்துரையின்பேரில் தண்டனையி லிருந்து தப்பிவிடலாம் என்று அவர் நம்புகிறார். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக உச்ச நீதிமன்றத்தை முன்நிறுத்தி அரசியலில் தூய்மை, நீதி, நேர்மை, நியாயம் என்பதாக ஒரு சமூக, அரசியல் மதிப்பீட்டு மாயையை உருவாக்கி வந்துவிட்டு, இப்போது ஒரு பார்ப்பனக் கழிசடையை எப்படியாவது காப்பாற்றி, பதவியில் இருத்தி வைத்துக் கொள்வதற்காக எத்தகைய இழிநிலைக்கும் பார்ப்பன பாசிச சக்திகள் தாழ்ந்து போகும் என்பதையே இது காட்டுகிறது. ''சமுதாயத்தின் வேறு எந்தப் பிரிவினரும் தவறு செய்தால் மன்னிப்பே கிடையாது; கல்வி கற்றால், சாதிமாறி மணம் புரிந்தால் கூட சிரச்சேதம் உட்பட கொடூரமான தண்டனைகள் வழங்கப்படும். பார்ப்பான் கடும் குற்றங்கள் புரிந்தாலும் மொட்டை போடுவது போன்ற பரிகாரங்கள் உண்டு'' - என்ற மனுநீதிதான் நாட்டில் கோலோச்சுகிறது. இந்த உண்மையை நிர்வாணமாக்கிக் காட்டுகிறார், ஜெயலலிதா.

●

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...




கிரிமினல் மருத்துவர்களுக்கு ஓராண்டு மட்டுமே தண்டனை அளித்த தீர்ப்பை எதிர்த்து திருச்சி நீதிமன்ற வளாகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

29.7.2008 அன்று 6 நிமிடத்துக்கு ஒருவர் என்ற வேகத்தில், 66 பேருக்கும் இரண்டே மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்கள். அறுவை சிகிச்சை அரங்கு கிருமி நீக்கம் செய்யப் பட்டிருக்கவில்லை. அறுவை சிகிச் சைக்கு முன் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவை சோதிக்கப்படவே இல்லை. மயக்க மருந்து கொடுத்தவர் களும் தகுதி பெற்ற மருத்துவர்களே அல்ல. 66 பேரும் அன்றே கண் வலியால் துடித்திருக்கிறார்கள். கண்களில் சீழ் பிடித்து தலையே பிளக்கும்படியான வலி யால் துடித்த போதிலும், இரக்கமே இல் லாமல், அவர்களை ஏமாற்றி, ‘‘சொட்டு மருந்து போடுங்கள், சரியாகிவிடும்’’ என்று கூறி அம்மக் களை ஊருக்கு அனுப்பிவிட்டார்கள் இந்த ‘மருத்துவர்கள்’.

வேறு மருத்துவர்களைப் பார்த்த பின்னர்தான் பார்வையே போய்விட்டது என்ற உண்மை அவர்களுக்குத் தெரிய வந்திருக்கிறது.

மனமுடைந்து சிலர் தற்கொலைக்கு முயன்றிருக் கின்றனர். மீண்டும் பெரம்பலூர் மருத்துவமனைக்குச் சென்று நீதி கேட்டிருக்கின்றனர். ‘‘எங்கள் தவறல்ல, கெட்டுப் போன மருந்தை சப்ளை செய்த கம்பெனியின் தவறு. நாங்கள் என்ன செய்ய முடியும்?’’ என்று திமிராகப் பேசியிருக் கிறார்கள் அந்த வெள்ளை உடைக் கிரிமினல்கள். வேறு வழியின்றி அம்மக்கள் சாலை மறியல் செய்த பின்னர்தான், இப்படியொரு அயோக்கியத்தனம் நடந்திருப்பது பத்திரிகை களில் வெளிவந்தது.

பின்னர்தான் மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம், உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத் தரவிடச் செய்தது. அரசு மருத்துவமனையில் சிகிச்சை, ஜோசப் மருத்துவமனையிடமிருந்து இடைக்கால இழப் பீட்டுத் தொகை ஆகியவற்றைப் பெற்றுத் தந்தது. அதன்பின் 8 ஆண்டுகாலப் போராட்டத்துக்குப் பின்னர் பெறப்பட்டிருப் பதுதான் இந்தத் தீர்ப்பு. இடைப்பட்ட காலத்தில் பார்வை யிழந்தவர்களில் 13 பேர் இறந்து விட்டனர். பலர் உழைக்க வழியின்றி முடங்கிவிட்டனர். அப்பாவி மக்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய மருத்துவர்களோ, கிரிமினல் களைப் போலத் தடயங்களை அழிக்கும் முயற்சியில்தான் ஈடுபட்டார்கள்.

6 மருத்துவர்கள் உள்ளிட்டு மொத்தம் 7 பேர் மீது ‘‘தெரிந்தே கொடுங்காயம் விளைவித்தல்’’ (இபிகோ 325) உள்ளிட்டு, அதிகபட்சம் 7 ஆண்டுகள் தண்டனை விதிக்கத் தக்க குற்றப்பிரிவுகளில் சி.பி.ஐ. வழக்கு தொடர்ந்திருந்தது. எனினும், ஏழில் நான்கு பேரை சாட்சிகள் இல்லையெனக் கூறி விடுவித்தது நீதிமன்றம். மற்ற மூன்று பேரைப் பொருத் தவரை, ‘‘நோயாளிகளின் பார்வையைப் பிடுங்கும் உள் நோக்கம் மருத்துவர்களுக்கு இல்லை’’ என்று கூறி, வாகன விபத்துக்கு விதிக்கப்படுவதைப் போல ஒரு ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது நீதிமன்றம். இந்த தீர்ப்பு அநீதியானது என்று மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம், நீதிமன்ற வளாகத்திலேயே ஆர்ப்பாட்டம் நடத்தியது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கண்ணீர் விட்டுக் கதறினர். இந்த தண்டனை யும் கூடாது என்பதுதான் வேலை நிறுத்தம் செய்த மருத்து வர்களின் கோரிக்கை.

இது அறியாமல் செய்த பிழையோ, சிகிச்சையின் போது எதிர்பாராமல் தோன்றிய பிரச்சினையோ அல்ல. பணத்துக் காக தெரிந்தே செய்த குற்றம். எல்லா தனியார் மருத்துவம னைகளும் அன்றாடம் இந்தக் குற்றத்தைச் செய்து தான் கல்லா கட்டுகிறார்கள். தேவையற்ற சோதனை கள், விலையுயர்ந்த மருந்துகள், தேவையற்ற அறுவை சிகிச்சை – என பணத்துக்காக இந்த வெள்ளை உடைக் கிரிமினல்கள் செய்யும் குற்றங் கள், காக்கி உடைக் கிரிமினல்களின் குற்றங்களை விஞ்சக்கூடியவை.

மருத்துவர்களின் அலட்சியம் காரணமாக நோயாளிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டாலும், அதற்காக மருத்துவர்களைக் கைது செய்யக் கூடாது என்ற அநீதியான கோரிக்கையை முன்வைத்து, தனியார் மருத்துவர்கள் நடத்திய போராட்டம்.



ஆனால், மக்களைப் பாதுகாப்பதாக கூறிக் கொள்ளும் அரசு, மருத்துவமனைகளைப் பாதுகாக்க சட்டம் இயற்றுகிறது. அதுவும் போதவில்லை என்று இவர்கள் சமூகத்தை மிரட்டுகிறார்கள். பார்வை பறி போன மக்கள், அன்றைக்கே அங்கேயே இவர் களுக்கு தண்டனையை நிறைவேற்றியிருக்க வேண்டும் என்பதுதான் எட்டாண்டு போராட்டம் கூறும் நீதி.

– அஜித்.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

## ஜெயா நிரபராதியா?

# பார்ப்பனியத்துக்கும் பணத்துக்கும் கைப்பாவையே நீதிமன்றம்! நீதியை நிலைநாட்ட ஒரே வழி மக்கள் அதிகாரம்!!



திருச்சியில்...






சென்னையில்...



தஞ்சையில்...

சொத்துக்குவிப்பு வழக்கில் பார்ப்பன பாசிச ஜெ. கும்பல் விடுதலை செய்யப்பட்டுள்ளதை எதிர்த்தும், பார்ப்பனியத்துக்கும் பணத்துக்கும் விசுவாசமாகச் செயல்படும் நீதித்துறையை அம்பலப்படுத்தியும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

ஊழல் கிரிமினல் குற்றவாளி ஜெயலலிதா, நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டு அவர் மீண்டும் முதல்வராகப் பதவியேற்றுள்ள கேவலத்தை எதிர்த்து எந்தவொரு ஓட்டுக்கட்சியும் மக்களைத் திரட்டிப் போராடக் கூட முன்வராத நிலையில், ''ஊழல் குற்றவாளி ஜெயலலிதா பதவி ஏற்பது தமிழகத்துக்கு அவமானம்! பணத்துக்கும் பார்ப்பனியத்துக்கும் கைப்பாவைதான் நீதித்துறை! கட்டப் பஞ்சாயத்து தீர்ப்பை முறியடிப்போம்! மக்கள் சொத்தைக் கொள்ளையடித்த பாசிச ஜெ.கும்பலின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வோம்! நீதியை நிலைநாட்ட ஒரே வழி மக்கள் அதிகாரம்! நக்சல்பாரி பாதையிலே மக்கள் அதிகாரத்தைப் படைத்திடுவோம்! '' என்ற முழக்கங்கள் விண்ணைப் பிளக்க, புரட்சிகர அமைப்புகளுக்கே உரித்தான போர்க்குணத்துடன் இவ்வார்ப்பாட்டங்கள் தடையை மீறி நடைபெற்றன.